XVI

தைத்ரீயாரண்யகம்

(பத்தாவது ப்ரச்னம்)

1998

தைத்தீயாரண்யகம்

(பத்தாவது ப்ரச்னம்)

TAITTRĪYA ARANYAKA
10TH PRASHNA

உரையாசிரியர் :

ப்ரம்மஸ்ரீ E. பாலஸுப்ரஹ்மண்ய சாஸ்த்ரிகள்,
Retd. Professor (Memamsa) Sanskrit College, Chennai

ஸ்ரீ அ. சுப்பராமன்,
நெ. 9, ஐந்தாவது ஸ்ரீராஸ் தெரு,
கி. ஐ. டி. காலனி, சென்னை-4

1998

முதல் வெளியீடு : மார்ச் 1998
பிரதிகள் : 500

விலை: இலவசம்

அச்சிட்டோர் :
இளங்கோ அச்சுக்கூடம்,
166, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
மயிலாப்பூர், சென்னை-4.
தொ. பே. எ. 499 18 21

சிறப்புரை

டாக்டர் இரா. தியாகராஜன், M.A.Ph.D.,
Prof. & Head of the
Postgraduate and Research Dept. of Sanskrit,
Presidency College, Chennai-600 005.

அறிவின் கருவூலங்களாக விளங்குபவை வேதங்கள். நான்கு வேதங்களுள் யக்ஞங்களுக்கு முக்கியத்துவமளித்து, மானுடத்திற்கு தேவையான இயற்கை வளத்தையும், இறை சக்தியையும் பெறுவதற்காக ஓதப்படும் மந்திரங்களையும் அதற்கான தந்திரங்களையும் தன்னுள் அடக்கியது யஜுர்வேதம். கிருஷ்ண யஜுஸ், சுக்ல யஜுஸ் என்று இவ்வேதம் இரு பிரிவுகளை உடையது. வைசம்பாயனர், யாக்ஞவல்க்யர் இவ்விரு மஹரிஷிகளும், இவ்விரு பிரிவுகளையும் முறையே மானிடர்களின் அக வாழ்வும், புற வாழ்வும் நிறுவி செழிக்க வழி வகுத்தனர்.

பொதுவாக வேதங்களுக்கு பொருள் தெரியாவிட்டாலும், வேத கோஷத்தால் ஏற்படுகின்ற ஒலி அலைகளுக்கே நன்மை பயக்கும் குணம் உண்டு என்பர். இருப்பினும், வேத கர்மாக்களை பொருள் தெரிந்து, இடமறிந்து, காலம் உணர்ந்து

செய்து வந்தால், சிறப்பு பன்மடங்குகளன்றே! ஆகவேதான், தக்க அறிஞர்களைக் கொண்டு, வேதக் கருத்துக்களை, தேவைக்கேற்ப தமிழில் மொழி பெயர்த்து 'க்ருஷ்ண யஜுர்வேத ஸாரம்' என்ற தொகுப்பு இதுவரை 16 பகுதிகளாக வெளி வந்துள்ளது. இவையனைத்தும் இலவச வெளியீடு களாகத் தரப்படுகின்றன.

ஆஹா! எத்தகைய திருப்பணி! இந்தப் பணியை சிரமம் பாராது, சிரத்தையோடு திறம் பட நிறைவேற்றி வரும் ஸ்ரீ அ. சுப்பராமன் அவர் களை, எவ்வளவு பாராட்டினாலும் போதாது. இந்து மதம் தழைக்க, குறிப்பாக வேதங்கள் செழிக்க, இத்தகைய பிரசுரங்கள் பயனுள்ளதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த மாபெரும் சேவையில் பங்கேற்று கவனத்துடனும், ஈடுபாட்டுடனும் வேதங்களில் பொதிந்துள்ள பொருள்களை மொழி பெயர்த்து உதவி புரிந்துள்ள அறிஞர்களான, ப்ரம்மஸ்ரீ E. பாலசுப்ரமண்ய சாஸ்திரிகள், N. V. நடராஜ தீக்ஷிதர், G. R. இராமச்சந்திர சாஸ்திரிகள், L. M. சுப்ரமண்ய கணபாடிகள், K. R. சந்திர சேகர கணபாடிகள், இவர்களுக்கெல்லாம் வைதிக உலகம் நன்றி கூற கடமைப்பட்டுள்ளது.

கிருஷ்ண யஜுர்வேத முதல் காண்டத்தில் தர்சபூர்ணமாச இஷ்டி மந்திரங்களும், ஸோம யாகத்திற்கு வேண்டிய மந்திரங்களும் சொல்லப் படுகின்றன. இவற்றிற்கான ப்ராம்மணங்கள் (விளக்கவுரைகள்) ஆறுவது காண்டத்தில் உள்ள தால், தொடச்சியாக இரண்டாவது நூல், ஆறு வது காண்ட மொழி பெயர்ப்பாக வெளியாகி யுள்ளது. ஸாயணர் பாஷ்யத்தைத் தழுவி, இந்த பகுதியில் ஸோம யாகம், பசு யாகம், ஸோம லதையை பெறுதல் போன்றவைகள் விளக்கப் படுகின்றன.

இத்தொகுப்பின் மூன்றும் புத்தகத்தில், யஜுர் வேதஇரண்டாம் காண்டத்தில்சொல்லப்பட்டுள்ள பலன் கருதி செய்யப்படும் யாகங்களின் விளக்கம் கிடைக்கிறது. இறந்தவர் உயிர் பெறுமளவுக்கு பலன் தரும் மந்திரங்கள் இங்கே விளக்கப்படு கின்றன. நான்காம் புத்தகத்தில், மீண்டும் ஸோமயாகம் பற்றியும், இஷ்ட சித்திக்காக செய் யப்படும் விசேஷங்களும், சில ஸ்மார்த்த கர்மாக் களுக்கான மந்திரங்களும், வாஸ்து மந்திரமும் விளக்கப்பட்டுள்ளன.

ஐந்தாம் புத்தகம் 'காடகம்' என்ற தலைப்பில் யக்ஞங்களின் ச்ரௌத சூத்ரப்படி விளக்கப்பட்டு, காலசக்ரமும் வேதங்களின் உட்பொருள் தெரிந்து, அப்யாஸம் செய்யும் அவசியத்தை விளக்கும் பரத்வாஜ உபாக்யானமும், அதிதி ஸத்காரத்தின்

பெருமை, ஆத்மஞானத்தை விளக்கும் 'நசி கேதனின் கதையும் விளக்கப்படுகின்றன.

ஆறுவது புத்தகத்தில், யாகாதிகளுக்கான உபகரணங்களைப் பற்றியும், துக்கங்களைப் போக்கும் 'ருத்ர ப்ரச்னமும்' ராக்ஷஸர்களை விரட்டும் ஸம்ஸ்காரங்களும், இவ்வுலகில் பொருளும், பரலோகத்தில் அருளும் பெற 'வஸோத்தாரா' போன்ற யாகங்களின் மஹிமையும் கூறப்படுகின்றன.

ஏழாவது 'புத்தகம் சூர்ய நமஸ்கார பாஷ்யம்' ஆகும். 'ஸோலார் எனர்ஜி' என்று விஞ்ஞானிகள் வருணிப்பதற்கு முன்னோடியான 'சூரிய சக்தி' யின் பல்வேறு ஆற்றல்களைப் பெறும் மந்திரங்களின் விளக்கங்கள் இங்கே கிடைக்கின்றன.

எட்டாவது புத்தகம் யஜுர்வேத முதல் அஷ்டகத்தில் உள்ள அனுவாகங்களுக்கு பொருள் தருகின்றது. இங்கே 'ஸோமரஸம்' பற்றிய குறிப்புகளும் இடம் பெறுகின்றன.

ஒன்பதாவது புத்தகம் கிருஷ்ண யஜுர் வேதத்தின் ஐந்தாம் காண்டம் பற்றியது. விசேஷ யாகங்களும் சயன்களும், சிஷ்டிகளும், அச்வமேதம் போன்ற யாகத்தைப் பூர்த்தி செய்யும் முறைகளும் சொல்லப்படுகின்றன.

பத்தாம் புத்தகத்தில், 'ஏழாவது காண்டத்தி லுள்ள சோமயாகம் பற்றியும், இதர யாகங்கள் பற்றியும் விரிவான விளக்கம் உள்ளது.

பதினொன்றும் புத்தகத்தில் 'மூன்றுவது அஷ்டகத்தின்' விபரங்கள், வித்யாரண்ய பாஷ்யத்தின் அடிப்படையில் க்ருஹஸ்த இஷ்டி களும், புருஷ மேதம் போன்றவைகளும் விளக்கப் பட்டுள்ளன.

பனிரெண்டாவது புத்தகம் 'தைத்தீரிய உபநிஷத்' என்ற தலைப்பில், அருண ப்ரச்னத்தில் 7, 8, 9 ப்ரச்னங்கள் விளக்கப்படுகின்றன. இங்கே பல ப்ரயோக மந்திரங்கள் தெளிவுப்படுத்தப் பட்டுள்ளன.

பதின்மூன்றுவது புத்தகத்தில் 'கிருஷ்ண யஜுர்வேதத்தின் இரண்டாவது அஷ்டகம் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அக்னி ஹோத்ரம் போன்ற ஹோம மந்திரங்களுக்கும், ஸௌத்ரா மணி மற்றும் சூக்தங்களுக்கும், இங்கே பொருள் கிடைக்கின்றது.

பதிநான்காவது புத்தகம் 'தைத்தீரிய ஆரண்யகம்' என்ற தலைப்பில் 2,3,6வது ப்ரச்னங் கள் விளக்கப்படுகின்றன. மிகவும் உபயோகமான

அன்றாடம் வைதிக வழி முறைக்கு வழி காட்டக் கூடிய பகுதிகளுக்கு இங்கே உரை எழுதப் பட்டுள்ளது.

என்றும் அழியா 'சனாதன' தர்மத்தைக் காப்பாற்றவும், இந்து தர்மத்திற்கு செழிப்பூட்ட வும், வேதங்களைப் பரப்பவும், ஸ்ரீ A. சுப்பராமன் அவர்களின் பெரும் முயற்சி, நம் அனைவரும் பெற்ற பெரும் பாக்கியம். அவர்தம் பணி, மேன் மேலும் சிறக்க 'வேத புருஷனை' பிரார்த்திக் கிறேன்.

இத்தகைய நற்கருத்துக்களை, வழக்கம் போல் செவ்வனே அச்சிட்டு, இவ்வுலகம் உய்வுற உறுதுணை புரிந்து வரும் 'இளங்கோ அச்சுக் கூடத்திற்கும், அதன் அதிபர் திரு. எம். எஸ். மணி யவனுக்கும் எனது பாராட்டுகள்! இப்பணிக்கு 'பொருள்' தந்த புண்ணியவான்களுக்கும், இதனால் பயன் பெறப் போகும் அறிஞர்களுக்கும் 'வேதமாதா' விழி தந்து வழி காட்டுவாளாக!



பதிப்புரை

'கிருஷ்ண யஜுர்வேத ஸாரம்' முதல் பகுதியின் கையெழுத்து பிரதியை அச்சிட்டு வெளியிடுவதற்காக, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் முன்னிலையில், 14-12-93 அன்று வைக்கப்பட்டு, ஸ்ரீ பெரியவாளின் அனுக்கிரஹம் பெறப் பட்டுள்ளது. ஸ்ரீ பெரியவாளின் அனுக்கிரஹத்தால் க்ருஷ்ண யஜுர்வேதத்தின் 82 ப்ரச்னங்களின் சாராம்ஸத்தை, 16 தொகுப்புகளாகப் பிரித்து வெளியிடப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஸ்ரீ ஜயேந்திரஸரஸ்வதி ஸ்வாமிகளிடத்திலும், ஸ்ரீ விஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளிடத்திலும் அவ்வப்போது அனுக்ரஹமும் கிடைத்துக் கொண்டிருந்தது.

ஸ்ரீ பெரியவாளின் பரிபூர்ணமான அனுக்கிரஹம் கிடைத்ததால்தான், இந்த மிகப் பெரிய காரியம் தடைகள் இல்லாமல் நிறைவேறியுள்ளது. ஸ்ரீபெரியவாள் மூவருக்கும் எனது பக்தி பூர்வமான நமஸ்காரங்களை சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

க்ருதக்ஞதை

16 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ள இந்த கிருஷ்ண யஜுர் வேதத்தின் ஸாரத்தை எழுதி, சரிபார்த்து கொடுத்துள்ள பண்டிதர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த க்ருதக்ஞதையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பண்டிதர்களின் பெயரும் விபரமும் :

ப்ரம்மஸ்ரீ E. பாலசுப்ரமண்ய சாஸ்த்ரிகள்,
(Mimamsa Prof. (Retd.) Chennai Sanskrit College)

இவர், ஸம்ஹிதை ஏழு காண்டங்களுக்கும், அருணத்தில் இரண்டாவது, மூன்றுவது, ஆறுவது, பத்தாவது ப்ரச்னங்களுடைய ஸாரத்தையும் எழுதியுள்ளார்.

ப்ரம்மஸ்ரீ N. V. நடராஜ தீக்ஷிதர், நங்கவரம்,

இவர், காடகம் அருணம் நான்காவது, ஐந்தாவது ப்ரச்னங்களின் ஸாரத்தை எழுதியுள்ளார்.

ப்ரம்மஸ்ரீ G. R. ராமச்சந்திர சாஸ்த்ரிகள்,
கும்பகோணம்.

இவர், அருணம் முதல் ப்ரச்னத்தையும் தைத்ரீயோபநிஷத் ப்ரச்னங்களின் ஸாரத்தையும் எழுதியுள்ளார்.

ப்ரம்மஸ்ரீ L.M. சுப்ரமண்ய கணபாடிகள், காஞ்சீபுரம்

இவர், முதலாவது இரண்டாவது அஷ்டகங்களின் ஸாரத்தை எழுதியுள்ளார்.

ப்ரம்மஸ்ரீ K, R. சந்திரசேகர கணபாடிகள்,
திருவிடைமருதூர்.

இவர், மூன்றுவது அஷ்டகத்தின் ஸாரத்தை எழுதியுள்ளார்.

இவர்கள் ஒவ்வொருவரும் இந்த பாரசுரங்கள் வெளியிடுவதற்கு மிகுந்த சிரத்தையுடன் செய்

திருக்கும் இந்த கார்யம், ஆஸ்திக உலகுக்கு செய்த மிகப்பெரும் தொண்டாகும்.

தர்மம் செய்தவர்கள் :

ஆஸ்திக பெரியோர்களும், தொழில் அதிபர்களும், டிரஸ்ட் நிர்வாகத்தினர்களும், தனவந்தர்களும், இந்த பிரசுரங்கள் வெளிவருவதற்கு மிகுந்த பணம் உதவி புரிந்துள்ளார்கள். இன்னும் சிலர், புத்தகத்தின் பின் அட்டையில் விளம்பரம் கொடுத்து உதவியிருக்கிறார்கள். இவர்களின் உதவியினால்தான் இந்த நூல்கள் வெளியிடுவதற்கு மிகவும் உதவியாக இருந்தது. இந்த மிகப் பெரும் தர்ம கார்யத்தை செய்துள்ள அனைவக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீமான் விளாப்பாக்கம் மார்க்கபந்து கணபதி அவர்கள்

இந்த நூல்கள் அனைத்தும் வெளிவருவதற்கு வேண்டிய விஷயங்களை தயாரிப்பதற்கும், கையெழுத்து பிரதிகளை சரிபார்ப்பதற்கும், சில பண்டிதர்களின் ஆலோசனையைப் பெறுவதற்கும் மிகுந்த சிரமம் எடுத்துக் கொண்டு, அது தன்னுடைய கடமை என்றே எண்ணி செயல் பட்டதோடல்லாமல், அச்சிடுவதற்கு பிழை திருத்தங்கள் செய்து கொடுத்து, உதவி புரிந்துள்ள ஸ்ரீமான் கணபதி அவர்களுக்கு, ஸ்ரீ பெரியவாளின் பரிபூர்ண அனுக்ரஹம் கிடைக்க

வேண்டும் என்று ப்ரார்த்தித்துக் கொண்டு, எனது மன பூர்வமான க்ருதக்ஞதையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்நூலுக்கு சிறப்புரை தந்து, இந்த 16 தொகுப்புகளின் சிறப்பு அம்ஸம்களைப் பற்றியும், அதன் பயன்களைப் பற்றி சுருக்கமாகவும், மிக தெளிவாகவும் எடுத்துரைத்து, இந்நூலை மேலும் சிறப்புடையதாக செய்திருக்கிறார், சென்னை மாநிலக் கல்லூரி வடமொழி பேராசிரியர் Dr. R. தியாகராஜன் அவர்கள். அவருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இளங்கோ அச்சுக்கூடம்

சம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் ஸ்வரத்துடன் கூட அச்சிட்டு கொடுக்கின்ற மிக சிறப்பான அச்சகம் இளங்கோ அச்சுக்கூடம் தான் என்பதில் சந்தேகமில்லை. இந்த ஸாரங்கள் 16 தொகுப்புகளும், விவாஹம் 3 பாகங்களும் இங்குதான் அச்சிடப்பட்டுள்ளன. வேத அத்யயன சபா மூலம் வெளியிடப்படும் நூல்களும் இங்குதான் அச்சிடப்படுகின்றன. இளங்கோ அச்சுக்கூடம் ஸ்ரீ எம். எஸ். மணியவன் அவர்களுக்கு எல்லாம் வல்ல இறைவனின் அருளும், ஸ்ரீ பெரியவாளின் அனுக்ரஹமும் கிடைக்க வேண்டும் என்று ப்ரார்த்தித்துக் கொண்டு, மனம் நிறைந்த நன்றியை அவருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

A. சுப்பராமன்

தைத்ரீயாரண்யகம்

(பத்தாவது ப்ரச்னம்)

आरण्यके दशमः प्रश्नः।

இந்த ப்ரச்னத்தில் பல மஹாமந்திரங்கள் உள்ளன. விரஜா ஹோம மந்திரங்கள், வைச்வதேவ மந்திரங்கள், ஸ்ரஷ்டீ மந்திரங்கள், துர்க்கா ஸூக்தம், அகமர்ஷண மந்திரங்கள், பல தேவதா காயத்ரீ மந்திரங்கள், ம்ருத்யு ஸூக்தம், மேதா ஸூக்தம், ஸந்தியாவந்தன மந்திரங்கள், ப்ராணாக்னிஹோம மந்திரங்கள், सद्योजातादि ஐந்து மந்திரங்கள், உத்தரநாராயணம், பாபஹரண மந்திரங்கள், திலஹோம மந்திரங்கள் போன்ற பல மஹா மந்திரங்கள் அடங்கியுள்ளது. கடைசியில் उपासना स्वरूपं சொல்லப்பட்டு, மோக்ஷத்தையடைய ஸன்யாஸமே மிகச் சிறந்தது என எடுத்துக் கூறும் வேத வாக்யங்கள் உள்ளன. நமது செயல்களே பெரிய யக்ஞமாக உருவகப்படுத்தி தெளிவு படுத்தப்பட்டுள்ளன.

अनुवाकः—१ अम्भस्य पारे।

இதில் பரப்ரஹ்மத்தின் மஹிமை கூறப்படுகிறது. अम्भस्य பெரிய ஸமுத்ரத்திற்கு அப்பால்

இருக்கும் லோகாலோக பர்வதத்தை விட பெரியது பரப்ரஹ்மம். பூலோகத்தில் மிகப் பெரிய மேரு மலை இருக்கிறது. அதைவிட பெரியது ப்ரஹ்ம ஸ்வரூபம். ஸ்வர்கத்திற்கு மேலே இருக்கும் ப்ரஹ்மலோகத்தைவிட பெரியது. அப்படிப்பட்ட பரமாத்மா ஜீவ சைதன்ய ரூபத்தில் அந்த கரணத்தில் ப்ரவேசித்தார். ப்ரஹ்மாண்டத்தில் ப்ரஜாபதியான அவர் விராட் ரூபத்தில் சஞ்சரிக்கிறார். இந்த உலகம், அந்த அவ்யாக்ருத ப்ரஹ்ம ஸ்வரூபத்திலிருந்து ப்ரளயத்தில், அதிலேயே மறைகிறது. हिरण्यगर्भः விராட்புருஷன் போன்ற எல்லா தேவர்களும் அதில்தான் இருக்கிறார்கள். அந்த பரமாத்மாதான் முக்காலத்திலும் உள்ள ப்ரபஞ்சமாக இருக்கிறார். அந்த அவ்யாக்ருத ப்ரஹ்மம் அழிவற்ற பரமாத்ம ஸ்வரூபத்தில் இருகிறது. அந்த பரமாத்ம ஸ்வரூபம் முவ்வுலகத்தையும் வ்யாபித்துக் கொண்டிருக்கிறது. அவருடைய ஒளியால்தான் சூரியன் ப்ரகாசிக்கிறான்.

வேதாந்திகள், ஜகத்தின் ஒவ்வொரு வஸ்துவோடும், அந்த பரமாத்மா பிரிக்க முடியாதபடி ஊடுருவி இருக்கிறார் என்று கூறுகிறார்கள். அந்த பரமாத்மா தன்னுடைய உண்மையான ஸ்வரூபத்தில் இருந்து கொண்டு ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்கிறார். அவ்யாக்ருத ப்ரஹ்மத்தினிடமிருந்து தான் ஜகத் உண்டாயிற்று. பூமியில் அவர்தான் பஞ்ச

பூதாத்மகமான ஜீவ ராசிகளை ஸ்ருஷ்டித்தார். அந்த மாயையோடு கூடின சைதன்யம், செடிகள், மனிதர்கள் போன்ற தாவர ஜங்கம சரீரங்களுள் ப்ரவேசித்துள்ளது. பரப்ரஹ்ம ஸ்வரூபம் சிறிய வஸ்துவை விட ஸூக்ஷ்மமானது. ஹிரண்ய கர்பாதிகளைவிட உத்க்ருஷ்டமானது. ஆகாசம் போன்ற மஹா பூதங்களை விட பெரியது. இந்திரி யங்களுக்கு அப்பாற்பட்டது. தேசத்தினுலோ காலத்தினுலோ அளவிட முடியாதது. ஸர்வ ப்ர பஞ்ச ரூபமாக இருக்கிறது. அனுதியானது, அஞா னத்திற்கு அப்பாற்பட்டது.

அந்த பரமாத்மாதான் உண்மையானது. எல்லா வஸ்துக்களுக்கும் அதிஷ்டானமாக இருக் கும் வஸ்து பரமாத்மாதான். வேதஸ்வரூப மாகவும், அதுவே உள்ளது. யாகயக்ஞங்கள், குளம் வெட்டுதல் போன்ற பூர்த்த தர்மங்களாக இருப்பதும் அந்த பரமாத்மாதான். மூக்காலத் திலும் ஜகத்தை அவர்தான் தாங்குகிறார். அக்னி, வாயு, சூரியன், சந்திரன், நக்ஷத்ரங்கள், அமருதம பஞ்சபூதங்கள் போன்ற வடிவங்களும் பரப்ரஹ்ம ஸ்வரூபம்தான். விராட்புருஷராக இருப்பவரும் அவரே. ஸ்வயம்ப்ரகாச ஸ்வரூபியான அந்த பரமாத்மாவிடம் இருந்துதான் எல்லாவிதமான காலங்களும் அதாவது, கண் இமைப் பொழுது ஒரு நொடி, நிமிஷம், முகூர்த்தம் (2 நாழிகை) பகல், இரவு, பக்ஷங்கள், (15 நாட்கள்) மாதங்கள், ருதுக்கள், வருடங்கள் ஆகியவை உண்

டாயின. ருதுக்களை அனுசரித்து பூமியில் போக்ய வஸ்துக்களை ஸ்ருஷ்டித்தார்.

இதுபோலவே அந்தரிக்ஷத்திலும், ஸ்வர்க்கத்திலும போக்யவஸ்துக்களை தயாரித்தார். எல்லா வஸ்துக்களிலும் ப்ரவேசித்து வ்யாபித்துக் கொண்டிருக்கும் பரமாத்ம ஸ்வரூபத்தை, எல்லோரும் காணபதில்லை. ஏனெனில் தூண்களை போல் மேல் நோக்கிய உருவமம கிடையாது. பிராணிகள் போல் குறுக்கான உருவமும கிடையாது. மனிதன் போல் நெடுக்காகவும், குறுக்காகவும் இல்லாத நடுத்தர உருவமும் கிடையாது. அவருக்கு ஒருவரும் இப்படி இரு என்று பெயர் சூட்ட முடியாது. அவருக்கு ரூப மில்லாததால் கணணுல ஒருவரும் பரமாதமாவை பார்க்க முடியாது. ஒரே நிலையில் மனத்தை நிறுத்தினுல் தான அவரைக் காணமுடியும். அப்படிக் காணபவர் அமரத்வம அடைகிறார்கள். பிறப்பு இறப்பற்று மோக்ஷத்தை அடைகிறார்கள்.

ஹிரண்யகர்ப்பர் போன்றவர்கள் பரமாத்மாவை காண்பிப்பவர்கள். ஞானிகளால். அனுபவிக்கப்படும் ஸ்வப்ரகாசமான பரமாத்மா திக்குகளிலும் வியாபித்திருக்கிறர். ஸ்ருஷ்டியின் ஆதியில் ஹிரண்யகர்ப்பராக இருக்கிறர். ப்ரஹ்மாண்டத்தினுள் வசிக்கிறர். அவர் தேவர்கள், மனிதர்கள், பசுக்கள் போன்ற உருவத்தில் இன்று உண்டாகியிருக்கிறர். இனிமேல் எதிர்காலத்தில்

உண்டாகப் போகிறார். அவர்தான் அன்னமயாதி கோசங்களுக்குள் இருந்து கொண்டு சரீரம், கண் போன்ற புலன்கள் எல்லாவற்றிற்கும் ஆதாரமாக இருக்கிறார். அவருக்கு எங்கும் கண்கள், எங்கும் முகங்கள், எங்கும் கைகள், கால்கள் உள்ளன. ஜகத்திற்கு அதிஷ்டானமாக இருக்கிறார் என்பது கருத்து. அவர் கைகள் போன்ற தர்மாதர்மங்கள் மூலம் ஸர்வஜகத்தையும் வசப்படுத்துகிறார். பஞ்ச பூதங்களால் உலகம் முழுவதையும் ஸ்ருஷ்டித்து த்யாவாப்ருத்விக்களையும் ஸ்ருஷ்டித்து தான் ஒருவராகவே இருக்கிறார்.

வேனன் என்ற கந்தர்வன் எல்லா இடத்திலும் வ்யாபித்திருக்கும் பரப்ரஹ்ம ஸ்வரூபத்தை அறிந்தவனாக இருந்துக்கொண்டு, தனது சிஷ்யர்களுக்கு உபதேசித்தான். அந்த பரம்பொருளில் உலகமே அடங்கியிருக்கிறது. ஆத்ம ஸாக்ஷாத்காரம் பெற்றதனால் வேனன் எல்லா உலகத்தையும் அறிகிறான். அந்த பரமாத்மாவினிடத்தில் தான், ஜகத் உண்டாகி லயத்தை அடைகிறது. பரமாத்மாவானவர் உலகத்தோடு உடையில் உள்ள குறுக்கு, நெடுக்கு நூல்போல் ஊடுருவி பிரிக்க முடியாமல் இருக்கிறார். எல்லோரிடத்திலும் அடங்கியுள்ள விழிப்பு, ஸ்வப்னம், தூக்கம் என்ற நிலைகளையும் அறிந்து அதன் அதிஷ்டானம் ப்ரஹ்மமே என வேனன் அறிந்தார். ஆகையால் அவர் தனது தந்தையுள்பட எல்லோருக்கும் தந்தையாவார்.

பரப்ரஹ்ம ஸ்வரூபம்தான் எல்லாவற்றையும் உற்பத்தி செய்பவர். அவரே எல்லோருக்கும் பந்து (உறவினர்). ஜகத்தின் நிர்மாணம் செய்து எல்லாவிதமான புண்ய லோகங்கள், பாப லோகங்கள் இவைகளை அறிந்தவர். புண்ய லோகமான ஸ்வர்க்கத்தில் தேவர்கள் அம்ருத பானம் செய்து சுகமாக இருக்கிறார்கள். அவரவர் கள் கர்மாவின்படி பலனை கொடுப்பவர் பரம் பொருளே. ப்ரஹ்மஞானிகள் ப்ரபஞ்சத்தையே ப்ரஹ்ம ஸ்வரூபமாக பார்த்து ப்ரஜைகளுள் ப்ரஹ்ம ஸ்வரூபத்தையே அடைந்தனர். அழிவில் லாத பரம்பொருளான பரமாத்மா மூதலில் ஹிரண்யகர்பரான ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்து அவர் மூலம் ஜகத்தை ஸ்ருஷ்டி செய்தார். பிறகு எங்கும் தானே வ்யாபித்துக் கொண்டு ப்ராணி களை ரக்ஷித்து கடைசியில் லயிக்கச் செய்கிறார். அப்படிப்பட்ட பரப்ரஹ்ம ஸ்வரூபத்தை அடைய உபாயங்கள் சொல்லப்படுகிறது. ஸர்வ ஜகத்திற் கும் அந்தர்யாமியான பரமாத்மாவை நான் அடைந் தேன். பரமாத்மாவின் ஸ்வரூபம் அற்புதமானது. இந்திரனுக்கு ப்ரியமானது. எல்லோராலும் விரும்பத் தகுந்தது. கர்மாவின் பலனை அளிப் பவரும் அவரே. மேதாவிலாஸத்தை யளிப்பவரும் அவரே. அவரை த்யானத்தின் மூலம் நான் அடைந்தேன்.

उद्दीप्यस्व பொருள்: ஹே ஜாடராக்னியே! எனது பாபங்களை அழித்து ப்ரகாசிப்பாயாக. மேலும்,

ஆடு, மாடுகள் போன்ற போக்ய வஸ்துக்களையும் அதை அனுபவிக்க தீர்க்காயுஸ்ஸையும் ஸுகமாக வஸிப்பதற்காக திசைகளையும் எனக்கு அளிப்பா யாக. அவ்வாறு அளிக்கப்பட்ட கோ முதலியவை களை அழிக்காமல் காப்பாற்றுவீராக. ஹே அக்னியே! எனது தவறுகளை மனதில் கொள் ளாமல் என்னை அனுக்ரஹிக்க வருவீராக. மேலும் தனதான்யாதி ஸம்பத்தால் என்னை நிரப்புவீராக.

பல தேவதைகளைக் குறிப்பிடும் காயத்ரீ மந்திரங்கள் கூறப்படுகின்றன. ருத்ரமூர்த்தி யானவர் 1000கணக்கான கண்கள் உடைய விராட் ஸ்வரூபீ. அப்படிப்பட்ட மஹாதேவரை அறி கிறோம். மேலும் அவரை தியானிக்கிறோம். அவர் ருத்ரரூபியாக இருந்துகொண்டு அவரை தியானிக்கும் விஷயத்தில் எங்களை தூண்டி விடட்டும்.

ஆகமங்களில் ப்ரஸித்தரான மஹாதேவரை அறிவோம், தியானிப்போம். ருத்ரதேவர், அவரை தியானிப்பதில் எங்களை தூண்டி விடட்டும். வளைந்த துதி கை உடைய மஹாகணபதியை அறிவோம். அவரை தியானிப்போம். அப்படிப் பட்ட மஹாகணபதி, அவரை தியானிப்ப தற்காக எங்களை தூண்டி விடட்டும்.

நந்திகேச்வர காயத்ரீ : பரமசிவனின் வாஹன மான நந்திகேச்வரரை தியானிக்கிறோம். சக்கரம்

போல் மூக்குடைய நந்திகேச்வரரை தியானிக்கிறோம். அவர், அவரை தியானிக்கும்படி எங்களை தூண்டட்டும்.

தேவஸேனைக்கு நாயகனான ஷண்முகனை அறிகிறோம். அவரை த்யானிக்கிறோம். அந்த ஷண்முகர் எங்களை தியான விஷயத்தில் தூண்டட்டும்.

கருட காயத்ரீ : தங்கமயமான இறக்கைகளை உடைய கருட பகவானை தியானிக்கிறோம். அவரை அறிகிறோம். அப்படிப்பட்ட கருட பகவான் அவரை தியானிக்கும்படி எங்களை தூண்டட்டும்.

ப்ரஹ்ம காயத்ரீ : புண்யா புண்ய கர்மாக்களில் எங்களைத் தூண்டும் பரமாத்ம ஸ்வரூபத்தை அறிவோம். வேத ஸ்வரூபியாயும், ஹிரண்ய கர்ப்ப ஸ்வரூபியுமான அந்த பரமாத்மாவை தியானிக்கிறோம். அகண்டம் ப்ரஹ்மமே நான் தான் என தியானிக்கிறோம்.

விஷ்ணு காயத்ரீ : பக்தர்களுக்கு உறைவிடமாயும், வஸுதேவரின் புத்ரருமான கிருஷ்ண பரமாத்மாவை அறிகிறோம். அவரை தியானிக்கிறோம். அவர் எங்களை தியானிக்கும்படி தூண்டட்டும்.

நரஸிம்ஹ காயத்ரீ : வஜ்ரம் போன்ற உறுதியான நகங்களையுடையவரும், கூர்மையான கடை

வாய் பற்களை உடையவருமான நரஸிம்ஹ ஸ்வரூபத்தை அறிகிறோம், தியானிக்கிறோம். அப்படிப்பட்ட நரஸிம்ஹ மூர்த்தி, அவரை தியானிக்கும்படி எங்களை தூண்டட்டும்.

சூர்ய காயத்ரீ ; பூமிக்கு பிரகாசம் அளிப்பவரும், மூவுலகிலும் பிரகாசத்தை அளிப்பவரும், அதிதியின் புத்ரருமான சூரியமூர்த்தியை அறிகிறோம். தியானிக்கிறோம். அவர், அவரை தியானிக்கும்படி எங்களை தூண்டட்டும்.

அக்னி காயத்ரீ : ஹவிர்பாகத்தை தேவதைகளுக்கு எடுத்துச் செல்பவர் அக்னிபகவான். அவர் எல்லா மனிதர்களுக்கும் ஹிதத்தை செய்பவர். தன்னைச் சேர்ந்தவர்களோடு விளையாடுபவர். அம்படிப்பட்ட அக்னியை அறிகிறோம். அவரை தியானிக்கிறோம். அந்த அக்னி பகவான் அவரை தியானிக்கும்படி எங்களை தூண்டட்டும்.

சக்திகாயத்ரீ : தந்தையான ஹிமவானுக்கு போகத்தையும், மோக்ஷித்தையும் அளிக்கின்ற கன்யையும், குமாரியுமாக இருக்கின்ற, ஸாக்ஷாத் ராஜராஜேஸ்வரி என்ற அம்பாள் ஸ்வரூபத்தை அறிகின்றோம் தியானிக்கின்றோம். எப்படிப்பட்ட ராக்ஷஸர்களாலும் அணுக முடியாத துர்க்கா தேவி, அவளை தியானிக்கும்படி எங்களை, தூண்டட்டும்.

सहस्रपरमा :— தூர்வா என்கிற அருகம்புல்லை நோக்கி சொல்ல வேண்டிய மந்திரம். அருகம் புல்லுக்கு அபிமானி தேவதை தூர்வா தேவி. இந்த அருகம்புல் ஆயிரக்கணக்கான சுத்தி செய்யவல்ல த்ரவ்யங்களைவிட சிறந்தது. பளபளவென்று பிரகாசமானது. நூற்றுக்கணக் கான வேர்களையும், முளைகளையும் உடையது. அருகம்புல்லின் அபிமானி தேவதை தூர்வாதேவி கெட்ட ஸ்வப்னத்தின் பலன்களை அழிக்க வல்லது. அப்படிப்பட்ட தூர்வாபிமானி தேவதை, எனது எல்லா பாபங்களையும் போக்கடிக்கட்டும்.

ஹே தூர்வையே! (பாபத்தை போக்குபவளே) ஒவ்வொரு வேரிலிருந்தும், கணுவிலிருந்தும் முளைக்கும் தூர்வையே! (அருகம்புல்) புத்திராதி களால் எல்லோரிலும் சிறந்தவனாக ஆகும்படி என்னை விஸ்தரிப்பாயாக. ஹே தூர்வையே! பக்தர்களால் துதிக்கப்படுபவள் நீ. நூற்றுக் கணக்காக முளைக்கிறாய். அப்படிப்பட்ட தேவியே! உனக்கு ஹவிஸ் அளிப்பதன் மூலம் ஸேவை செய்கிறோம்.

மண்ணைப் பார்த்து சொல்ல வேண்டிய மந்திரம்

अश्वकान्त சயனத்தில் பாத்திரம் தயாரிக்கும் பொருட்டு மண் கொண்டுவர வேண்டும். மண் எடுக்கும் இடத்தை குதிரை சுற்றிவர வேண்டும். அந்த பூமி சுத்தமானது. அது போலவே, ரதம் சென்ற பாதை சுத்தமானது. விஷ்ணுவினால்

த்ரிவிக்ரமாவதாரத்தில் பூமி அளக்கப்பட்டது. அப்படிப்பட்ட சுத்தமான பூமியே! செல்வத்தின் இருப்பிடமே! உன்னை ஸ்னானம் செய்யும் பொழுது எனது சிரஸ்ஸால் தரிக்கிறேன். என்னை அடி தோறும் ரக்ஷிப்பாயாக.

भूमि: ஹே ம்ருத்திகையே! ப்ரளயத்தில் ஜலத்தில் லயித்த நீ, நூற்றுக்கணக்கான கைகள் கொண்ட வராஹ அவதாரத்தினால், ஜலத்திலிருந்து மேலே கொண்டு வரப்பட்டாய். கறவைப் பசு போல் எல்லோரையும் சந்தோஷப்படுத்துகிறாய். பயிர்களை சுமக்கிறாய். ப்ராணிகளையும் சுமக்கிறாய்.

मृत्तिके हनं मे— ஹே சிறந்த ம்ருத்திகையே! நான் செய்த பாபங்களை அழிப்பாயாக. நீ, பரமாத்மாவால் ஸ்ருஷ்டிக்கப்பட்டவள். காச்யபர் என்ற முனிவரால் அபிமந்தரணம் செய்யப்பட்டவள்.

ஹே ம்ருத்திகையே! உன்னிடத்தில் ஜலம் முதலியவை ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. ஆகையால் நீ, எனக்கு புஷ்டியை கொடுப்பாயாக. எல்லாப் ப்ராணிகளுக்கும் இருப்பிடமான நீ, எனது எல்லா பாபங்களையும் அழிப்பாயாக. அவ்வாறு எனது பாபங்கள் அழிக்கப்பட்டால், நான் மேலான கதியை (மோக்ஷத்தை) அடைவேன்.

இந்திரனிடம் பிரார்த்தனை (இது ஸ்மார்த்தத்தில் உபயோகமுள்ளது) (मतइन्द्र) ஹே இந்திரனே!

நாங்கள் பாபமாகிற சத்ருவினிடமிருந்து பயப்படுகிறோம். அதிலிருந்து எங்களுக்கு அபயமளித்து காப்பாயாக. பாபம் நீங்கி, சத்ரு அற்றவர்களாக ஆகி, நரகத்தை அடையாதவர்களாக ஆவோம். மேலும் பாபம் முதலியவற்றை அழிப்பாயாக. உனதுபக்தர்களான எங்களை காப்பாற்ற, உள்ளும் வெளியிலும் உள்ள சத்ருக்களை ஸம்ஹரிப்பாயாக. நசிக்கி அடியோடு சத்ருக்களை அழித்து விடு. ஸ்ஞனத்திற்கு தயாரான எங்கள் முன்பு, இந்திரன் தோன்றி காப்பாற்றட்டும். இந்திரன் இவ்வுலக சுகத்தை கொடுப்பவர். ப்ரஜைகளை காப்பாற்றுபவர். வ்ருத்ராஸுரனை கொன்றவர். சத்ருக்களை வசப்படுத்துபவர். பூமிக்கு மழையை கொடுப்பவர். பரலோக சுகத்தை அளிப்பவர். எல்லா விதமான பயத்தையும் நீக்கி, அபயம் அளிப்பவர்.

பிறகு, ஸ்ஞனத்தின்போது முதலை முதலிய ஜந்துக்களால் உபத்ரவம் வராமலிருக்க, இந்திராதி தேவதைகளிடம் ப்ரார்த்தனை செய்யப்படுகிறது.

स्वस्तिन: புகழ்பெற்ற இந்திரன் நமக்கு மங்களத்தை அளிக்கட்டும். பூஷ தேவதை நிறைய அறிந்தவர். அவர் நமக்கு மங்களத்தை அளிக்கட்டும். சத்ருக்களால் தடுக்க முடியாத கதியையுடைய கருடபகவான், நமக்கு நன்மை அளிக்கட்டும். ப்ருஹஸ்பதி பகவான் நமக்கு மங்களத்தை

கொடுக்கட்டும். கோபமுள்ளவரும், சந்திரகாந்திகல் போன்ற காந்தியுள்ளவரும், வஸந்தனுக்கு ப்ரியமானவரும், ஸௌக்கியமானவரும், வஹ்நி இலையையுடையவரும், மிகவும் பிரகாசமாக விளங்குபவரும், செடி கொடிகளை வளர்க்கும் சந்திரனுக்கு நிகரான இந்திரனும் எங்களை காப்பாற்றட்டும்.

பிறகு பரமாத்மாவை ப்ரார்த்திக்கும் முறை கூறப்படுகிறது.

பரமாத்மா நன்கு சோபிக்கின்ற முவுலகங்களையும், தனது ஸ்வயம்ப்ரகாசத்தால் ப்ரகாசப்படுத்தினர். பரமாத்மா எல்லோருக்கும் ஆதியானவர், முதலில் ஹிரண்யகர்ப்பராக உணரப்பட்டவர். அழகானவர். இடவசதியுள்ள உலகில் பலவித ஸ்தானமாக அமைந்துள்ளதும், குடம், மரம் போன்றவைகளுக்கும், வாயு முதலிய அமூர்த்தங்களுக்கும் காரணமாயுள்ள திசைகளை பரமாத்மா நன்கு பிரகாசிக்கச் செய்தார்.

ம்ருத்திகையின் ப்ரார்த்தனை கூறப்படுகிறது. ஸுஸார் வாசனையின் மூலம் அறியத் தகுந்ததும், மண்வெட்டிகளால் அசைக்க முடியாததும், எப்பொழுதும் பயிர்களாலும், கிராமங்களாலும் நிறைந்து காணப்படுகிறதும், விவாசாயிகளால் உழப்பட்டதும், பசுக்கள் நிறைந்ததும், கோமயத்தோடு கூடியதும், எல்லா பஞ்ச பூதங்களான ப்ராணிகளுக்கு ஈச்வரியுமான பூமி தேவதையை; இந்த ஸ்ஞன கர்மாவில் ஸமீபத்தில் வரும்படி

அழைக்கிறேன். இவ்வாறு சொல்லி ம்ருத்
கையை உடலில் தேய்த்துக் கொண்டு, ஸ்னான
திற்கு ஜலத்தில் இறங்கும் பொழுது சொல்
வேண்டிய மந்திரம். श्रीश्चते என்ன அஷ்டலக்ஷ்மி
கள் வந்தடையட்டும், எனது அலக்ஷ்மீகரம் வில
கட்டும். விஷ்ணு முதலிய தேவர்கள் வேதவிஹி
மான உபாயங்களால் 14 உலகங்களையும் ராக்ஷ
ஸர்கள் ஆக்ரமிக்க முடியாமல் இருக்கும்படி ஜயித்
தனர். அவர்கள் நமது இஷ்டங்களை பூர்த்தி
செய்யட்டும். மஹாநான வஜ்ராயுதம் கையி
லேந்திய இந்திரனும் எங்களுக்கு சுகத்தை
அளிக்கட்டும். இந்திரன் எங்களுடைய பாபமா
கின்ற சத்ருவை அழித்து, எங்களுக்கு மங்
களத்தை கொடுக்கட்டும். ஹே பரமாத்மாவே!
என்ன ஸ்வரத்துடன் வேதாத்யயனம் செய்து
ஸோமயாகம் செய்பவனாக செய். ककुभीवान்
என்ற ரிஷி, எனது சரீரத்தை யக்ஞயோக்யமாகச்
செய்யட்டும். எனது சத்ரு நரகத்தில் இருக்
கட்டும்.

பிறகு ஜலத்தில் இறங்கி சொல்ல வேண்டிய
மந்திரங்கள் கூறப்படுகின்றன. चरण पवित्रं ।

இதன் மூலம் விஷ்ணுவின் பாதங்கள்
துதிக்கப்படுகின்றன. விஷ்ணுவின் பாதம் மிகவும்
பவித்ரமானது. (சுத்தமானது) மூவுலகையும்
வ்யாபித்தது. தொன்மையானது. அப்படிப்பட்ட

பாதஸ்பர்சத்தால் பாபங்கள் அழிக்கின்றன. அந்த சுத்தமான பாதத்தால் சுத்தர்களான நாங்கள் நரக ஹேதுவான பாபத்திலிருந்து விடுபடுவோம்.

ஹே வ்ருத்தாஸுரனைக் கொன்றவனும்: சூரனும், ஸர்வக்ஞனுகவும் உள்ள இந்திரனே, எங்கள் யாகங்களில் மருத் கணங்களுடன் வந்து ஸோம ரஸத்தை ஏற்றுக் கொள்வாயாக. எங்கள் சத்ருக்களையும், யுத்தத்தையும் அழிப்பாயாக. எல்லாவிதத்திலும் எங்களுக்கு அபயம் அளிப்பாயாக.

இடுப்பளவு ஜலத்தில் நின்று கொண்டு சொல்ல வேண்டிய மந்திரம்:

ஸிந்தா— ஜலங்களும், ஓஷதிகளும் எங்களுக்கு நண்பர்களாக இருக்கட்டும். எங்கள் சத்ருக்களுக்கு எதிரிகளாக ஆகட்டும். எதிரிகளுக்கு துன்பத்தை அளிக்கட்டும்.

आपोहिष्ठा मयोभुवः.....प्रजयतन ।

ஓ ஜல தேவதைகளே! நீங்கள் சுகத்தைக் கொடுப்பவர்கள். எங்களுக்கு அன்னத்தைக் கொடுங்கள். பெரிய அழகிய அறிவைக் கொடுங்கள். எங்களுக்கு இவ்வுலகில் சுகத்தைக் கொடுக்க கூடிய ஜலத்திலுள்ள உயர்ந்த ரஸத்தை அளியுங்கள். தாயார் எவ்வாறு தன்னுடைய குழந்தை

களுக்கு ரஸத்தைக் கொடுக்கிறாளோ, அது போல் எங்களுக்கு உன்னுடைய ரஸத்தை அளிப்பாயாக. எந்த ரஸத்தால் (எங்களுடைய) கிரஹத்தில் ப்ரீதியை உண்டு பண்ணுகிறீர்களோ, எந்த ரஸத்தால் புத்ரன் முதலிய ப்ரஜைகளை எங்களுக்கு உண்டு பண்ணுகிறீர்களோ, அந்த ரஸத்தை நாங்கள் வேண்டிய அளவு அடையவேண்டும்.

தங்கமயமான மகுடத்தை உடைய வருண தேவனை அடைகிறேன். என்னால் யாசிக்கப்பட்ட ஏ வருணனே! எனக்கு தீர்த்தத்தை அளிப்பாயாக. மேலும் பாபிகள் வீட்டில் என்னால் எது சாம்பிடப் பட்டதோ; பாபிகளிடமிருந்து எந்த ப்ரதிக்ரஹம் வாங்கப்பட்டதோ; மனத்தினாலும் சொல்லினாலும், செயலினாலும் எந்த கெட்ட காரியம் செய்யப் பட்டதோ; எல்லாவற்றையும் இந்திரன், வருணன் ப்ரஹஸ்பதி, ஸவிதா ஆகிய தேவர்கள் திரும்ப திரும்ப விடுவித்து சுத்தப்படுத்தட்டும்.

ஜலத்தோடு கூடிய அக்னிக்கு நமஸ்காரம். இந்திரனுக்கும், வருணனுக்கும், வருணனுடைய பத்னிக்கும், ஜலாபிமான தேவதைகளுக்கும் எனது நமஸ்காரம்.

ஜலத்தில் எது சுழல் போன்ற க்ரூரமான அம்சமோ, எது எச்சில் முதலியவற்றால் அசுத்த மானதோ, எது பித்தம், வாதம் முதலியவற்றை

உண்டு பண்ணக் கூடிய அம்சம் இருக்கின் றனவோ அவை எல்லாம் நீங்கட்டும். தேவ, ரிஷி, பித்ரு, மனிதர்களுக்குக் கொடுக்காமல் சாப்பிடுதல் (ஸ்வாஹா). அதே மாதிரி தர்ப்பணம் செய்யாமல் தண்ணீரை பருகுவது (ஸ்வதா). உக்ர ப்ரதிக்ரஹம் வாங்குதல், இவைகளால் ஏற்பட்ட பாபத்தை ஜலாதிபதியான வருணன் தன் கையால் போக்கட்டும்.

அப்படி போக்கப்பட்ட பாபமில்லாத நான் விருப்பு, வெருப்பிலிருந்து விடுபட்டவனுகவும், எல்லாப் பாபத்திலிருந்து விடுபட்டவனுக இருந்து கொண்டு, ஸ்வர்க்க லோகத்தின் மேல் ஏறி ஹிரண்யகர்ப்ப ப்ரஹ்மாவுடன் சமானமான லோகத்தை அடையக்கடவேன்.

பாபத்தைப் போக்கக் கூடிய ஜலத்தின் அபிமானியான வருண தேவதை என்னைச் சுத்தம் செய்யட்டும்.

ஹே கங்கா தேவியே! யமுனையே! ஸரஸ் வதியே! சதத்ருவே! ஆர்ஜீகீய நதியே! மருத்வ்ருத நதியே! (காவேரி) நீங்கள் எல்லோரும் என்னுடைய ஸ்தோத்ர ரூபமான இந்த மந்தி ரத்தைக் கேட்டு, நீங்கள் பருஷ்ணீ நதியுடனும், அஸிக்னி நதியுடனும், விதஸ்தா நதியுடனும், ஸுஷோமா நதியுடனும் வாருங்கள்.

கருத்து:— மேற் சொன்ன நதிகள் நாம் ஸ்நானம் செய்யும் ஜலத்தில் ஸாந்நித்யத்தை

அடைந்து என்னுடைய பாபங்களை அகற்றிப் புனிதனாக ஆக்கட்டும்.

ப்ரகாச வடிவமான ப்ரஹ்மத்தினடமிருந்து, அவர் ஆலோசித்த பிறகு, பஞ்ச பூதங்களும், 14 உலகங்களும் உண்டாயின. பிறகு, இரவு, பகல், (ஏழு) சமுத்திரங்கள், குளம், குட்டை, கிணறுகள் உண்டாயிற்று. அதற்கு பிறகு, விநாடி முதல் வருஷம் வரை, எல்லாவிதமான காலங்களும் உண்டாயிற்று. இந்த காலமே சராசர உலகத்தை வசப்படுத்துகிறது. ச்ருஷ்டி கர்த்தாவானவர் (ப்ரஹ்மா), சூரியன், சந்திரன், பூமி, வாயு லோகம் சுவர்க்க லோகம் முதலியவற்றையும், பூமிக்கு கீழ் உள்ள (ஏழு) லோகங்களையும் முன் கல்பத்தில் இருந்தபடியே உண்டு பண்ணினார்.

பூமியிலும், ஆகாசத்திலும், அந்தரிக்ஷ லோகத்திலும் எந்த பாபம் இருக்கிறதோ அவை எல்லாவற்றையும் கர்மானுஷ்டானம் செய்கிற எங்களை, பாபத்தை போக்கக் கூடிய வருண ராஜா சுத்தம் செய்யட்டும்.

அஷ்டவஸுக்களும், வருணனும், அகமர்ஷணர் என்ற ரிஷியும் சுத்தப்படுத்தட்டும். இந்த வருணராஜாதான் முக்காலத்திலுமுள்ள உலகங்களை ரக்ஷிப்பவர். யாகாதிகளைச் செய்த புண்ய சாலிகளுக்கு, அவரவர்களுக்கு உரிய லோகங்களை அளிக்கிறார். எல்லாப் பிராணிகளுக்கும்

ம்ருத்யு மற்றும் ஹிரண்மயம் என்ற உலகத்தை அளிக்கிறார்.

பிரம்மாண்ட வடிவமான ஸ்வர்க்கலோகம், பூமிக்கும் ஆகாசத்திற்கும் இடையில் சார்ந்து இருக்கிறது. ஹே வருண! எங்களுக்கு அந்த ஸ்வர்க்க லோகத்தை அநுக்ரஹிப்பாயாக.

இந்த ஜலம் அதிஷ்டமான ப்ரஹ்மத்தினுல் பிரகாசிக்கிறது. அந்த அதிஷ்டனமான ஜோதி ஸ்வரூபமான ப்ரஹ்மமாக நான் இருக்கிறேன். ப்ரஹ்மம் தான் பிரகாசிக்கின்றது. நான் ப்ரஹ்ம மாக இருக்கிறேன். ஜீவனுக இருந்த நான ப்ரஹ்மமாக இருக்கிறேன். அஹங்காரத்திற்கு சாக்ஷியான ப்ரஹ்மமாக இருக்கிறேன். அப்படிப் பட்ட நான் ஜல வடிவமான என்னே அக்னியில் ஹோமம் செய்கிறேன்.

சாஸ்திர நிஷித்தமான காரியத்தைச் செய் பவன், ஸ்திரீ ஸங்கமம் செய்த ப்ரஹ்மசாரீ, (தங்கத்தை) திருடியவன், கர்ப்பத்தைக் கலைத் தவன், வேதசாஸ்திரம் அறிந்தவனைக் கொன்ற வன், குரு பத்னி கமனம் செய்தவன் இவர்களின் பாபங்களைப் போக்கடிக்கவல்ல ஜலத்திற்கு தேவ தையான வருணபகவான் மேற்சொன்ன பாபங் களிலிருந்து விடுவிகக்கட்டும்.

रक्षोभूमिः...इन्दुः ஹே பரமாத்மாவே! நான் பாபத்திற்கு இருப்பிடம். அப்படியிருந்தாலும் பாபத்தை அனுபவிப்பதற்காகஎன்னை அழும்படி செய்யாதே. பாபத்தை அழித்து விடு என சான்ரோர் கூறுகிறார்கள். நானும் அதையே கூறுகிறேன். பரமாத்மா ஸர்வவ்யாபி. ஸ்ருஷ்டி காலத்தில் அவர் ப்ரஜைகளை ஸ்ருஷ்டித்தார். உலகத்தை காப்பாற்றினார். தனது பக்தர்களின் இஷ்டங்களை வாரி வழங்குபவர். பவித்ரமான ஹ்ருதய புண்டரீகத்தில் உமையோடு கூடிய பரமேச்வரர் பெரியதாக விருத்தியடைந்தார். ஜீவபாவத்தை விட்டு பரமாத்ம ஸ்வரூபத்தை அடைந்தார். அந்த பரமாத்மா ஜனங்களை தர்மாதர்ம விஷயங்களில் தூண்டுபவர். சந்திரன் போல் மகிழ்ச்சி தரக் கூடியவர்.

अनुवाकः—१ जातवेदसे.....सादयन्तामु ।

துர்க்கா ஸூக்தம்

ஞானத்தை அளிக்கும் அக்னியின் பொருட்டு ஸோமரஸத்தை பிழிந்து எடுக்கிறோம். எல்லாவற்றையும் அறிந்த அக்னி பகவான், எங்களிடத்தில் சத்ரு பாவத்தை காட்டுகின்றவர்களை நன்கு பஸ்மமாக்குகிறார். அந்த அக்னி பகவான் எங்களுடைய எல்லாவிதமான ஆபத்துகளையும் அழிக்

கிறார். உலகில் படகோட்டி எவ்வாறு ஸமுத்திரத்தை கடக்கச் செய்கிறானோ, அதுபோல், அக்னிபகவான் எல்லாவிதமான பாபங்களையும் போக்கி கடக்கச் செய்கிறார்.

மந்திர சாஸ்திரங்களில் ப்ரஸித்தமான துர்க்கா தேவியை நான் சரணமடைந்தேன். அந்த துர்க்கா தேவியானவள் தனது உக்ர ரூபத்தினால் ப்ரகாசிக்கிறாள். தம்முடைய சத்ருக்களையும் அழிக்கிறாள். விசேஷமாக ப்ரகாசிப்பதால் பரமாத்ம ஸ்வரூபத்தில் இருக்கிறாள். கர்மாவின் பலத்தின் காரணமாக உபாஸகர்களால் ஸேவிக்கப்படுகிறாள். எல்லோரையும் ஸம்ஸார ஸாகரத்தை கடக்கச் செய்யும் ஸாமர்த்யமுள்ள தேவியே! எல்லோரையும் கடக்கச் செய்யும் உனக்கு நமஸ்காரம்.

ஹே அக்னியே! துதிக்கத் தகுந்த நீர், எங்களை நல்ல உபாயங்களால் எல்லாவிதமான ஆபத்துகளையும் தாண்டச் செய்து, ஸம்ஸார ஸாகரத்தின் அக்கரையை அடைவிப்பாயாக. உனது அனுக்ரஹத்தால் கிடைத்த இந்த பூமியானது, நாங்கள் வசிப்பதற்கு நல்ல விஸ்தீர்ணமாக ஆகட்டும். இந்த பூமி எல்லாவிதமான பயிர்களையும் உற்பத்தி செய்வதாக இருந்து கொண்டு பலவாறாக இருக்கட்டும். நீயும், என்னுடைய புத்திரன், பௌத்திரன் இவர்களுக்கு சுகத்தை கொடுப்பவராக இருப்பாயாக.

எல்லாம் அறிந்த அக்னி பகவானே! எல்லா விதமான ஆபத்துக்களையும் போக்க வல்லவரே! நீர் எல்லா பாபங்களையும், படகினுல் ஸமுத்ரத்தை கடப்பதுபோல் எங்களை கடக்கச் செய்கிறுய். மேலும், ஹே அக்னியே! மூன்று விதமான (ஆத்யாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம்) தாபங்கள் இல்லாத ஜீவன் முக்தரான முனிவர், எல்லோரும் சுகமாக இருக்கட்டும் என்று நினைப்பது போல், நீயும் மனதினுல் நினைத்துக் கொண்டு, எங்களுடைய சரீரத்தை காப்பவராக இருந்துக் கொண்டு, எப்பொழுதும் கவனமாக இருப்பீராக.

எதிரி சைன்யத்தை ஜயிக்கவல்லவரும், சத்ருக்களை அடக்குபவரும், பயங்கரமானவருமான அக்னி பகவானை, அவரது உயர்ந்த வேலைக்காரர்களோடு கூட ஆஹ்வானம் செய்கிறோம். அந்த அக்னி பகவான் எல்லாவிதமான ஆபத்துகளையும் எங்களிடமிருந்து நீக்குகிறார். மேலும் அக்னி பகவான் எங்களுடைய தவறுகளை மன்னித்து ப்ரம்மஹத்யாதி மஹாபாபங்களையும் கடக்கும்படி செய்கிறார்.

ஹே அக்னியே! நீர், யாகங்களில் ஸ்துதிக்கத் தகுந்தவராக இருந்துக் கொண்டு, சுகத்தை விஸ்தாரமாக்குகிறீர். கர்மாவின் பலனை அளிப்பவராக இருந்து கொண்டு, ஹோமத்தை நடத்தி கொடுக்கிறீர். துதிக்கத் தகுந்தவராக இருந்தும் யாகத்

தின் ஸதஸ்ஸில் ப்ரஸன்னமாக இருக்கிறீர். ஆகையால் ஹே அக்னியே! உம்முடைய சரீரத்தை எங்களுடைய ஹவிஸ்ஸினுல் த்ருப்தி படுத்துவீராக. பிறகு எங்களுக்கு எல்லாவிதமான பாக்யங்களையும், எல்லாவிதத்திலும் அளிப்பீராக.

अनुवाकः—३ भूरन्न ।

பாபம் நீங்கி அன்ன ஸம்ருத்தியை விரும்பு பவனுக்கு ஹோமம் செய்வதற்குரிய மந்திரங்கள். மூவுலகத்தின் அதிஷ்டான தேவதைகள் எனக்கு அன்னத்தை அளிக்கட்டும். ப்ருத்வி, அக்னி அந்தரிக்ஷம், வாயு, த்யுலோகம், ஆதித்யன் இவர் களுக்கு, ஹவிர்பாகம் அக்னி மூலமாக அளிக் கிறேன். மேலும் சந்திரனுக்கும், திக்குகளுக்கும் ஹவிர்பாகம் அளிக்கிறேன். தேவதைகளுக்கு நமஸ்காரம் என்று கிழக்குமுகமாக உபஸ்தானம் செய்யவும். स्वधा எனச் சொல்லி தெற்குமுகமாக பித்ருக்களுக்கு உபஸ்தானம் செய்யவும். மூவுலக அபிமானி தேவதைகள் எனக்கு அன்னம் அளிப் பதாக அங்கீகரிக்கட்டும்.

अनुवाकः—४ भूरग्नये ।

பாபம் நீங்க ஹோமம் செய்ய வேண்டிய மந்திரங்கள்: பூராதிலோகங்கள் என்னுல் கொடுக் கப்படும் ஆஹுதிகளை பெற்று, எனது பாபத்தை நீக்கட்டும். ஹே அக்னியே! நீயும் எனது ப்ரார்த்தனையை ஏற்பாயாக.

மஹத்வத்தை அடைய செய்ய வேண்டிய ஹோம மந்திரங்கள்:—

अनुवाक:—५ भूरग्नये च.....महरोम् ।

மஹத்வம் பொருந்திய மூவுலக அபிமானி தேவதைகளுக்கு, ஹவிஸ் அளிக்கப்படுகிறது. அந்த தேவதைகள், இதை ஏற்றுக் கொண்டு எனக்கு மஹிமையை கொடுக்கட்டும்.

अनुवाक:—६ पाहिनो अग्न एनसे स्वाहा ।

மோக்ஷத்தை அடைய ப்ரதிபந்தகமான பாபத்தை போக்கவல்ல ஹோம மந்திரங்கள்: ஹே அக்னியே! ஞானத்தையடைய ப்ரதிபந்தகமான பாபத்திலிருந்து என்னை காப்பாற்று. முழு ஞானத்தையடைய ஸாதனங்களை அளித்து காப்பாற்று. சித்த சுத்திக்காக செய்யப்படும் யக்ஞத்தை காப்பாற்று. ஞான ஸாதனமான குரு வேதாந்த சாஸ்திரம் எல்லாவற்றையும் காப்பாற்று. உனக்கு இந்த ஹவிர்பாகம் இருக்கட்டும்.

अनुवाक:—७ पाहिनो अग्न एकया ।

ஹே அக்னியே! நான்கு வேதங்களால் துதிக்கப்பட்ட நீ, எங்களைக் காப்பாற்று. உனக்கு இந்த ஹவிஸ் கொடுக்கப்படுகிறது.

अनुवाक:—८ यच्छन्दसा ।

ஞான மார்க்கத்தை எடுத்துரைக்கும் வேதாந்தம் முழுவதையும் அடைய ஜபிக்க வேண்டிய மந்திரம்.

ப்ரணவம் (ஓங்காரம்) வேதங்களுள் சிறந்தது. ஸர்வஜகத்ரூபமானது. அது வேதங்களிலிருந்து காயத்ரீ முதலிய சந்தஸ்ஸுகளில் ப்ரவேசித்தது. வேதாந்த ப்ரதிபாத்யமான பரமாத்மா, உபநிஷத்தை எடுத்துரைத்தார். அவர் அனுஷ்டான பாரர்களாலும் ஞானிகளாலும் அடையக் கூடியவர் பரமாத்மாதான் ஆதிகாரணம். முனிவர்களுக்கு ஞானம் ஏற்படவே உபநிஷத்தை உரைத்தார். ப்ரதிபந்தகம் நீங்க தேவர்களுக்கும் பித்ருக்களுக்கும் நமஸ்காரம் செய்கிறேன்.

अनुवाकः—९ नमोब्रह्मणे ।

வேதத்தை மறக்காமல் வைத்துக் கொள்ள மந்திரம்: — ஜகத்காரணமான பரமாத்மாவுக்கு நமஸ்காரம். அவருடைய அனுக்ரஹத்தால் வேதமும், அதன் பொருளும் மனதில் நிலைத்திருக்கட்டும். மறக்காமல் இருக்கும்படி தரிக்க வேண்டும். காதால் கேட்ட வேத சாஸ்த்ர விஷயங்கள் என்னிடம் அழியாமலிருக்கட்டும்.

अनुवाकः—१० ऋतं तपः ।

நிலையான மனத்துடன் த்யானம் செய்யும் தபஸ் ஸித்திக்க, இந்த மந்திரம்: மனதால் உண்மை

யான வஸ்துவை நிஜைத்தல், உண்மை பேசுதல், உபய மீமாம்ஸா சாஸ்திர ச்ரவணம், இந்திரியங் களை அடக்குதல், உபவாஸாதிகளால் சரீரத்தை ஒடுக்குதல், கோபமின்மை, தானம் செய்தல், யாகம் செய்தல் இவைகள் கீழ்ப்படியிலுள்ள தபஸ். மூவுலக ரூபமான விராட்புருஷன் உபாஸிக்கத் தகுந்தவன். உபாஸனம் செய். அது சிறந்த தபஸ் ஆகும்.

अनुवाकः—११ यथा वृक्षस्य ।

விதித்ததை செய்யவும். நிஷித்தத்தை செய்வது ஞானப்ரதிபந்தகம் என கூறப் படுகிறது. வாஸனையுள்ள பூத்த புஷ்பங்களைக் கொண்ட மரத்தின் வாஸனை, தூரத்திலிருந்து வீசு கிறதுபோல், ஜ்யோதிஷ்டோமம் போன்ற புண்ய கர்மாக்களின் வாஸனை, தூரத்திலிருந்து வீசு கிறது. ஆகையால் அதை செய்ய வேண்டும். பள்ளத்தில் குறுக்கு கட்டை போல் வைக்கப் பட்ட கத்தி முனையின் மீது அடியெடுத்து வைத்து நடந்தால் காலில் காயம்படும் அல்லது பள்ளத்தில் விழ நேரிடும். ஆகையால் அது போன்ற பாபச் செயல்களிலிருந்து விலக வேண்டும். பாப காரியத்தை செய்ய வெட்கப்பட வேண்டும். ஆகவே, செய்யக் கூடாது என்பது கருத்து.

अनुवाकः—१२ अणोरणीयान्

பாபம் செய்யாமல் புண்யத்தை செய்து சித்த சுத்தியை அடைந்தவனுக்கு, இதில் பரமாத்ம

தத்வம் விளக்கப்படுகிறது. ஸத்சிதானந்த வடிவமான பரமாத்மா, ஜகத்திற்கு ஆதாரமானவர்; அவர்தான் ஆத்மா. உலக வழக்கில் மாயையின் கார்யமான இப்பிரபஞ்சத்தில் பரமாணு மிகச் சிறிய வஸ்து. பரமாத்மா அணுவைவிட சிறிய வர். ஸூக்ஷ்மமானவர். ஆகாயம் முதலியன மிகப் பெரிய வஸ்துக்களைவிட பரமாத்மா பெரியவர். பரமாத்மா எல்லா ப்ராணிகளின் ஹ்ருதய புண்டரீகத்தில் வசிக்கிறார். புத்தியால் அறியத்தகுந்தவர். அந்த பரமாத்மாவை சம, தமாதி குணங்கள் கொண்ட புருஷன் ஸாக்ஷாத் காரம் செய்கிறான். அந்த உரிமை பரமேச்வரனின் அனுக்ரஹத்தால் ஏற்படுகிறது. மனிதர்களுக்கு அதவைத வாஸனை ஈச்வரானுக்ரஹத்தால்தான் ஏற்படும் என்று சான்றோர் கூறுகின்றார்கள். ஸங்கல்பம் இல்லாத நிர்விகார பரமாத்ம ஸ்ரூப பத்தை பார்த்தவர், ஜன்ம மரண பயமற்றவராக ஆய்விடுகிறார்.

ஸப்தாதய:—மாயையுடன் கூடிய பரமாத்மாவிட மிருந்து ப்ராண த்வாரங்களான கண்கள், காதுகள் மூக்குகள், வாய் என ஏழு உறுப்புகள் உண்டாயின. அவைகளின் உணரக்கூடிய சக்தியும், அனுபவிக்க வேண்டிய பொருளும் அக்னிக்கு ஏழு நாக்குகளும் உண்டாயின. தேவ, மனுஷ்யர்கள். ப்ராணிகள் வாழும் ஏழு உலகங்களும் அவரிடமிருந்துதான் உண்டாயின. ஹ்ருதய குஹையில்

வசிக்கும் பரமாத்மாவிடமிருந்துதான், ஏழு ஸமுத்ரங்களும், ஏழு ரிஷிகளும் உண்டாயினர். மலைகளும், நதிகளும், நெல் முதலிய தான்யங்களும் உண்டாயின. லிங்கசரீரியான ஜீவன் ஷெ பொருள்களை அனுபவிக்கிறவனாக இருக்கிறான். உயிருள்ள ப்ராணிகளுள் பரமாத்மா, தேவர்களுள் ப்ரஹ்மாவாகவும், கவிகளுள் ஸுசப்தமுள்ள வியாசர், வால்மீகி முதலியவர்களாகவும், ப்ராஹ்மணர்களுள் வஸிஷ்டாதி ரிஷிகளாகவும் இருக்கிறார்.

अजामेकां அனாதியான ஜீவன், சிவப்பு, வெளுப்பு, கறுப்பு என்ற மூன்று குணங்கள் கொண்டவளும், அனாதியாயும், பலவிதமான ப்ரஜைகளை ஸ்ருஷ்டிப்பவளுமான மாயையை உபாஸித்து, அதனுடன் இந்த ஸம்ஸாரத்தில் உழலுகிறான். மற்ற ஜீவன் விரக்தி ஏற்படுவதற்கு முன்பு மாயையின் காரியங்களை அனுபவித்துவிட்டு விரக்தி ஏற்பட்டவுடன் மாயையை விட்டு விலகிச் செல்கிறான். மாயயின் பிடியில் வருவதில்லை.

घृतं मिमिक्षिरे அக்னியை பிரார்த்தனை செய்து அக்னியில் ஆஜ்யாஹுதி செய்கிறார்கள். அக்னிக்கு ஜ்வாலையின் காரணமான ஆஜ்யம்தான் பிறப்பிடம். அக்னி ஆஜ்யத்தை அண்டி வாழ்கிறார். ஆஜ்யம்தான் இவருக்கும் இருப்பிடம். எங்கள் ஹவிஸ்ஸை அனுசரித்து தேவர்களை அழைத்து வருவாயாக. ஸ்வாஹா என்று சொல்லி

அளிக்கும் ஹவிஸ்ஸை, ஹே ச்ரேஷ்ட அக்னியே! சுமந்து சென்று தேவதைகளை திருப்திபடுத்து வாயாக.

सुखदात्मिः பரமாத்மாவிடமிருந்து அனுபவிக்கத் தகுந்த, இனிய, நிலையற்ற இப்பிரபஞ்சம் உண்டாயிற்று. ஸ்வப்ரகாசமான பரமாத்மாவின் நாமாவான (ப்ரணவம்) ஓம்காரம், அதை உச்சரிப்பதால் ப்ரஹ்ம தத்துவத்தை அடைகிறுன். இது தேவர்களால் எப்பொழுதும் உச்சரிக்கப்படுகிறது. இது மோக்ஷரதத்தின் அச்சு ஆகும்.

वयं नाम நாங்கள் இந்த ஞானயக்ஞத்தில், நமஸ்கரித்து ப்ரணவத்தை எப்பொழுதும் உச்சரிப்போம். உச்சரிக்கும் பொழுது, அருகில் கேட்டுக் கொண்டிருக்கும் தத்துவ ஞானிகளால், நான்கு கொம்புகளுடைய ப்ரணவமென்ற ரிஷபம் வெளியிடப்பட்டது. இது வெண்மையானது.

चत्वारिशृङ्गाः ப்ரணவத்தின் அகார, உகார, மகார அனுஸ்வாரங்களான நான்கு உறுப்புகள், நான்கு கொம்புகளாகும். ப்ரணவத்தின் பொருளான பரமாத்மாவுக்கு மூன்று பாதங்கள், அத்யாத்ம ஸ்வரூபத்தில் விச்வன், ப்ராக்ஞன், தைஜஸன் என மூன்று உருவங்கள். ஆதி தைவிகமான வடிவில், விராட் ஸ்வரூபம், ஹிரண்யகர்ப்பர், அவ்யாக்ருதம் என மூன்று உருவங்கள். சித், அசித் என இரு சிரஸ்ஸுகள் பரமாத்மாவுக்கு

உள்ளன. இவற்றுக்கு பூமி முதலிய 7 லோகங்கள் கைகளாகும்.

அகார, உகார, மகாரங்களில்; விச்வன் ப்ராக்ஞன், தைஜஸன் என்ற மூன்று பேர்களாலும் விராட், ஹிரண்யகர்ப்பர், அவ்யாக்ருதம் இவைகளாலும் கட்டுப்பட்டவர். அப்படிப்பட்ட ப்ரணவம் ப்ரஹ்ம தத்வத்தை அதிசயிக்கும்படி எடுத்துக் கூறுகிறது. தேஜோ ரூபமான பரமாத்மா, மனித சரீரத்தில் எங்கும் ப்ரவேசித்திருக்கிறார்.

ஸ்ரீ— இந்த ப்ரஹ்மாண்டத்தில் விராட், ஹிரண்யகர்ப்பர், அவ்யாக்ருதம் என்று மூன்று விதமாக இருக்கின்ற ஸ்வப்ரகாச ஸ்வரூபியான பரப்ரஹ்மத்தை தேவர்களுக்கு சமமான ஸாத்விகர்களான பெரியோர்கள் வேதத்தினுள் கண்டனர். வேதாந்தாசார்யர்களால் ரஹஸ்யமாக வைக்கப்பட்டுள்ளது. அந்த தத்துவம், விராட்புருஷர் ஜாக்ரதவஸ்தையை விழிப்புயையும், ஹிரண்யகர்ப்பர் ஸ்வப்னத்தையும் உண்டாக்கினர். அழகிய அவ்யாக்ருதத்திலிருந்து (ஸுஷுப்தி) தூக்கம் உண்டாயிற்று. இ விராட் முதலிய மூன்றுபேரும் ப்ரஹ்மத்தோடு சேர்ந்து தூக்கம் முதலியவைகளை உண்டு பண்ணினர்கள்.

यो देवानां தேவர்களுள் ஆதியானவரும், முதலில் உண்டானவரும், சிறந்தவருமான ஹிரண்யகர்ப்பரை, உலகிற்கு காரணமானவரும் வேதங்

களில் வினக்கப்படுபவரும், சிறந்த முனிவருமான பரமாத்மா, நேரிடையாக பார்க்கிறார். அந்த பரமாத்மா எங்களை ஸம்ஸாரத்தை அகற்றவல்ல ப்ரஹ்மதத்வானுஸ்மரணத்தோடு சேர்த்து வைக்கட்டும்.

यस्मात् எந்த பரமாத்ம ஸ்வரூபத்தைக் காட்டிலும் உத்கிருஷ்ட வஸ்து கிடையாதோ, சிறிய வஸ்து கிடையாதோ, பெரிய வஸ்து கிடையாதோ, அந்த பரமாத்ம ஸ்வரூபம், மரம் நிலையாக நிற்பதுபோல் அத்வீதியராக, ஸ்வயம் ப்ரகாச ஸ்வரூபத்தில் இருக்கிறார். அவரால் இந்த உலகம் முழுவதும் பரிபூர்ணமாக இருக்கிறது. அவரே ஜகத்தாக இருக்கிறார். ப்ரஹ்ம தத்துவத்தை தவிர்த்து ப்ரபஞ்சம் தனியாக இல்லை.

नकर्म அப்படிப்பட்ட பரமாத்மாவை தியானிப்பதற்கு எல்லாவற்றையும் துறப்பதுதான் சிறந்த சாதனம். அக்னி ஹோத்ரம் முதலிய கர்மாவினாலும், பித்ருக்கள் கடன் நீங்க காரணமான ஸத்புத்ரனாலும், தானம் செய்யத்தக்க பணத்தினாலும் மோக்ஷம் கிடைக்காது. ஞானிகள் லௌகிக-வைதிக கர்மாக்களை த்யாகம் செய்து மோக்ஷத்தை அடைகிறார்கள்.

புலன்களை அடக்கிய ஸன்யாசிகள் எந்த அமரத்துவத்தை அடைகிறார்களோ, அது ஸ்வர்க்கத்தைவிட சிறந்தது. தனது ஏகாக்ர நிலையி

லுள்ள புத்தியில் இருந்து கொண்டு, அந்த பரம் பொருள் விசேஷமாக ப்ரகாசிக்கிறது.

வேதாந்தவிஞான தியாகத்தினுல் மோக்ஷம் கிடைப்பது போல், ஞானத்தினுலும் மோக்ஷம் கிடைக்கும் என விளக்கப்படுகிறது. உபநிஷத்திலுள்ள வேதாந்த வாககியங்களால், ஜீவ-ப்ரஹ்ம ஐக்யமே மோக்ஷம் என்று, நன்கு அறிந்தவர்களாயும, கர்ம ஸன் யாஸம செய்ததால் போகங்கள் நீங்கி சித்த சுத்தி ஏற்பட்டவர்களுமான ஞானிகள் எலலோரும் ப்ராபத கர்மாவினுல் ஏற்பட்ட இந்த சரீரம் அழிந்தவுடன், மறு பிறவியில்லாத மோக்ஷத்தை அடைகிறார்கள். அக்ஞானிகளுக்கு அது ஏற்படுவ தில்லை.

दहं இந்த ஹ்ருதயபுண்டரீகம் (தாமரை) பாப மற்றது. பரமாத்மாவின் இருப்பிடம் சரீரத்தின் நடுவிலுள்ளது. அந்த ஹ்ருதய புண்டரீகத்தினுள் ஸூக்ஷ்மமான பரமாத்ம ஸ்வரூபம், ஆகாசம் போல் அருவமாக இருக்கிறது. அதற்கு சோகமே கிடையாது. அப்படிப்பட்ட பரப்ரஹ்ம ஸ்வரூ பத்தை ஹ்ருதய புண்டரீகத்தில் தியானத்தின் மூலம் உபாஸிக்க வேண்டும்.

யோவேதாதௌ நான்கு வேதங்களின் ஆரம்பத்தில் எந்த ப்ரணவம் சொல்லப்பட்டுள்ளதோ, வேதாந்தங்களில் உபாஸிக்கும்படி கூறப்பட்டு ப்ரதிஷ்டை அடைந்துள்ளதோ, அது த்யான

காலத்தில் அவ்யாக்ருத ப்ரஹ்மத்தில் லயிக்கிறது. (மறைகிறது). அந்த ப்ரணவத்தின் நான்காவது மாத்திரையாக நாதத்தில் தியானிக்கத் தகுந்த எந்த பரம்பொருள் உள்ளதோ, அவர்தான் பரமேச்வரர் என்று அறியவும்.

अनुवाकः—१३ सहस्रशीर्षं ।

பரமாத்மாவின் குண விசேஷங்கள் சொல்லப் படுகின்றன. விராட்ரூபியான பரமாத்மாவுக்கு (அவரே உலக வடிவில் இருப்பதால்) எண்ணற்ற தலைகள். எண்ணற்ற கண்கள். அவர் உலகுக்கு நன்மை செய்பவர்.

உலக வடிவிலிருப்பவர். பஞ்ச பூதங்களில் வசிப்பவர். அழிவற்றவர். ஞானிகளால் அடையக் கூடிய உயர்ந்த ஸாதனமும் அவரேதான். அப்படிப்பட்ட பரமாத்மாவை தியானிக்க வேண்டும்.

विश्वः பரம்பொருள் உலகில் எல்லாவற்றையும் விடச்ரேஷ்டமானது. அழிவில்லாதது. விச்வ ரூபமானது. பஞ்ச பூதங்களிலும் இருப்பவர். பாபத்தை போக்குபவர். மாயையினால் உலகமாகத் தெரிவதெல்லாம் வாஸ்தவத்தில் பரம்பொருளே. உலக வழக்கிற்காக, அந்த பரமாத்மா இப் பிரபஞ்சத்தை ஆச்ரயித்திருக்கிறார்.

ஶ்ரீ: ஜகத்தை பரிபாலிப்பவர். சாச்வதமாக இருப்பவர். மங்கள ஸ்வரூபி. நழுவாதவர். பூத வஸ்துக்களில் நிலையாக இருப்பவர். அறியத் தகுந்த தத்துவங்களுள் மிகச் சிறந்தது, உலக வடிவமானவர். எல்லாவற்றிற்கும் ஆதாரமாக இருப்பவர். அப்படிப்பட்டவரை தியானிக்கிறோம்.

நாராயணம் புராணங்களில் ப்ரஸித்தி பெற்ற உத்கிருஷ்ட தத்துவம் பரமாத்மா. ஜ்யோதி வடிவ மானவர். ஆத்மாதான் நாராயணர். உத்கிருஷ்ட தத்வமான பரம்பொருள் நாராயணர்தான். அவர் சிறந்த ஆத்மா. தியானிப்பவர். எல்லாவற்றிலும் சிறந்த நாராயணர் என்ற பரம்பொருளை தியானிக்கத் தகுந்தவர்.

யத்ச கண்ணுல் காணப்படுவதும், தூரத்தி லுள்ளவைகளாகவும், காதால் கேட்கப்படுபவையு மான எல்லாப் பொருளிலும் நாராயண தத்துவமே வியாபித்திருக்கிறது. உள்ளே, வெளியே, எங்கும் பரமாத்மா தான் உள்ளார்.

அனந்தமவ்யயம் முடிவில்லாதவர், அழிவில்லாதவர் சித்ரூபமாக இருப்பவர். ஸம்ஸாரத்தின் பந்தத்தை முடிவுக்கு கொண்டு வருபவர். ஜகத்தை உற்பத்தி செய்தவர். ஹ்ருதய புண்டரீகத்தில் இருப்பவர். கீழ்நோக்கிய ஹ்ருதயம் போன்றவர் நாராயணர். அவரை தியானிப்போம்.

अधोनिष्ट्या கழுத்துக்குக் கீழே தொப்புளுக்கு 12 அங்குலம் மேலே மேற்படி ஹ்ருதயபுண்டரீகம் இருக்கிறது. அதில் உலகத்திற்கு ஆதாரமான பரமாத்மா, ஒளிக் கூட்டங்களால் வியாபிக்கப் பட்டவராக விளங்குகிறார்.

सन्ततम् நரம்புகளால் சூழப்பட்ட அந்த ஹ்ருதய கமலம் தலைகீழாக இருக்கிறது. அந்த ஹ்ருதயத் திற்கு ஸமீபத்தில் सूक्ष्मम्नु என்ற நாடித் தண்டு உள்ளது. அது மிகவும் ஸூக்ஷ்மமானது. அதில் இந்த உலகம் முழுவதும் இருக்கிறது. அது தான் உலகத்திற்கு ஆதாரம் என கருத்து.

तस्यमध्ये அந்த सूक्ष्मम्नु நாடித்தண்டின் நடுவில் பெரிய அக்னி இருக்கிறது. அது நிறைய ஒளிப்பிழம்புகளைக் கொண்டது. அதன் மூலம் எல்லா நாடிகளிலும் பரவுவதால் எங்கும் பார்ப்பவ ராக ஆகிறார். அந்த அக்னி கிடைத்த ஆஹா ரத்தை சாப்பிட்டு அதன் ரஸத்தை உடல் எல்லா உறுப்புகளுக்கும் அளிக்கிறார். ஆஹாரத்தை ஜீரணிக்கச் செய்கிறார். தான் ஜீரணிப்பதில்லை. ஆகையால் அவர் சாமர்த்தியசாலி. அவருடைய கிரணங்கள் குறுக்காகவும், மேலும் கீழுமாகவும் எங்கும் வியாபித்துள்ளன.

सन्तापयति உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை தனது சரீரத்தை உஷ்ணப்படுத்துகிறார். அவருடைய ஒரு ஜ்வாலை सूक्ष्मम्नु நாடிக்கு

மேலே ப்ரஹ்மரந்திரம் (த்வாரம்) வரை வியா
பித்து இருக்கிறது.

नीलतोयदमध्यस्थात् அந்த அக்னி ஜ்வாலையான
கருமேகத்தின் நடுவே இருக்கும் மின்னல் போ
பிரகாசமானது. நீவார தான்யத்தின் வால்போ
ஸூக்ஷ்மமானது. மஞ்சள் நிறமானது. மிகவு
அணுபோல் ஸூக்ஷ்மமாக பிரகாசிக்கிறது.

तस्याः அந்த அக்னி ஜ்வாலையின் மத்தியி
ஜகத்காரணமான பரமாத்மா இருக்கிறார். அவ
ப்ரஹ்மா, சிவன், விஷ்ணு, இந்திரன் மாயையுட
கூடிய அந்தர்யாமியானவர். சுத்த சைதன்ய ரூ
மானவர். அவரேதான் ராஜாவாக விளங்குகிறார்.

अनुवाकः—१४ आदित्यः ।

முன் அனுவாகத்தில் பரமாத்மாதா
நாராயணர். அவர் தியானிக்கத் தகுந்தவர் எ
கூறப்பட்டது. அந்த பரமாத்மாதான் ஆதித்
ருக (சூரியனுக) தென்படுகிறார். எல்லோருக்கு
உஷ்ணத்தை அளிக்கும் வட்டவடிவமான சூரி
மண்டலம் ருக்குகளால் ஆனது. அது ருக் மந்
திரங்களின் அபிமானி தேவதைகளுக்கு இ
பிடம். ஆதித்ய மண்டலத்திலுள்ள பளபளப்பா
தேஜஸ் (ஒளி) ஸாமவேத ரூபம். அந்த ஒளி ஸாம
தினுல் தயாரானது. ஸாமத்தின் அபிமானி தே
தையின் இருப்பிடம் அந்த ஒளிதான். ஆதித்

மண்டலத்தில் காணப்படும் புருஷன் யஜுர் மந்திரங்களால் உண்டானவர். அவர்தான் யஜுஸ் அபிமானி தேவதைகளுக்கு இருப்பிடமாகும். இந்த மண்டலம், ஒளி, புருஷன் மூன்றும் ருக், யஜுஸ், ஸாம ரூபமாக ப்ரகாசிக்கிறது. ஆதித்ய மண்டலத்திலுள்ள புருஷன் பாதம் முதல் தலைவரை தங்கமயமாக இருக்கிறார். தியானத்திற்கு உரியவர் இவர்.

अनुवाक:—१५ आदित्य ।

உபாஸிக்கத்தகுந்த சூரியனே! ஸர்வஜகத் ரூபமாக இருக்கிறார். அவர் ஒளிமயமானவர் பலத்திற்கு காரணமானவர்; சரீரபலமாக இருப்பவர். கீர்த்தியாகவும், கண், காது, சரிரம், மனது, கோபம், ஸத்யன், மித்ரன் என்ற தேவர்களும்; வாயு, ஆகாசம், பஞ்ச ப்ராணன்கள், திக்பாலர்கள், ப்ரஹ்மா, ஆகியோரும் விவரிக்க முடியாத ப்ரஹ்மஸ்வரூபங்கள். ஸுகம் (கண்ணுக்கு புலப்படாத) உண்மை அன்னம் (உணவு) தேவ ஸமூஹம், மோக்ஷம், ஜீவாத்மா. உலகம் முழுவதும், மேலான ஸுகம், பிறப்பு இறப்பற்ற பரம்பொருள். இந்த எல்லா வடிவத்திலும் இருப்பவர் ஆதித்யன்தான். நித்யமானவர். பூர்ணமானவர். எல்லா பிராணிகளுக்கும் அதிபதி. இவ்வாறு எவன் ஆதித்யனை தியானத்தின் மூலம் ஹிரண்யகர்ப்பனாக உபாஸிக்கிறானோ! அவன் உபாஸனையால் ஹிரண்யகர்ப்பராகவே ஆகிவிடுவான்.

உபாஸனை மந்தமாக இருந்தால், அவர் லோக
தில் இடம் பெறுகிறுன் அல்லது ஆதித்யஇ
தேவதைகளாக உபாஸித்து தீவிர உபாஸஇ
யால் தேவனுக ஆவான். உபாஸனை மத்யமமா
இருந்தால் தேவர்களின் ஐச்வரியத்தை அடை
கிறுன். [உபாஸனை மந்தமாக இருந்தால் தே
லோகத்தை அடைகிறுன்.]

अनुवाकः—१६ निधनपतये नमः ।

ஜபத்தினுல் பாபத்தை போக்கவல்ல சிவப
மான மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. ஸாம்ப
பரமேஸ்வரனுக்கு நமஸ்காரம் என பொருள்பட
பல வாக்கியங்கள் உள்ளன. மிகுந்த செல்வ
திற்கு பதியான குபேர ரூபத்தில் உள்ள
சிவனுக்கு நமஸ்காரம். மிகுந்த செல்வத்தை
பாதுகாத்து பக்தர்களின் ஸமீபத்திலிருப்பவருக்
நமஸ்காரம். மேல் உலகில் தேவதையாக இருப்
வருக்கு நமஸ்காரம். மேல் உலகில் லிங்க வடிவில்
பூஜிக்கப்படுபவருக்கு நமஸ்காரம். தங்கமயமான
வருக்கு நமஸ்காரம். ரஜதலிங்கத்திற்கு நமஸ்க
ரம். தேவலோகத்தின் ஸுகரூபிக்கு நமஸ்காரம்
இந்திராதிகளால் தேவலோகத்தில் பூஜிக்க
படுகின்ற லிங்கமூர்த்திக்கு நமஸ்காரம். ஸம்ஸா
ரூபிக்கு நமஸ்காரம். பூலோகத்திலுள்ள சிவலிங்
மூர்த்திக்கு நமஸ்காரம். ப்ரளய காலத்தில் ப்ரஹ்
மாண்டம் லயிக்கின்ற சிவனுக்கு நமஸ்காரம்
ஸுகத்தைக் கொடுக்கும் சிவலிங்கத்திற்கு நம

காரம். மங்களரூபியான சிவனுக்கு நமஸ்காரம். சிவலிங்கத்திற்கு நமஸ்காரம். ஜ்யோதிஸ்வரூபியான சிவனுக்கு நமஸ்காரம். பூமியிலுள்ள ஜ்யோதிலிங்க மூர்த்திக்கு நமஸ்காரம். எல்லா ப்ரபஞ்சமாயிருக்கும் மூர்த்திக்கு நமஸ்காரம். எல்லா ப்ராணி ரூபமான லிங்கத்திற்கு நமஸ்காரம். எல்லாவற்றையும் விட சிறந்த பரம்பொருளுக்கு நமஸ்காரம். உலகத்தை காப்பாற்றி மோக்ஷ ஸாம்ராஜ்யத்தில் ஈடுபட்டுள்ள லிங்கத்திற்கு நமஸ்காரம். [ஸோமன், சூரியன் முதலிய தேவர்களுக்கு காரணமாயும், புனிதமான வேத மந்திரஸ்வரூபியுமான லிங்கத்தை, ப்ராஹ்மணர் முதலானோர் ப்ரதிஷ்டை செய்கிறார்கள்.]

अनुवाकः—१७ सद्योजातं ।

மேற்கு நோக்கி இருக்கும் ஸத்யோஜாத மூர்த்திக்கு நமஸ்காரம். அவரை தியானிக்கிறேன். ஹே ஸத்யோஜாத மூர்த்தியே! ஜன்மாவை கொடுக்கும் ஸம்ஸார ஸாகரத்திற்கு வரும்படி என்னை தூண்டாதே. ஜன்மா மரணமற்ற தத்துவ ஞானத்தையடைய என்னைத் தூண்டுவாயாக. ஸம்ஸாரக் கடலினின்று என்னை கரைசேர்க்கும் ஸத்யோஜாத மூர்த்திக்கு நமஸ்காரம்.

अनुवाकः—१८ वामदेवाय नमः ।

வடக்கு நோக்கி இருக்கும் வாமதேவ மூர்த்திக்கு நமஸ்காரம். உலகத்தின் உற்பத்திக்கு முன்பே இருந்தவரும், சிறந்தவருமான தேவனுக்கு

நமஸ்காரம். ப்ரளய காலத்தில் எல்லோரையும் அழச் செய்பவரும்; எல்லோரையும் அழிப்பதில் கால ரூபியாயும், ஸுக ரூபியாயும், பலவிதமான ஜகத்தை ஸ்ருஷ்டிபண்ணுபவருமான சிவனுக்கு நமஸ்காரம். ராக்ஷஸர்களின் பலத்தை அழிப்பவரும், பல ஸ்வரூபியுமானவருக்கு நமஸ்காரம். எல்லா ப்ராணி வர்க்கங்களையும் அடக்கியவரும், ஸர்வக்ஞராக மிகச் சிறந்து விளங்குபவருமான சிவனுக்கு நமஸ்காரம்.

अनुवाकः—१९ अघोरेभ्यः ।

ஸாத்விகமாயும், ராஜஸமாயும், தாமஸமாயும் இருக்கின்ற தெற்கு நோக்கிய சிவமூர்த்திக்கு நமஸ்காரம். ஹே பரமேச்வரா! ப்ரளயகாலத்தில் எல்லோரையும் லயிக்கச் செய்யும் உனது ருத்ரமூர்த்திகளுக்கு எப்பொழுதும் எங்கும் நமஸ்காரம்.

अनुवाकः—२० तत्पुरुषाय ।

கிழக்கு முகமாயிருக்கிற ருத்ர மூர்த்திக்கு நமஸ்காரம். அப்படிப்பட்ட தத்புருஷ தேவரை தியானிக்கிறோம். எங்களை ருத்ரதேவர் தியானம் செய்யும்படியும், ஞானமார்க்கத்திலும் ஈடுபடும் படியும் தூண்டட்டும்.

अनुवाकः—२१ ईशानः ।

மேல் நோக்கிய முகத்தையுடைய ருத்ரதேவர் எல்லா வித்யைகளையும் நியமிப்பவர். எல்லா

ப்ராணிகளையும் நியமிப்பவர். வேத ரக்ஷகர். ஹிரண்யகர்ப்ப ப்ரஹ்மாவுக்கு அதிபதி. அப்படிப்பட்ட பரமாத்மா; சாந்தமாக இருந்து என்னை அனுக்ரஹிக்கட்டும். அந்தப் பரமாத்மாவாக நான் இருக்கிறேன். (ஜீவனே பரமாத்மா என கருத்து)

अनुवाकः—२२ नमो हिरण्यबाहवे ।

தங்கமயமான கைகளை உடையவரும், தங்கமயமானவரும், தேஜோமயமானவரும், நவநிதிகளை ரக்ஷிப்பவரும், பார்வதியின் பதியும், உமையின் பதியும், எல்லா ப்ராணிகளை ரக்ஷிப்பவருமான பார்வதியின் பதிக்கு நமஸ்காரம்.

अनुवाकः—२३ ऋतँ सत्यं ।

மானஸிகமான உண்மை ஸ்வரூபியாயும் வாசிகமான உண்மை வடிவமாயும், பரப்ரஹ்ம ஸ்வரூபியாயும், ஆதி புருஷராயும், கருப்பு. சிவப்பு நிறத்தை உடையவராயும, மேல் நோக்கி வீரியத்தை உடையவரும், முக்கண்ணனும், உலக வடிவமாக இருக்கின்ற பரமாத்ம ஸ்வரூபத்திற்கு நமஸ்காரம்.

अनुवाकः—२४ सर्वो वै ।

பார்வதீபதியான பரமேச்வரர், எல்லாப் பிராணிகளிடத்திலும் ஜீவாத்மாவாக இருக்கிற ருத்ர மூர்த்திக்கு நமஸ்காரம். மாயையினின்றும்

வேறுபட்ட சித்ஸ்வரூபியும், தேஜோரூபியுமான அந்த ருத்ர மூர்த்திக்கு நமஸ்காரம். சேதனன், அசேதனன் என்ற வடிவில் பலவிதமாக இருக்கும் இவ்வுலகம், முன்பு உண்டானது; இப்பொழுது உண்டாகிறது; இது எல்லாமாக இருப்பது ருத்ர மூர்த்திதான். அப்படிப்பட்ட ருத்ர மூர்த்திக்கு நமஸ்காரம்

अनुवाकः—२५ कद्रुद्राय ।

மிகச் சிறந்தவரும், மேலான ஞான ரூபியும். அபீஷ்டங்களை அளிப்பவரும், துதிக்கத் தகுந்தவரும், ஹ்ருதயத்தில் இருப்பவரும், விசேஷமாக ஸுகத்தையளிப்பவருமான ருத்ர மூர்த்தியை துதிக்கிறோம். எல்லாமாக இருப்பவர் ருத்ரர்தான். அவருக்கு நமஸ்காரம்.

अनुवाकः—२६ यस्येवं ।

அக்னி ஹோத்ரத்திற்கு ஸாதனமான பாத்திரம் செய்ய வேண்டிய மரம் சொல்லப்படுகிறது. "வைகங்கதம்" என்ற மரத்தால் அக்னிஹோத்ரம் செய்ய ஸாதனமான அக்னிஹோத்ர ஹவணீ என்ற பாத்ரம் செய்யவும். அதனால் செய்யப்பட்ட ஹோமம் பலன் அளிக்கக் கூடியது. அது சித்த சுத்தியை அளித்து மோக்ஷத்தை அடைய ஹேதுவாகும்.

अनुवाकः—२७ कृण्वेपाजः।

இந்த அனுவாகத்தின் 5 மந்திரங்களை ஜபிக்க வும். ரக்ஷோக்ன மந்திரங்கள் இவை. ஆகையால் ராக்ஷஸர்களிடமிருந்து இடையூறு ஏற்படாது.

अनुवाकः—२८ अदितिः ।

இந்த பூமியானது, தேவர்கள், கந்தர்வர்கள், மனிதர்கள், பித்ருக்கள், அஸுரர்கள் ஆகிய ஐவருக்கும் தாய் ஆகும். எல்லா ப்ராணிகளுக்கும் தாயாக இருப்பதும் பூமிதான். கடினமானதும், தைர்யகுணமுள்ளதும், பூஜிக்கத் தகுந்ததும். அந்தர்யாமியின் சம்பந்தமுள்ளதும், உபாஸகர்களை ரக்ஷிக்கவல்லதும், உலகத்திற்கு ஆச்ரயமாக இருக்கிறதும், பயிர்கள் நிறைந்ததும், விஸ்தார மானதும், நிறைய அவயவங்கள் கொண்டதும், எல்லா ரூபமாக இருப்பதும், ப்ராணிகளின் உத்பத்திக்கு முன்பே உண்டானதும், ஸுகரூபியானதும், ப்ராணிகளின் உடல் பூமியிலுலானதுதான். உண்மையானதும், பூமிதான் சதுர்யுகத்தின் முடிவிலும் அழியாமல் இருப்பது பூமிதான் என்று வஸிஷ்டர் கூறியுள்ளார்.

अनुवाकः—२९ आपो वा इदं ।

உலகம் முழுவதும் ஜல வடிவமே. எல்லாப் பிராணிகளும், எல்லோருடைய உயிராயிருப்பதும், பசுக்களும், உணவுப் பொருளும், அமிர்த

மும், ஹிரண்யகர்பரான ப்ரஹ்மாவும், விராட் புருஷனும், ஈச்வரனும், காயத்ரீ முதலிய சந்தஸ்ஸுகளும், ஜோதிஸ்ஸுகளும், யஜுர் மந்திரமும், உண்மையும், இந்திராதி முதலிய எல்லா தேவர்களும்; பூலோகம், அந்தரிக்ஷலோகம், ஸ்வர்க்கலோகம் ஆகிய மூன்றும், ஓங்கார பொருளான பரப்ரஹ்மமும் ஜல வடிவமே.

अनुवाकः—३० आपः पुनन्तु ।

ஆப: புனந்து...ப்ரதிக்ரஹ...ஸ்வாஹா। ஜலாபிமானிதேவதை, அலம்பிவிடுவதால் பூமியை சுத்தப்படுத்தட்டும். அவ்வாறு சுத்தப்படுத்தப்பட்ட பூமி என்னை சுத்தப்படுத்தட்டும். வேதத்திற்கு அதிபதியான பரப்ரஹ்ம ஸ்வரூபம் என்னை பரிசுத்தம் செய்யட்டும். இயற்கையில் சுத்தமான வேதம் என்னை பரிசுத்தம் செய்யட்டும். பிறர் சாப்பிட்ட மிச்சம் போன்ற சாப்பிடக் கூடாததை சாப்பிட்டதால் ஏற்பட்ட தோஷத்தையும், வேதத்தில் செய்யக் கூடாதது என்று கூறிய காரியங்களை செய்ததால் என்னுடைய தோஷத்தையும் போக்கடிக்கட்டும். ஜலங்கள் என்னை சுத்தம் செய்யட்டும். தகுதி இல்லாதவர்களிடமிருந்து பெற்று கொள்ளப்பட்ட பொருளினால் ஏற்பட்ட தோஷத்தையும் போக்கடிக்கட்டும். இவ்வாறு மந்திரத்தினால் ஜபிக்கப்பட்ட ஜலம் என்னுடைய வாயில் ஹோமம் செய்யப்பட்டதாக ஆகட்டும்.

மாலையில் சொல்லப்படும் ஜல ப்ராசன மந்திரம்

अनुवाक:—३१ अग्निश्च ।

அக்னிஶ்ச....ஜுஹோமிஸ்வாஹா। இரவுக்கு அதிபதியான அக்னியும், (கோபம்), கோபத்தை உண்டு பண்ணுகின்ற இந்திரியங்கள் இவைகளிடம் ப்ரார்த்தனை செய்யப்படுகிறது. கோபத்தினால் செய்யப்பட்ட பாபங்களிலிருந்து என்னை காப்பற்றுங்கள். பகலில் மனதினாலும், வாக்கினாலும், கைகளாலும், கால்களாலும், வயிற்றினாலும், ஆண் குறியினாலும் எந்த பாபம் செய்தேனோ, அந்த பாபத்தை பகலுக்கு அபிமானி தேவதை போக்கட்டும். இந்த ஜன்மாவிலோ, ஜன்மாந்தரத்தில் செய்யப்பட்ட பாபமும், என்னையும், என்றும் அழிவில்லாத எல்லோரையும் தூண்டுகின்ற ஸத்யம் என்கிற ஜோதிஸ்ஸில் அர்ப்பணம் செய்கிறேன். தகுதி இல்லாதவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பொருளினால் ஏற்பட்ட தோஷத்தையும் போக்கடிக்கட்டும். இவ்வாறு மந்திரத்தினால் ஜபிக்கப்பட்ட ஜலம் என்னுடைய வாயில் ஹோமம் செய்யப்பட்டதாக ஆகட்டும்.

காலையில் சொல்லப்படும் ஜல ப்ராசன மந்திரம்

अनुवाक:—३२ सूर्यश्च ।

ஸூர்யஶ்ச....ஜுஹோமிஸ்வாஹா। பகலுக்கு அதிபதியான சூரியன்—கோபம், கோபத்தை

உண்டு பண்ணுகின்ற இந்திரியங்கள் இவை களிடம் ப்ரார்த்தனை செய்யப்படுகிறது. கோபத் தினால் செய்யப்பட்ட பாபங்களிலிருந்து என்னை காப்பாற்றுங்கள். இரவில் மனதினாலும், வாக்கினா லும், கைகளாலும், கால்களாலும், வயிற்றினாலும் ஆண் குறியினாலும் எந்த பாபம் செய்தேனோ அந்த பாபத்தை இரவு அபிமானி தேவதை போக் கட்டும். [மற்றவை எல்லாம், அனுவாகம் 31 போலவே அர்த்தம்.]

अनुवाकः—३३ ओमिति ।

'ஓம்' என்ற ஒரு எழுத்தானது ப்ரஹ்ம ஸ்வரூபம். அதற்கு ரிஷி, மந்திரம், தேவதை, ஆகிய மூன்றுமே பரப்ரஹ்மம்தான். தைவீ காயத்ரீ சந்தஸ், ஸர்வஜகத் ஸ்வரூபியான பரமாத்மாவை அடைவதில் இதற்கு விநி யோகம்.

अनुवाकः—३४ आयातुवरद ।

காயத்ரியின் ஆவாஹ்ன மந்திரம். இஷ் டத்தை அளிக்கவல்ல காயத்ரீ சந்தஸ்ஸின் அபிமானி தேவதை அழிவற்றதும், வேதாந்தங் களால் தீர்மானிக்கப்பட்டதும் ஜகத்காரணமுமான பரப்ரஹ்ம தத்துவத்தின் பொருட்டு வரட்டும். பர ப்ரஹ்ம தத்துவத்தை போதிக்கட்டும். சந்தஸ்ஸு களின் தாயான காயத்ரீ எனக்கு வேதாந்தங்களில் கூறப்பட்டுள்ள பரப்ரஹ்ம தத்துவத்தை வந்து சேரும்படி செய்யட்டும். தத்துவத்தை உபதேசிக்

கட்டும். ஸந்தியா காலத்தில் அனுஷ்டிக்கப்படுகிற ஹே ஸரஸ்வதியே! உனது பக்தன், பகலில் செய்த பாபம் பகலோடும், ராத்ரி செய்த பாபம் ராத்ரியோடும் நீங்கி விடுகிறது. சுத்தனுகிறுன் என்பது பொருள்.

अनुवाकः—३५ ओजोऽसि ।

ஹே காயத்ரீ தேவியே! நீ, பலத்திற்கு காரணமான 8வது நாடியாயிருக்கிறுய். சத்ருவை வெல்லக் கூடிய சக்தியாக இருக்கிறுய், பிரகாச மாயிருக்கிறுய், தேவர்களின் தேஜஸ்ஸாக இருக் கிறுய். உலக வடிவமாய் இருக்கிறுய். பூர்ண ஆயுள் வடிவமாக இருக்கிறுய். எல்லா பாபத்தை யும் போக்கவல்லவள். ப்ரணவத்தின் பொருளான பரமாத்மாவாக இருக்கிறுய். அப்படிப்பட்ட காயத்ரீ தேவியே! உன்னை மனதிலேயே ஆவா ஹனம் செய்கிறேன். ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படச் செய்கிற பரமாத்மாவைச் சேர்ந்த உன்னை ஆவாஹணம் செய்கிறேன்.

24 அக்ஷரங்கள் கொண்ட சந்தஸ் ரூபியாக ஆவாஹணம் செய்கிறேன். எல்லா ரிஷிகளை யும் சந்தஸ்ஸுகளையும் ஆவாஹனம் செய் கிறேன். வேத லக்ஷ்மியான காயத்ரீயை (வேத ஸ்ரீயை) ஆவாஹனம் செய்கிறேன். த்யானம் செய்யும் முறை கூறப்படுகிறது. காயத்ரீ மந்திரத்தின் ரிஷி; விச்வாமித்ரர். சந்தஸ்; காயத்ரீ. தேவதை; ஸவிதா. (பரமாத்மா)

காயத்ரீயின் முகம்—அக்னி. சிரஸ்—ப்ரஹ்மா ஹ்ருதயம்—விஷ்ணு. சிகை—(முடி) ப்ரளய காரணனான ருத்திரன். யோனி—ப்ருத்வி பஞ்ச ப்ராணன் ஆகியவற்றின் ஸ்வரூபமாக இருப்பவள். கர்மேந்திரியங்களோடு கூடியவள். பரமாத்மாவின் கோத்ரத்தைச் சேர்ந்தவள் என்று தேவதா ஸ்வரூபமாக தியானிக்க வேண்டும். சந்தஸ் ரூபமாக தியானிக்கும் முறை : 24 அக்ஷரங்கள் கொண்டது. மூன்று பாதங்கள் கொண்டது 6 வேதாங்கங்களை (வயிறு) குக்ஷியாகக் கொண்டது. நான்கு வேதங்களிலும், புராணங்களிலும் உள்ள உபநிஷத்துக்களை சிரஸ்ஸாக உடையவள், என்று தியானித்து காயத்ரீயை ஜபிக்க வேண்டும்.

(இந்த மந்திரம் உபநயனத்தில் விநியோகிக்கப்படுகிறது)

(ஸ்ரீ ஸூ:) ஓம் பூ: பூர்புவஸ்ஸுவரோம்।

பூமி முதலிய பாதாளம் வரைக்கும் உள்ள லோகங்கள்.

பூவ:=பூமிக்கு மேல் உள்ள அந்தரிக்ஷ லோகங்கள்.

ஸுவ:=ஸ்வர்க்க லோகம்

மஹ:=மஹர் லோகம்

ஜந:=ஜனோ லோகம்

தப:=தபோ லோகம்

ஸத்யம்=ஸத்ய லோகம்

இந்த 14 லோகங்களும் ப்ரஹ்மத்தினுல் ஸ்ருஷ்டிக்கபட்டதினுல், ஸ்ருஷ்டிக்கு காரணமான ப்ரஹ்ம ஸ்வரூபமாக, த்யானிக்கப்படுகின்றன.

அல்லது

அகார, உகார, மகார வடிவமான ஓம்கார மானது ப்ரஹ்ம - விஷ்ணு - மஹேச்வர ஸ்வரூப மான பரமாத்மா தான்.

பூ: (भूः) என்று இருக்கக் கூடியதும் பரமாத்ம ஸ்வரூபம் தான்.

புவ: (भुवः) ஸ்திதி காலத்தில் எல்லா வஸ்து வும் இவரிடத்தில் இருப்பதால் பரமாத்மா ஸர்வ ஸ்திதி காரணமாக த்யானிக்கப்படுகிறார்.

ஸுவ: (सुवः) சோபனமான சனகாதி முனிவர் களால் சூழப்பட்ட பரமாத்ம ஸ்வரூபம்.

மஹ: (महः) மோக்ஷத்தை அடைய விரும்புகிற வர்களால் பூஜிக்கப்படுவதால் பரப்ரஹ்ம ஸ்வ ரூபமே மஹஸ் என்று சொல்லப்படுகிறது.

ஜந: (जनः) ஸர்வ ஜகத்திற்கும் ஸ்ருஷ்டி காரணம் ப்ரஹ்ம ஸ்வரூபம்.

தப: (तपः) சூர்யனுக இருந்துக் கொண்டு உலகத்தை ப்ரகாசிப்பதால் தபோ வடிவம் ப்ரஹ்மமே.

ஸத்யம் (सत्यं) எந்த இடத்திலும், எந்த காலத்திலும் அழியாத இருக்கக் கூடிய வஸ்து ப்ரஹ்ம ஸ்வரூபம்.

இவ்வாறு 7 வியாஹ்ருதிகளும் பரப்ரஹ்ம ஸ்வரூபத்தையே தெளிவு படுத்துகின்றன.

ஓம் தத் ஸவிதுர்வரேண்யம்...ப்ரசோதயாத்.

எவர் நமது புத்தி வியாபாரங்களை தூண்டு கிறாரோ, அந்த ஸவிதா என்ற தேவரின் உபாஸிக்கத் தகுந்த தேஜஸ்ஸை (ப்ரஹ்மத்தை) த்யானிக்கிறோம்.

ஓமாபோ...பூர்புவஸ்ஸுவரோம்.

ஆப: (आपः) நதி, ஸமுத்திரம் இவைகளிலுள்ள ஜலங்களும்,

ஜ்யோதி: (ज्योतिः) சூரிய, சந்திராதி வடிவங் களும்,

ரஸ: (रसः) துவர்ப்பு, கசப்பு முதலிய ஆறு ரஸங்களும்,

அம்ருதம் (अमृतम्) தேவர்களால் பருகப்பட்ட அமிர்தமும்,

ப்ரஹ்ம (ब्रह्म) ப்ரணவத்தினுல் எடுத்து கூறக் கூடிய ப்ரஹ்ம ஸ்வரூபமும்,

பூர்புவஸ்ஸுவः (भूर्भुवस्सुवः) பூமி, அந்தரிக்ஷம்; தேவலோகம் என்ற மூன்று உலக வடிவமாயும். இருப்பது, (ॐ) ஓம் ஓம்காரமே.

காயத்ரீ உபஸ்தான மந்திரம்

अनुवाकः—३६ उत्तमे ।

பூமியிலுள்ள மேரு மலையின் சிகரத்தில் காயத்ரீ தேவி வஸிக்கிறாள். ஹே காயத்ரீயே! உபாஸர்களான ப்ராஹ்மணர்களுக்கு அனுக்ரஹ அளித்து ஸுகமாக தனது இடமான மேரு சிகரத்திற்கு செல்வாயாக.

சூரிய மண்டலம் ப்ரஹ்மலோகம் இரண்டு இடத்திலும் உண்டானவளும் காற்று போல் அந்தர்யாமியாக இருந்துக் கொண்டு ப்ராணிகளை காண்டுபவளும், வேதங்களின் தாயாரும், உபாஸகருக்கு வரத்தை கொடுப்பவளுமான காயத்ரீதேவி என்னால் துதிக்கப்பட்டு பூமியில் வஸிக்கின்ற எனக்கு தீர்காயுஸ்ஸையும், செல்வத்தையும், ப்ரஹ்ம வர்ச்சஸ்ஸையும் அளித்துவிட்டு 14 லோகங்களுள் சிறந்ததான ப்ரஹ்ம லோகத்திற்கு செல்வாயாக.

अनुवाकः—३७ घृणि ।

சூரிய பகவான் ஆகாய மார்க்கமாக செல்கிறார். எல்லோரையும் காலையில் வேலை செய்ய காண்டுபவர்.

காந்தியுள்ளவர். ப்ரபை போல் நித்யமானவர். சூரியனிடமிருந்து மழை மூலம் உண்டான இனிய ஜலம் நதிகளில் ஓடுகிறது. ஆதித்யன் பரமாத்ம ஸ்வரூபமானவர். அவர் ஸத்ய ஸ்வரூபி. உண்மை பேசுதல், 6 ரஸங்கள், ஜலங்கள், சந்திரன், அக்னி, பதார்த்தங்களின் ஸாரம், அம்ருதம் 3, வேதங்கள், மூவுலகங்கள், ஓங்காரம் எல்லாம் சூரியன்தான் என்று மனதால் பாவிக்க வேண்டும்.

अनुवाकः—३८ ब्रह्ममेतु माम् ।

1. ஞானத்தை அடைய இடையூராக இருக்கின்ற ப்ரம்மஹத்யாதி பாபங்களை போக்க வல்லவை த்ருஸ்-பர்ணம் என்ற மந்திரங்கள். இதனுடைய அர்க்த சுருக்கம், கீழே கொடுக்கப் படுகிறது. பரம தத்வமான ப்ரம்ம ஸ்வரூபம என்னை அடையட்டும். தேன் போல் பரமானந்தத்தை அளிக்கும் இனிமையான வஸ்து என்னை அடையட்டும். என்னை ப்ரம்மமே வந்து அடையட்டும். மற்ற அற்பமான தைவங்கள் என்னை வந்து அடைய வேண்டாம். உமாதேவியோடு (ப்ரம்ம வித்யா) கூடிய பரமாத்ம ஸ்வரூபமே! உனது ப்ரஜைகளான தேவர்கள், மனுஷ்யர்கள் போன்றவர்களை குறிப்பிடும் பொழுது, நான் உங்களை வழிபடுகிற சிறிய பையன். நான் உனது ப்ரஜைகளின் இடையே சிறிய குழந்தை போல் உனது கருணைக்கு பாத்திரமானவன். ஆகையால் இந்த ஸம்ஸாரமாகிற

கெட்ட ஸ்வப்னத்தை போக்கவல்ல பரமேச்வரரே! ஸகிக்க முடியாத இந்த ஸம்ஸார பந்தத்தை அழிப்பாயாக. ஹே பரமாத்மாவே! எந்த உமது நித்ய ரூபமான பஞ்ச ப்ராணங்கள் இருக்கின் றனவோ. அவைகளை உன்னிடத்தில் ஹோமம் செய்கிறேன். இந்திரியங்களை கட்டுப்படுத்தி ஏகாக்ரசித்தம் உள்ளவனாக இருப்பேன். பாக்கி மந்திரங்கள் போல் இல்லாமல் சிஷ்யன் கேட்கா மல் இருக்கும்போதே. த்ருஸுபர்ண மந்த்ரத்தை ப்ராம்மணனுக்கு உபதேசிக்க வேண்டும். எந்த ப்ராம்மணர்கள் இந்த உபதேசத்தின் மூலம் த்ருஸுபர்ண மந்த்ரத்தை எப்பொழுதும் பாரா யணம் செய்கிறார்களோ அவர்கள் ப்ரம்மஹத்தி பாபத்தை போக்கடிக்கிறார்கள்.

2. அவர்கள் பரமாத்ம ஸ்வரூபத்தை அடை கிறார்கள். மேலும் சாப்பிடும் பங்க்தியில் 1000 பேர்களை சுத்தப்படுத்துகிறார்கள். ப்ரணவத் தினால் சொல்லக்கூடிய பரமாத்ம ஸ்வரூபன்தான் த்ருஸுபர்ண மந்த்ரத்திற்கு தேவதை.

अनुवाकः—३९ ब्रह्म मेधया.....।

ii எல்லா உலகத்திற்கும் காரணமாயும் வேதாந்த வாக்யங்களால் அறியத்தகுந்த ப்ரம்ம ஸ்வரூபம், குருவினால் உபதேசக்கப்பட்ட மஹா வாக்யங்களாலேயும், அதனுடைய அர்த்தத்தை யும் ஸதா த்யானம் செய்வதாலேயும் அடையப்

படுகிறது. தேன்போல் ஆனந்தத்தை அளிக்கவல்ல அந்த ப்ரம்ம ஸ்வரூபத்தை வேதாந்த வாக்யார்த்த த்யானத்தின் மூலம் அடைப்படுகிறது. எல்லா வற்றையும் தூண்டிவிடும் தேவனே, இன்று எங்களுக்கு சிஷ்யன், சிஷ்யனுடைய சிஷ்யன் போன்ற மூன்று தலைமுறை சிஷ்ய பரம்பரையை கொண்ட ஆசார்யர் என்ற நல்ல பாக்யத்தை அளிப்பாயாக. கெட்ட ஸ்வப்னம் போல் உள்ள த்வைதம் என்ற தோற்றத்தை அகற்றுவீராக. ஹே அந்தர்யாமி. யான தேவனே! ஞானத்திற்கு ப்ரதிபந்தமாக இருக்கின்ற எல்லாவிதமான பாபங்களையும் போக்கடிப்பீராக. தவறான எண்ணங்கள் நீங்கி உண்மையான தத்வ ஞானம் எது உண்டோ, உபாஸகனான எனக்கு அதை கொடுப்பீராக.

காற்று எனக்கு சுகமாக இருக்கும்படி வீசட்டும். நதி ஸமுத்திரங்கள் போன்றவை எனக்கு ஆரோக்யத்தை கொடுக்கும் ஜலத்தை கொடுக்கட்டும். நெல் போன்ற தான்ய ராசிகளும் எங்களுக்கு இனிமையான பத்யமான வஸ்துக்களாக இருக்கட்டும். இரவிலும், பகலிலும் வித்யார்த்தியான எனக்கு அனுகூலமான சுகம் ஏற்படட்டும். அதாவது காலத்தினால் இடையூறுகள் ஏற்பட வேண்டாம். பூமியில் உள்ள புழுதி கூட, முள் கற்கள் இல்லாமல் அனுகூலமாக இருக்கட்டும். மேலும் எங்களுக்கு தந்தை போன்ற தேவலோகமும் இனியதாக இருக்கட்டும்.

அதிகமழை போன்ற இடையூறுகள் இல்லா மல் இருக்கட்டும். மா, பலா போன்ற மரங்களும் இனிமையான பழங்களை உடையதாக இருக்கட் டும். சூரியனும் அதிகமான உஷ்ணத்தை கொடுக் காமல் அனுகூலமான வெளிச்சத்தை கொடுப்பவ ராக இருக்கட்டும். பசுக்களும் எங்களுக்கு உயிர் வாழ்வதற்கு காரணமான இனிமையான பாலை உடையவைகளாக இருக்கட்டும். இந்த த்ருஸ- பர்ண மந்திரங்களை படிப்பவர்கள் ப்ருஹ்மஹத்தி பாபத்தை போக்கடிக்கிறார்கள். மற்ற பலன்கள் முன் அனுவாகத்தில் உள்ளபடியே.

अनुवाकः—४० ब्रह्म मेधवा ।

ப்ரப்ரம்ஹ ஸ்வரூபம் யாக யஞ்யத்தை உடையது. இனிமையான பலன்களை கொடுக்கக் கூடிய யக்ஞகளுடன் கூடியது. அக்னி, இந்திரன் போன்ற தேவர்களுள் சதுர்முக ப்ரம்மா வாக பரமாத்மஸ்வரூபம் இருக்கிறது. காவ்ய நாடகாதி எழுத்தாளர்களுள் நல்ல சப்த ஸாமர்த் தியம் உள்ள வியாஸர், வால்மீகி போன்ற உருவத்தில், பரமாத்மா இருக்கிறார். வைதிக மார்க்கத்தில் ஈடுபட்ட ப்ராம்மணர்களுள் கோத்ர ப்ரவர்த்தகரான வசிஷ்டாதி ரூபத்தில் இருக்கிறார். நால்கால் ப்ராணிகளில் அதிக வலிமை வாய்ந்த எருமை மாடாக இருக்கிறார். பறவைகளுள் பலம் வாய்ந்த கழுகாக இருக்கிறார். காடுகளை வெட்டும்

கத்தியாகவும் இருக்கிறார். யாகத்திற்கு காரண மான ஸோமலதையாக இருந்து கொண்டு மந்த்ர சப்தத்தோடு கூடியவராக இருந்து கொண்டும், சுத்தி செய்யக்கூடிய கங்கை, தர்ப்பம் போன்ற த்ரவ்யமாகவும் இருக்கிறார். எந்த புருஷன் விவேகத்தினால் அக்ஞானத்தை விடுகிறானோ, அவனுக்கு உலகம் முழுவதுமே ப்ரம்ம ஸ்ரூபமாக தோன்றுகிறது. இந்த கருத்தை கீழ்கண்ட மந்த்ரம் கூறுகிறது.

மந்த்ரத்தின் பொருள்:-

எப்பொழுதும் சென்று கொண்டே இருக்கிற சூரிய பகவான் சுத்தமான ஆதித்ய மண்டலத்தில் இருக்கிறார். ஸுத்ராத்மாவாக இருந்து கொண்டு உலகத்திற்கே வாஸ ஸ்தானமாக இருப்பதால் ஆதித்யன் வஸு எனப்படுகிறார். வாயுவினுடைய ரூபத்தில் அந்தரிக்ஷத்தில் சஞ்சரிப்பதால், அந்தரி க்ஷத்தில் இருப்பவராக இருக்கிறார். ஹோமத்தை நடத்தித் தருபவரான ஆஹவனீ யாக்னி ரூபத் தில் இருக்கிறார். ஹோதா என்ற வடிவில் ஸோம யாகம் போன்ற யாகங்களில் அங்கமான வேதி என்ற இடத்தில் அமர்ந்து இருக்கிறார். அதிதியாக இருந்து கொண்டு, போஜனம் அளிப்பவர் வீட்டில் தங்குபவராக இருக்கிறார். மனிதர்களிடத்தில் கர்மானுஷ்டானம் செய்யும் ஜீவாத்மாவாக இருக் கிறார். காசி முதலிய சிறந்த க்ஷேத்திரங்களில் பூஜிக்க தக்கவராக இருக்கிறார். வைதிக கர்மாவில்

பயன் வடிவில் இருக்கிறார். ஆகாசத்தில் நக்ஷத்ரம் போன்ற வடிவில் இருக்கிறார். நதீ ஸமுத்ரம் இவைகளில் உண்டான சங்கு, முதலை போன்ற வடிவில் இருக்கிறார். பசுக்களிடமிருந்து பாலாக பருகுகிறார். உண்மையிலுல் ஏற்படும் கீர்த்திப் வடிவில் இருக்கிறார்.

மலைகளில் முளைக்கும் மரங்கள் போன்ற வடிவில் இருக்கிறார். ஸ்தாவர ஜங்கமமான இந்த உலகம் ருதம் என்று சொல்லப்படுகிறது. மேலும் எங்கும் வியாபித்த நித்ய வஸ்துவான பரப்ரம்ஹ வ டி வி ல் இருக்கிறார். அக்ஞானிகளுடைய பார்வையில் உலகமாக தென்படுவது எல்லாம் ஞானிகளுடைய பார்வையில் பிரம்மமேதான். மூன்று பக்ஷிகளுடைய ஸ்தானமாகவோ ப்ரம்மா, விஷ்ணு, மஹேஸ்வர வடிவிலேயே அல்லது விச்வன் தைஜஸன், ப்ராஞ்யன் அல்லது, விராட் புருஷன், ஹிரண்ய கர்பன், ஈச்வரன் என்று சொல்லப்படும் மேற்கூறியவர்கள் பரமாத்ம ஸ்வரூபத்திலிருந்து உண்டானவர்கள். அந்த பரமாத்மாவின் மஹிமையை சொல்லு வதால் இந்த மந்த்ரமும் த்ருஸ்டபர்ணம் எனப் படுகிறது.

ஹே பரமாத்மாவே! ரிக்வேத ரூபியான உமக் காக இந்த சமித்தை அக்னியில் வைக்கிறேன். அக்னியில் என்னுல் ஹோமம் செய்யப்பட்ட நெய் தாரைகளை உம்மை நோக்கி நதிபோல் பெருகி

ஓடட்டும். தேவர்கள் பருகக்கூடிய தீர்த்தமாக வும், மனதிலுல் பரிசுத்தமானவையாகவும், உள்ளத்திலுல் ஹ்ருதய கமலத்தில் உள்ள பாவத் திலுல் தூய்மை ஆனவைகளாகவும் அந்த தாரை கள் இருக்கின்றன. ஹ்ருதய சுத்தி இல்லா விடில் அவைகள் பரித்தமானவைகளாக ஆகாது. இப் படிப்பட்ட நெய்யின் தாரையானது எல்லா தேவதைகளுக்கும் அளிக்கிறேன்.

இந்த ஆஜ்யதாரைகளின் நடுவில் ஆஹவனீ யாக்னியில் எல்லா தேவதைகளுக்கும் இனிமை யான ஹவிர்பாகத்தை பிரித்துக் கொடுத்துக் கொண்டு ஸுபர்ணர் இருக்கிறார். அவர் ஜோதி ஸ்வரூபமாக இருக்கிறார். எல்லா பிராணிகளுடைய சரீரம், கூடு இவைகளுக்கு ஆச்ரயமாக இருக் கிறார். இவ்வாறு இருக்கிற பரமாத்மாவை சுற்றி லும் ஏழு ரிஷிகள் இருக்கிறார்கள். அவர்கள் நினைத்த மாத்திரத்திலுலேயே பாபத்தை போக் கடிப்பவர்கள். அம்ருத தாரை போன்ற ஆஹுதி தாரையை அந்தந்த தேவதைகளுக்கு கொடுத்து அவர்களுக்கு த்ருப்தியை உண்டு பண்ணுகிறார்கள்.

இப்படிப்பட்ட ரிஷி மண்டலத்தின் நடுவில் இருப்பவர் பரமாத்மா. இப்படிப்பட்ட த்ருஸு பர்ண மந்த்ரத்தை சிஷ்யர்களுக்கு கேட்கா மலேயே சொல்லி கொடுக்க வேண்டும். இந்த மந்த்ரத்தை ஜபிப்பவர்கள் வேத சாஸ்திர

முறைப்படி அனுஷ்டானம் செய்கின்ற ப்ராஹ்மணனையோ, அல்லது சக்ரவர்த்தியையோ கொன்ற பாபத்தை போக்குகிறார்கள். மற்ற பலன்கள் முன் அனுவாகங்களில் சொன்னபடி.

மேதா ஸூக்தம்

अनुवाकः—४१ to ४४ मेधादेवी ।

ஒரு நூலை அர்த்தத்துடன் மனத்தில் நிலையாக நிறுத்திக் கொள்ளும் சக்தி "மேதா" எனப்படும். அதற்கு அபிமானியான தேவதை ப்ரீதியுடன் எங்களை வந்து அடையட்டும். மேதா தேவியானவள் எல்லாவற்றையும் நன்கு புரிந்து கொள்ளும் சக்தி வாய்ந்தவள்! மங்களகரமானவள். பக்தர்களுக்கு அனுக்ரஹம் செய்யவேண்டும் என்ற நல்ல மனம் படைத்தவள். ஹே தேவியே! உன் அருளால் நான்கு வித புருஷார்த்தங்களுக்கு உபயோகமில்லாத சொற்களை உதறி எறிந்து விட்டு வேத மார்க்கத்திலேயே இருந்து கொண்டு ஸத்புத்ரர்களாகவும் ஸத்சிஷ்யர்களாகவும் இருந்து கொண்டு யாகாதிகளை அனுஷ்டித்துக் கொண்டு அதன் மூலம் சித்த சுத்தியை அடைந்து பரப்ரஹ்ம தத்துவத்தை எடுத்து கூறுவோம்.

ஹே மேதா தேவியே! உன்னால் அனுக்ரஹிக்கப்பட்டவன் ரிஷியாக இந்திரியங்களுக்கு அப்பாற்பட்டதாயும், பார்க்கக் கூடிய சக்தியுள்ளவனுயும் ஆகிறான். மேலும் உனது அருள் பெற்றவன்

செல்வங்களைப் பெறுகிறான். உனது அருள் பெற்றவன் பசு, குதிரை தங்கம், வெள்ளி, பல வித தான்யம் போன்ற விசித்தரமான செல்வத்தை அடைகிறான். அப்படிப்பட்ட மேதா தேவியே! தனாதிபதியான தேவன், தரித்திரனைச் சீரும் சிறப்புமாக ஆக்குகிறானே, அப்படி அறிவுச் செல்வம் குறைந்த எங்களை அனுகிரஹித்து அறிவில் சிறந்தவர்களாக ஆக்குவாயாக.

மேதாவிலாசத்தை அளிக்க வல்ல இந்திராதி களைப் பிரார்த்திக்கும் மந்திரங்கள் கூறப்படு கின்றன.

அதன் பொருள் :— இந்திரன், ஸரஸ்வதி, தாமரை மலர் மாலை அணிந்த இரு அச்வினி தேவர்கள், எல்லோரும் எனக்கு மேதா விலாசத்தை அளிக்கட்டும். அப்ஸரஸ் என்ற தேவஸ்த்ரீகளிடம் எந்த மேதா விலாஸம் நிறைந்த மனம் உள்ளதோ, ஹிரண்யகர்பர் முதலிய தேவர்களிடத்தில் எந்த மேதாவிலாசம் உள்ளதோ, வேத சாஸ்திர வடி வில் எந்த மேதா விலாசம் உள்ளதோ, எந்த அந்த எல்லா மேதா சக்தியும் எல்லாம் கொடுக்க வல்ல காமதேனுவாக இருந்து கொண்டு என்னை அனுகிரஹிக்கட்டும்.

மேதா சக்தி என்னை வந்து அடையட்டும். அந்த சக்தியானது எல்லாவற்றையும் கொடுக்கக் கூடியது. சகல சாஸ்திரங்களையும் தரித்துக் கொள்ள சக்தியுள்ளதாக இருப்பதால், பல வடிவி லுள்ளது. தங்கமயமான தேவதா சரீரத்தை உடையது. எங்கும் வியாபித்திருப்பதால் உலக வடிவமானது. புருஷார்த்தங்களை அடைய விரும்புகிறவர்களால் உபாஸிக்கத் தகுந்தது, சக்தி வாய்ந்தது. கோ க்ஷீராதி ஸத்திஞல் எங்களை திருப்தி செய்கின்ற அந்த மேதாசக்தி யானது ஸுகமாக இருந்துக் கொண்டு என்னை அனுக்கிரஹிக்கட்டும்.

மேலும் மேதா விலாஸத்தை அளிக்கும்படி, அக்னி முதலிய தேவதைகளை பிரார்த்திக்கும் மந்திரம்.

அக்னீ பகவான் வேதம், சாஸ்திரம் முதலிய நூல்களைப் படித்து புரிந்து கொள்ளும் சக்தியை யும், நல்ல புத்ர ஸந்ததியையும், ப்ரஹ்ம வர்ச்ச ஸையும் எனக்கு அளிக்கட்டும். எல்லாம் வல்ல இந்திரன் மேதா விலாசத்தையும், நல்ல புத்ரர் களையும், நரம்புகளுக்கு தளர்ச்சி ஏற்படாத உடல் வலிமையும் எனக்கு அளிக்கட்டும். எங்கும் பிரகாசிக்கின்ற சூரிய பகவான் மேதா விலாஸத் தையும் நல்ல புத்திரர்களையும், பார்த்த மாத்திரத்

தில் சத்ருவை வசப்படுத்தக் கூடிய முக காந்தியை கொடுக்கட்டும்.

இவ்வாறு மேதா ஸூக்தத்தையும் அர்த்தம் தெரிந்து குரு முகமாக அத்யயனம் செய்து தினமும் பாராயணம் செய்தால், புத்தி கூர்மையும் எல்லா விஷயங்களிலும் தேர்ச்சியடையக் கூடிய தகுதியும், சமயோசித புத்தியும் (Presence of mind) அடைவான்.

தற்காலத்தில் ப்ராஹ்மண சமுதாயத்தில் புத்தி கூர்மை குறைவை அகற்றுவதற்கு இது ஒரு பெரிய உபாயம். இதன் மூலம் புத்தி கூர்மையை அடைந்து எல்லாத் துறையிலுமே சிறப்பாக விளங்கக்கூடிய வாய்ப்பு கிடைக்கும் நம் முன்னோர்களின் புத்தி கூர்மையை இதன் மூலம் திரும்பப் பெற்று, நவீன சாதனங்களை ஆராய்ச்சி செய்து, புரிய பொருளைக் கண்டு பிடிக்கக்கூடிய சக்தியையும் அடைவோமாக.

अनुवाकः—४५ to ५३ मृत्युसूक्तं ।

அபம்ருத்யு பரிஹாரத்திற்காக இதை ஜபம் செய்யலாம். ஸ்மார்த்தத்தில் ம்ருத்யுஞ்ஜய ஹோம மந்திரங்களாக பயன் பெறுகிறது.

अनुवाकः—४५ अपेतु मृत्युः ।

ஹே பரமாத்மாவே! ம்ருத்யு என்னை விட்டு விலகிச் செல்லட்டும். மோக்ஷம் எங்களுக்கு

கிடைக்கட்டும். யமன் எங்களுக்கு நரகபயமில்லாமலிருக்கும்படி அபயமளிக்கட்டும். முதிர்ந்த இலைகள் உதிர்வதுபோல எங்கள் பாபம் அழியட்டும். இந்திரன் அனுபவிக்கும் போக போக்யங்கள் எங்களை வந்தடையட்டும்.

अनुवाकः—४६ परं मृत्योः ।

ஹே, ம்ருத்யுவே! நீ தேவயானம், பித்ருயானம் என்ற மார்க்கத்தில் வராமல் உனது சொந்த மார்க்கத்தில் செல். நான் தேவயானம் வழியாகச் செல்லுகிறேன். கண், காது உள்ள உன்னிடம் எனது பிரார்த்தனை இதுதான். நீ, உனது மூன்றாவது வழியில் செல். எங்களது புத்ராதிகளையும், வேலைக்காரர்களையும் ஹிம்ஸிக்காதே.

अनुवाकः—४७ वातंप्राणं ।

நாங்கள் ப்ராணிகளிடத்தில் ப்ராணுபாநாதி வாயுக்களாகவும், அந்தரிக்ஷத்தில் காற்றுகவுமிருக்கின்ற பரமாத்ம ஸ்வரூபத்தை மனதால் தியானிக்கிறோம். அந்த பரமாத்மாதான் உலகத்தை ரக்ஷிப்பவர்.

அப்படிப்பட்ட பரமாத்மா ம்ருத்யுவினிடமிருந்தும் பாபத்திலிருந்தும் காப்பாற்றட்டும். நீண்ட காலம் ஜீவித்து முதுமையை நாங்கள் அடைவோமாக.

अनुवाकः—४८ अमृतः ।

வேதங்களை காப்பாற்றும் பரமாத்மாவே! யம பயத்திலிருந்து என்னை காப்பாற்று. அபகீர்த்தி யிலிருந்தும் விடுவிப்பாயாக. எனக்கு பரலோக ஸுகத்தை அளிப்பாயாக. தேவ வைத்யர்களான அச்வினி தேவர்கள் ம்ருத்யுவை எங்களிடமிருந்து துரத்தட்டும். ஹே அக்னியே! ஹவிர்பாகம் மூலம் தேவர்களின் பசிப்பிணியை போக்குபவரே, நீர் எங்களைக் காப்பாற்றி இந்திரன் இருக்கும் இடத்தில் கொண்டு சேர்ப்பீராக.

अनुवाकः—४९ हरः हरन्त ।

உயிரை அபஹரிக்கும் ஸ்வபாவமுள்ள, பிராணனை அபஹரிக்கின்ற ம்ருத்யு தேவனை எல்லா தேவர்களும் அனுசரித்துச் செல்லுகிறார் கள். அந்த ம்ருத்யு தேவர் உலகத்திற்கு யஜமானன். பூஜிக்கத் தகுந்த தேவர்களுள் சிறந்தவர். இந்த கர்மாவில் ஸமான ரூபமுள்ள மந்த்ர ஸமூகம் (யஜமானனை) நோக்கி வந்தது. ஆகையால் ஹே ம்ருத்யுவே, மந்த்ரத்தினால் சந்தோஷமுற்று, எனது வழியை அழிக்காதே, எனது எதிரியை அழிப்பதற்காக யுக்தி செய் வாயாக.

अनुवाकः—५० शत्रुः ।

ஹே பரமாத்மாவே! ஆஹவனீயம் முதலிய அக்னிகளில் ஸமித்துகளை அர்ப்பணித்து இவ் வுலகம், பரலோகம் இரண்டையும் நான் அடை வேன். உனது அனுக்ரஹத்தால் இரு லோகங்களை யும் அடைந்து, அபம்ருத்யுவை கடந்து விடுவேன். பூர்ண ஆயுஸ்ஸுடன், இவ்வுலகில் இருந்து விட்டு ஸ்வர்க்கத்தை அடைவேன்.

अनुवाकः—५१ मा हिंसः ।

ஹே, ம்ருத்யுவே! எனது உடலுறுப்பை ஊனமாக்காதே. என்னை கொல்லாதே. எனது பலத்தை அழிக்காதே. வேறு எனது வஸ்துவை யும் திருடாதே. எனது ஸந்ததிகளை ஹிம்ஸிக் காதே. ஹே உக்ரமான தேவனே! எனது ஆயுஸ்ஸை அழித்துவிடாதே. மனிதர்களின் பிரஸித்தமான உன்னை ஹவிஸ்ஸினால் ஸேவிக் கிறேம்.

अनुवाकः—५२ या वो महान्तं...रिषः ।

ஹே ருத்ரனே! எங்களுடைய வயதான புருஷரையும், சிறுவரையும், யுவாக்களையும், கர்ப்பத்தில் இருக்கும் குழந்தையையும், எங்களது தகப்பனாரையும், தாயாரையும் ஹிம்ஸிக்காதே. எங்களது ப்ரியமான சரீரத்தையும் ஹிம்ஸிக் காதே.

अनुवाकः—५३ मानस्तोके.... ।

ஹே ருத்ரனே! எங்கள் குழந்தைகளை, முக்கியமாக புத்திரனை ஹிம்ஸிக்காதே. எங்கள் ஆயுளையும் ஹிம்ஸிக்காதே, எங்களின், ஆடு-மாடுகள், குதிரைகள் இவைகளையும் ஹிம்ஸிக்காதே. கோபம் கொண்டு எங்கள் வீரர்களான வேலைக்காரர்களை கொல்லாதே. நாங்கள் ஹவிஸ்ஸுகளுடன் உனக்கு நமஸ்காரம் மூலமாக பணிவிடை செய்வோம்.

ஹே ருத்ரனே! பசுக்களை அழிக்கின்றதும், புருஷர்களை அழிக்கின்றதும், வீரர்களை அழிக்கின்றதுமான உக்ர ரூபமானது, எங்களுக்கு வெகு தூரத்தில் இருக்கட்டும். உனது சுகத்தை அளிக்கும் ஸௌம்ய ரூபம் எங்களிடத்தில் இருக்கட்டும். மேலும் எங்களை எல்லா விதத்திலும் காப்பற்றுவாயாக. ஹே ருத்ரனே! எங்களைப் பற்றி தேவர்களிடத்தில், மற்ற எஜமானர்களை விட மேலாகக் கூறு. ஹே ருத்ரனே! இவ்வுலகம், மேல் உலகம் இரண்டையும் விருத்தி செய்பவர் நீ. ஆகையால் நீர் எங்களுக்கு சுகத்தை கொடுப்பாயாக.

अनुवाकः—५४ प्रजापते ।

ஹே பரமேச்வரனே! உன்னைத் தவிர வேறு யாரும் இவ்வுலகத்தையும், ப்ராணிகளையும் படைத்து, காத்து, அழிக்கும் செயலை செய்வ

தில்லை. ஷை காரியத்தை செய்யும் உமக்கு, ஹவிர் பாகம் அளிக்கிறேரும். எந்த இஷ்டங்களை அடைய விரும்பி உனக்கு ஹோமம் செய்கிறேமோ, அது எங்களுக்கு கிடைக்கட்டும். நாங்கள் எல்லாவித செல்வத்திற்கும் அதிபதிகளாக ஆவோம்.

अनुवाकः—५५ स्वस्तिदा विशस्पतिः ।

இவ்வுலகிலும் மறு உலகிலும் ஸுகத்தை அளிப்பவனும், எல்லாவிதமான ப்ரஜைகளுக்கும் பாலகனும், வ்ருத்தாஸுரர்களை கொன்றவனும் ராக்ஷஸர்களை அழிப்பவனும், மூவுலகையும் தன் வசப்படுத்தியவனும், மழையின் மூலம் இஷ்டத்தை பூர்த்தி செய்பவனும், எல்லா இடத்திலும் அபயம் அளிப்பவனுமான இந்திரன், எங்களை எல்லா திக்குகளிலும் எங்கள முன் வந்து காப்பாற்றட்டும்.

अनुवाकः—५६ त्र्यंबकं ।

முக்கண்ணனும், தேஹத்திலிருந்து வீசும் நறுமணத்தை உடையவரும், லௌகிக, வைதிக புஷ்டியை வ்ருத்தி செய்பவருமான பரமேச்வரை கர்மானுஷ்டானம் மூலம் ஆராதிக்கிறேரும். வெள்ளரிக்காய் பழுத்தவுடன் காம்பிலிருந்து விடுபடுவதுபோல் ம்ருத்யுவிடமிருந்து, ஹே பரமேச்வரனே! என்னை விடுவிப்பாயாக. மோக்ஷத்திலிருந்து விடுவிக்காதே.

अनुवाकः—५७ येतेसहस्रमयुतं ।

ஹே ம்ருத்யுவே! ப்ராணிகளை கொல்வதற் காக, உன்னுடைய ஆயிரக்கணக்கான பாசக் கயிறுகளை எல்லாவற்றையும் கர்மானுஷ்டானத் தின் சக்தியினால் தடுத்து விடுகிறோம்.

अनुवाकः—५८ मृत्यवे ।

பாபம் அகலச் செய்யும் ஹோம மந்திரங்கள் இங்கு உள்ளன. ப்ராணிகளை அழிக்கும் ம்ருத்யு தேவனுக்கு ஹவிஸ் அளிக்கிறோம். மறுபடியும் ஆஹுதி செய்கிறோம்.

अनुवाकः— ५९ देवकृतस्य ।

ஹே அக்னியே! தேவர்களுக்கு நான் செய்த பாபத்தை போக்குகின்ற உனக்கு இந்த ஹவிர் பாகம். மனுஷ்யர்களுக்கு நான் செய்த தீங்கை போக்கடிக்கின்ற உனக்கு ஹவிர்பாகம். பித்ரு கர்மாவில் சரிவரச் செய்யாத அங்கத்தின் குறை பாடுகளை நீக்கும் உனக்கு ஹவிர்பாகம். நான் செய்த பாபத்தை போக்குகின்ற உனக்கு ஹவிர் பாகம். மற்றும் பத்னீ, புத்ரர்களால் இழைக்கப் படுகின்ற பாபத்தை போக்கும் உனக்கு ஹவிர் பாகமிருக்கட்டும். எங்கள் ஞாதிகளால் செய்யப் பட்ட பாபத்தை போக்குகின்ற உனக்கு ஹவிர் பாகம். அல்லும் பகலும் செய்யும் நாங்கள் செய்யும் பாபத்தை போக்குகின்ற உனக்கு

ஹவிர்பாகம். ஸ்வப்னம், நல்ல தூக்கம், விழித் திருத்தல் என்ற மூன்று நிலையிலும் நாங்கள் தெரிந்தும், தெரியாமலும் செய்த பாபத்தை போக்குகின்ற அக்னிக்கு ஹவிர்பாகம். நாங்கள் செய்த மிகப் பெரிய பாபத்தை போக்குகின்ற உனக்கு ஹவிர்பாகம் அளிக்கப்படுகிறது.

अनुवाकः—६० यद्देवाश्च ।

கம்பீரமான உள்ளம் படைத்த தேவர்களே! உங்களைப் பற்றி பெரியவன், சிறியவன் என்ற சொல்லால் எந்த தவறு செய்தேமோ, அதை மனதிற்குள்ளேயே வைத்துக் கொள்ளுங்கள். வார்த்தைகளால் ப்ரகடனம் செய்யாதீர்கள். எங்கள் அபராதத்தை பொறுத்துக்கொள்ளுங்கள். நாங்கள் தினமும் ஆயிரக்கணக்கான பாபத்தை செய்கிறோம். ஹே ஸப்த மருத் கணங்களே! கெட்ட நாய் போல் நாங்கள் தவறு செய்கிறோம். அதை நீங்கள் மனதிலேயே வைத்துக் கொள்ளுங்கள். மரணத்தை போக்கவல்லவர் நீங்கள். உங்களுக்கு இந்த ஆஜ்ய ஹவிர்பாகம் இருக்கட்டும்.

अनुवाकः—६१ यावोऽकर्म ।

ஹே மூப்பது முக்கோடி தேவர்களே! உங்களுக்கு நமஸ்காரம். முன்பு சொல்லிய பாபங்களை (மன்மதன்) காமதேவன் செய்தான், நான் செய்ய

வில்லை. காமன்தான் பாபம் செய்கிறான் நான் செய்யவில்லை. காமன்தான் ஜகத்தை தன் வசப் படுத்தி எல்லாவற்றையும் செய்யச் சொல்கிறான். (செய்விக்கிறாள்) நான் செய்விக்கவில்லை. ஹே காமதேவனே! அந்த பாபம் நீங்குவதற்கு இந்த ஆஜ்ய ஹவிஸ் இருக்கட்டும். உனது அழகிய சரீரத்தையுடைய உனக்கு, இந்த ஆஹுதி.

अनुवाकः—६२ मन्युरकार्षित् ।

பாபங்களை கோபம் செய்தது. அதற்கு நமஸ்காரம். கோபம்தான் பாபத்தை செய்கிறது. நான் செய்யவில்லை. பாபத்தை செய்விப்பதும் கோபம்தான்; நான் இல்லை. ஹே கோபமே! மன்யு தேவனை உனக்கு இந்த ஆஹுதி இருக்கட்டும்.

अनुवाकः—६३ तिलाऽजुहोमि ।

எல்லா பாபங்களும் நீங்கி வைராக்யம் பெற்று ஸன்யாஸாச்ரம ஸ்வீகாரம் செய்து கொள்பவன், பாபம் நீங்குவதற்காக செய்ய வேண்டியது பற்றி இந்த 3 அனுவாகங்களில் கூறப்படுகின்றன. இதற்கு தேவதை பரமாத்மாதான். நறுமணம் வீசும் சரீரமுள்ள பரமாத்மாவே! ரஸமான, ஸத்து மாவுகளுடன் கூடிய என்னை உங்களுக்கு ஆஹுதி செய்கிறேன். உங்களது பரம பவித்ரமான குணங்கள் எனது மனதில் இருக்கட்டும்.

ஹே பரமாத்மாவே! எனக்கு பசுக்கள், செல்வம், உணவு, ரஸவஸ்து எல்லா போக்ய வஸ்து, அஷ்டலக்ஷ்மிக்கள் இவைகள் கிடைக் கட்டும். அதற்காக உனது அருள் பெற இந்த ஆஹுதி. ஸ்ரேஷ்ட ராஜ்ய லக்ஷ்மியையும், மோக்ஷ லக்ஷ்மியையும் சரீர புஷ்டியையும் மூவுலகிலும் புகழத் தக்க நல்ல குணங்களையும், தேவ, ரிஷி, பித்ருக்களின் கடன் தீர்த்தலையும், எல்லா ப்ராஹ்மணர்களுள் உத்தமனாக இருத்தலையும் பல புத்ரர்களையும், குரு வேதாந்த வாக்கியங்களில் ஆழ்ந்த நம்பிக்கை, வேத சாஸ்திரங்களை அர்த்தத் துடன் கற்று மறக்காமல் இருத்தலையும், பெண் பேரன் முதலிய சந்ததிகளையும் பகவானை பரமாத்மா எனக்கு நன்கு அளிக்கட்டும்.

अनुवाक:—६४ तिला कृष्ण ।

ஹே பரமாத்மாவே! உனது ஆக்ஞையால் வெளுப்பாயும், கறுப்பாயும், ரோகாதிகளை உண்டு பண்ணுததும், எங்கள் வசத்தில் உள்ளதுமான எள்ளுகள், என்னிடமுள்ள பாபத்தை அகற்றி என்னை புனிதமாக்கட்டும். அதற்கு பரமாத்மா வான உனக்கு இந்த ஹவிர்பாகம் இருக்கட்டும்.

ऋचस ஹே பரமாத்மாவே! உனது ஆக்ஞை யால் எள்ளுகள் எனது பாபத்தை— அதாவது திருடனுடைய அன்னத்தை சாப்பிட்டதால் ஏற்பட்டது, இறந்தவர்களுக்கு 1,3,5,7,9,11வது

காட்களில் செய்யப்படும் நவ சராத்தத்தினுல் ஏற்பட்ட பாபம், ப்ரஹ்மஹத்தி பாபம், குருவின் ஸ்த்ரீயுடன் சேருவதால் ஏற்பட்ட பாபம், பசு மாட்டை திருடியதால் ஏற்பட்ட பாபம், மது அருந்துவதால் ஏற்பட்ட பாபம், சிசுவையோ அல்லது கர்ப்பத்தைக் கலைப்பது போன்ற பாபம், ஆக எல்லா பாபத்தையும் போக்கி எனக்கு சாந்தியை அளிக்கட்டும். அதற்காக பரமாத்மாவுக்கு இந்த ஹவிர்பாகம்.

வேதங்கள் அனைத்தும் அறிந்த பரமாத்மாவே! ராஜ்ய லக்ஷ்மியையும், மோக்ஷ லக்ஷ்மியையும், சரீர புஷ்டியையும், மூவுலகிலும் புகழத் தக்க நல்ல குணங்களையும், தேவ, ரிஷி, பித்ருக்களின் கடன் தீர்த்தலையும், எல்லா ப்ராம்மணர்களிலும் உத்தமனுக இருத்தலையும், பல புத்ரர்களையும், ப்ரக்ஞை என்ற விசேஷ ஞானத்தையும் நீ, எனக்கு அளிப்பாயாக. அதற்காக உனக்கு இந்த ஹவிர் பாகம் கொடுக்கப்படுகிறது.

अनुवाकः—६५ प्राणापानः ।

ப்ராணன் முதலிய 5 வாயுக்கள் இந்த ஆஜ்ய ஹோமத்தினுல் சித்தியடையட்டும். நான் மோக்ஷத்திற்கு ப்ரதிபந்தகமான பாபம் நீங்கிய வனுக பாபத்திற்கு காரணமான ரஜோகுணம் இல்லாதவனுமாக, ஆகி, ஜகத்காரணமான ஒளிப் பிழம்பான பரமாத்ம ஸ்வரூபமாக இருக்கிறேன். அதற்காக இந்த ஆஜ்யாஹுதி இருக்கட்டும்,

वाङ्मन எனது வாக்கு, மனம், காது, கண், நாக்கு, மூக்கு. ஆண்குறி, அந்த கரணத்தின் நிச்சயமான புத்தி, அநிச்சயமான புத்தி. ஸங்கல்பம் (திட்டமிடுதல்) இவைகள் சுத்தி அடையட்டும். நான் பாபமில்லாதவனாகவும், ரஜோ குணமில்லாதவனாகவும், பரமாத்மாவாக ஆவேன், அதற்காக இந்த ஆஜ்யாஹுதி.

त्वक् எனது தோல், சருமம், மாம்ஸம், ரத்தம், கொழுப்பு, ஊந்தண், நரம்புகள், எலும்புகள் இவைகள் சுத்தியடையட்டும். நான் பாபமற்ற வனாகவும், வைராக்யமுள்ளவனாகவும் ஆகி பரமாத்மாவாக ஆவேன். அதற்காக இந்த ஆஹுதி.

शिर: எனது தலை, கைகள், பாதங்கள், விலாப் பக்கங்கள், பின்புறம், மார்பு, வயிறு, கணுக்கால், ஆண்குறி, பெண்குறி, மலம் கழிக்கும் பாகம் இவைகள் சுத்தியடையட்டும். நான் பாபம் நீங்கி, வைராக்யமுள்ளவனாக, ப்ரஹ்மமாக ஆவேன். அதற்காக இந்த ஆஹுதி.

उत्तिष्ठ ஹே பரமாத்மாவே! என்னை அனுக்ர ஹிக்க எழுந்தருள்வாயாக. பரமாத்மா பச்சை, மஞ்சள் நிறமுடையவர். சிவந்த கண்கள் கொண்டவர். மோக்ஷத்திற்கு ப்ரதிபந்தகமான பாபத்தை போக்குபவரே, எனக்கு திரும்ப திரும்ப சுத்தியை கொடு. குரு முகமாக விசேஷமாக

தத்துவ ஞானத்தை அளிப்பவனுக இரு. நான் பாபம் நீங்கி வைராக்யமுள்ளவனுக பரப்ரஹ்ம மாக ஆவேன். அதற்காக இந்த ஆஜ்யாஹுதி.

अनुवाक:—६६ पृथिवी ।

ப்ருத்வி, ஜலம், அக்னி, வாயு, ஆகாசம் இவை எனது பௌதிக சரீரத்திற்கு காரணமானவை. இவைகள் சுத்தியடையட்டும். நான் பாபம் நீங்கி வைராக்யமுள்ளவனுக பரமாத்மாவாக ஆவேன். அதற்காக இந்த ஆஹுதி.

எனது புலன்களால் அறியப்படுகிற சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், வாசனை ஆகியவை சுத்தி அடையட்டும். நான் பாபமற்று வைராக்யமுள்ள வனுக பரமாத்மாவாக ஆவேன். அதற்காக இந்த ஆஹுதி.

எனது மனம், வாக்கு, சரீரம், காரியங்கள் த்ரிகரண சுத்தி அடையட்டும். நான் பாபம் நீங்கி வைராக்யத்துடன் பரமாத்மாவாக ஆவேன். அதற்காக இந்த ஆஹுதி.

ஹரஹர ஹே பரமாத்மாவே! உனது அருளால் வெளியில் காட்டிக் கொள்ளாமல் என்னிடம் உள்ள, நான் என்ற கர்வம் விலகட்டும். பாபமற்று வைராக்யத்தோடு நான் பரமாத்மாவாக ஆவேன். அதற்காக இந்த ஆஹுதி.

ஸுஸ்ரா எனது சரீரம் சுத்தியடையட்டும். அது போல் அந்த:கரணம் சுத்தியாகட்டும். பரமாத்மாவும் மாயா தோஷமில்லாமல் சுத்தி அடையட்டும். நான் பாபமற்றவனுக வைராக்யத்துடன் பரமாத்ம ஸ்வரூபத்தை அடைவேன். அதற்காக இந்த ஆஹுதி. பசிக்கு அதிஷ்டான தேவதைக்கு இந்த ஆஹுதி. பசி, தாகம் இவைகளின் அதிஷ்டான தேவதைக்கு இந்த ஆஹுதி. எங்கும் வியாபித்த பரமாத்மாவுக்கு இந்த ஆஹுதி. ருக்குகளை செய்கிற பரமாத்மாவுக்கு இந்த ஆஹுதி. இந்த கார்ய ப்ரபஞ்சத்தில் காரியம் செய்ய உபகாரியான பரமாத்மாவுக்கு இந்த ஆஹுதி.

ஹே பரமாத்மாவே! பசி, தாகம் ஆகிற மலத்தையும், மூதேவியையும், லக்ஷ்மீகரத்தையும், ஐச்வர்ய மின்மையையும், தனதான்ய ஸம்ருத்தியின்மையையும், இவை எல்லாவற்றையும் அழிக்கிறேன். நீர் எனது, பாபத்தை அழிப்பீராக. அதற்காக இந்த ஆஹுதி. எனது அன்னமய, ப்ராணமய, மனோமய, விக்ஞானமய, அனந்தமய கோசங்களும் சரீரமும் சுத்தியடையட்டும். நான் பாபம் நீங்கியவனுக, வைராக்யமுள்ளவனுக, பரமாத்ம ஸ்வரூபத்தை அடைவேன். அதற்காக பரமாத்மாவுக்கு இந்த ஆஹுதி இருக்கட்டும்.

अनुवाक:—६७ अग्नये स्वाहा ।

இவை நித்யம் செய்ய வேண்டிய "வைச்வ தேவம்" என்ற கர்மாவுக்கு உபயோகமான மந்திரங்கள்.

அக்னி, விச்வேதேவர்கள், த்ருவர், த்ருவக்ஷிதி, அச்யுதக்ஷிதி குற்றம் குறைகளை நீக்கி ஹோமத்தை சரிபடுத்துகிற அக்னி என்ற தேவதைகளுக்கு இந்த அன்ன ஆஹுதி அளிக்கப் படுகிறது. இந்த ஹோமங்கள் அக்னியில் செய்ய வேண்டும். இதற்கு பிறகு உள்ள மந்திரங்களை வீட்டின் பல பாகங்களில் அன்னத்தால் பலி போட வேண்டும். தர்மதேவதை, அதர்மதேவதை ஜலதேவதை, ஓஷதிகள், மரங்கள், இவைகளின் தேவதைகள் இவர்களுக்கு அன்னத்தால் பலி கொடுக்கப்படுகிறது.

ராக்ஷஸர்கள், தேவஜனங்கள், வீட்டிலுள்ள குல தேவதைகள் வீட்டின் ஓரங்களில் உள்ள தேவதைகள், அதன் தலைவர்கள், பஞ்சபூதங்கள், காமதேவன், அதரிக்ஷத்தில் இருக்கும் வாயு, நாம் சப்தத்தின் பொருளான பரமாத்மா, இவ் வுலகில் அசைகின்ற மரம், செடி, கொடிகள், நடக் கின்ற மனிதர் முதலியோர் "நாம" என்ப்படுபவர் இவ்வுலகம் பரமாத்மாவால் ஸம்ஹரிக்கத் தகுந்தது. அப்படிப்பட்ட பரமாத்மாவுக்கு இந்த பலிஹரணம் இருக்கட்டும்.

ப்ருத்வீ, அந்தரிக்ஷம், த்யுலோகம் (த்யாவா ப்ருத்வி அபிமான தேவதை) இவைகளின் அதிஷ்டான தேவதைகளுக்கு, சூரியனுக்கும், சந்திரனுக்கும், நக்ஷத்ரங்களின் அபிமானி தேவதைகளுக்கும், இந்திரன், ப்ருஹஸ்பதி, விராட்புருஷர், ஹிரண்யகர்ப்ப ப்ரஹ்மா இவர்களுக்கு பூமியில் அன்னத்தால் பலி இடப்படுகிறது. பித்ருக்களுக்கு இது பலிஹரணம்.

ப்ரஹ்மாதி ஸ்தாவராந்தத்திற்கு பதியான ருத்ரனுக்கு, இந்த பலிஹரணம். இந்திராதி தேவதைகளுக்கும், பித்ருக்களுக்கும் இந்த பலிஹரணம். பூதம் என்ற தேவர்களுக்கும் பலிஹரணம். மனிதர்களுக்கு இந்த அன்னம் அளித்ததாக இருக்கட்டும். ப்ரஜாபதி தேவதைக்கு பலிஹரணம். சதுர்முக ப்ரஹ்மாவுக்கு அன்ன ரூபமான பலிஹரணம். எவ்வாறு கிணறு நிறைய நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும் வற்றுத ஜலமுள்ளதாக இருக்கிறதோ, அது போல் எனக்கும் பரமாத்மாவின் அருளால் குறையில்லாத தான்யராகி இருக்கட்டும். படி, மரக்கால் போன்றவைகளால் அளக்கக் கூடியதாகவும், குறைவற்றதாகவும், தான்யம் இருக்கட்டும், பக்தர்களுக்கு செல்வத்தை அளிக்கும் தனதானீ (धनधानी) என்ற தேவதைக்கு இந்த அன்னத்தினாலான பலிஹரணம் இருக்கட்டும்.

ஏஷா: எந்த க்ரஹ விசேஷங்கள் பூமியில் பலிஹரணத்தை விரும்பி அல்லும் பகலும்

சஞ்சரிக்கின்றனவோ, அந்த காலாக்னியான ருத்ரனுக்கு ஏவலாளிகளான அவைகளுக்கு புஷ்டியை விரும்புகின்ற நான் அன்னத்தால் பலிஹரணம் கொடுக்கிறேன். தனதான்யாதி பதியான பகவான் பரமேச்வரர் தனதான்யாதி புஷ்டியை என்னிடத்தில் உண்டுபண்ணட்டும்.

अनुवाकः—६८ ओतद्ब्रह्म ।

இந்த மந்திரங்களை ஜபம் செய்தாலே பாபம் விலகும். வேதாந்த வாக்கியங்களால் கூறப்படும் வஸ்து மிகப் பெரியது. அதுவே காற்று. அதுவே ஜீவஸ்வரூபி. அதுவே உண்மையானது. சராசர மயமான இவ்வுலகம் அந்தவஸ்துதான். அதுவே எதிரில் விஸ்தாரமாக காணப்படும் ப்ரஹ்மாண்டத்திற்கு காரணமானது. அப்படிப்பட்ட அந்த வஸ்துவுக்கு நமஸ்காரம். மேலும் அந்த பரம் பொருள் பலவிதமான ப்ராணி வர்க்கங்களின் ஹ்ருதய புண்டரீகத்தில் சஞ்சரிக்கிறது. ப்ரத்யக்ஷ மாக பரமாத்மாதான் எலலாமாக இருக்கிறார் என்பதை மேல்பாகம் விளக்குகிறது. ஹே பகவானே! நீர் பலவிதமான யாக ரூபத்தில் இருக்கிறீர். நீரே தேவர்களுக்கு அன்னத்தை அளிக்கும் वषट्कार சப்தரூபமாய் இருக்கிறீர். நீரே விராட் புருஷர். நீரே ஸ்வாஹா முதலிய சப்த வடிவில் இருக்கிறீர். நீரே இந்திரன், ப்ரஹ்மா, விஷ்ணு ருத்ரன் வடிவில் இருக்கிறீர். நீரே பிரஸித்தமான ப்ரஹ்மாண்டம். நீரே நதிகளின் ஜலம். ஸமுத்ர

ஜலமும் நீரே. சூரியாதி தேஜ ஸ்ரூபியாக இருப்ப வரும் நீரே. இனிப்பு, புளிப்பு போன்ற 6 ரஸமாக இருப்பதும் நீரே. நீரே தேவர்கள் சாப்பிடும் அம்ருதம். நீரே வேதராசி. நீரே மூவுலகம். நீரே சப்த ப்ரஹ்மமான ஓங்காரமாக இருக்கிறீர்.

अनुवाक:—६९ श्रद्धायां ।

வைதிக கர்மாவில் ஆழ்ந்த நம்பிக்கை श्रद्धा எனப்படுகிறது. அப்படிப்பட்ட சிரத்தை இருக்கும் பொழுது, மிகுந்த ஆதரவுடன் சரீரத்திலுள்ள 5 வாயுக்களுள் ப்ராணவாயுவில் ருசியுள்ள, இந்த அன்னத்தை ஹோமம் செய்கிறேன். இதேபோல் அபானன், வ்யானன், உதானன், ஸமானன் என்ற வாயுக்களிலும், அன்னத்தை ஹோமம் செய் கிறேன். இந்த ஆஹுதிகளால் மோக்ஷத்தின் பொருட்டு எனது ஜீவாத்மா பரமாத்மாவினிடத் தில் ஒன்றுகக் கலக்கட்டும். அத்வைதபாவம் என்று பொருள்.

अमृतोपस्तरणमसि ஹே குடிக்கப்படுகின்ற ஜலமே! நீ, ப்ராண தேவதைக்கு கீழ் விரிப்பாக இருக் கிறாய்.

श्रद्धायां...शिवोमाविशाप्रदाहाय முன் போல வே ப்ரணாஹுதி மந்திரம் கூறப்பட்டுள்ளது. ஒரு வாக்கியம் அதிகமாக உள்ளது. அதன் பொருள் ஹோமம் செய்யப்படும் அன்ன விசேஷமே! நீ சாந்தமாக இருந்து கொண்டு, என்னிடம் ப்ரவேசிப் பாயாக. பசி தாகத்தினால் ஏற்பட்ட எரிச்சல்

நீங்கும் பொருட்டு, சாந்தமாக ப்ரவேசிப்பாயாக. ஹோம த்ரவ்யம் ப்ராண; தேவதைக்கு ஹோமம் செய்யப்பட்டதாக இருக்கட்டும்.

अमृतापिधानमसि ஹே குடிக்கப்படுகிற ஜலமே! நீ அழிவில்லாத மேல் மூடியாக இருக்கிறாய்.

अनुवाकः—७० अद्धायै ।

சாப்பிடப்பட்ட அன்னத்தை அபிமந்தரண மந்திரம். ச்ரத்தை இருக்கும் பொழுது ப்ராண வாயுவில், ஆதரவுடன் அழிவற்ற ருசியான ஹவிஸ் ஹோமம் செய்யப்பட்டது. ஹே ப்ராணாபிமானி தேவதையே! நீ மூக்கில் சஞ்சரிக்கும் வாயுவை ஹோமம் செய்த அன்னத்தால் விருத்தி செய்வாயாக. இதேபோல் மற்ற நான்கு வாயுக்களுக்கும் வளர்ச்சியை உண்டுபண்ணு என்பது பொருள்.

अनुवाकः—७१ अङ्गुष्ठमात्रः ।

பரமேச்வரஜ்ஞ தியானிக்கும் மந்திரம். ஜீவனுடைய ஹ்ருதய புண்டரீகத்தினுள் உள்ள இடைவெளி கட்டைவிரல் அளவு, அங்குள்ள புத்தியும் அதே அளவுள்ளது. மாயையின் கார்யமான புத்தியினுல் அளவுக்குட்படுத்தப்பட்ட ஜீவனும் கட்டைவிரல் அளவுதான். அந்த ஜீவன் ஞானசக்தி, க்ரியா சக்திகளால் கட்டைவிரலையும் தலையையும் ஆச்ரயித்திருக்கிறான்.

உள்ளங்காலிலிருந்து உச்சந்தலை வரை வ்யாபித் திருக்கிறான். மாயையின் மறைவு இல்லாமல் இருக்கும் ஜீவன், உலகம் முழுவதையும் நியமிக் கிறவன். ஆகையால் உலகம் முழுவதையும் சாப் பிடுகிறார். அப்படிப்பட்ட ஈச்வரன் இந்த ஆஹாரத் தால் திருப்தியடைகிறார்.

अनुवाकः—७२ वाङ्म आसन् ।

மூன் அனுவாகத்தில், சாப்பிட்டவுடன் பரமேச்வரரை தியானிக்கும் மந்திரம் சொல்லப் பட்டது. இந்த மந்திரம் சாப்பிட்ட பிறகு எல்லா அங்கங்களும் ஸ்வஸ்தமாக இருக்கிறது என்பதை கூறுகின்றது. தினமும் சாப்பிட்ட பிறகு இந்த மந்திரத்தின் பொருளை மனதால் உணர்ந்து, சொல்வது அன்னம் அளித்த பரமேச்வரனுக்கு நன்றி தெரிவித்ததாக ஆகும். இதன் பொருள்:- அறுசுவை உணவு அருந்திய எனது வாக் இந்திரியம் வாயிலும், ப்ராணன் மூக்கிலும், பார்க்கும் சக்தி கண்களிலும், கேட்கும் சக்தி காது களிலும், கைகளில் பலமும், தொடைகளில் நடக் கும் சக்தியும் ஏற்பட்டுள்ளது.

எல்லா உடலுறுப்புகளும் ஸ்வஸ்தமாக இருக் கின்றன. எனது சூக்ஷ்ம சரீரத்துடன் இந்த பூத சரீரமும் ஸ்வஸ்தமாக ஆயிற்று. ஹே பகவானே! நீ அளித்த அன்னத்தை உண்டு நான் திருப்தியுள்ளவனாக ஆனேன். அதற்காக

உனக்கு எனது நமஸ்காரம். இவ்வாறு குடும்பத்துடன் எனக்கு திருப்தியை உண்டுபண்ணு, மரணம் வரை குடும்பத்தோடு சேர்ந்து என்னை ஹிம்ஸிக்காதே. எப்பொழுதும் எனக்கு ஸுகத்தையே கொடு.

अनुवाक:—७३ वय: सुपर्णा: ।

தன ப்ராப்திக்குரிய மந்திரம் இது. ஒரு சமயம் ஸப்தரிஷிகள், எல்லாப் பிராணிகளுக்கும் ப்ரியத்தையே செய்கின்றவர்களாகவும், தங்க இறக்கையுள்ள பக்ஷிகள் போல், துரித நடையையுள்ளவர்களாகவும் யாசிக்கும் எண்ணத்துடன் அஞ்ஞானம் நீங்கிய இந்திரனிடம் சென்றார்கள். அவர்கள், ஹே இந்திரனே! எங்களை திவ்யமான பட்டு வஸ்திரங்களால் போர்த்திவிடு. உத்தமமான அழகான பொருளைக் காண்பித்தும், கொடுத்தும் எங்கள் கண்களை பூர்த்தி செய், நிரப்பு. எல்லா பாபங்களிலிருந்தும் எங்களை விடுவிப்பாயாக. எங்களை அனேக ரத்னம், தனம் இவைகளை உடையவர்களாக செய் என்று கேட்டனர். ஷி வரங்களைப் பெற்றுக் கொண்ட ரிஷிகள், பூமிக்கு வந்து தனது ஆச்ரமத்தில் சௌக்கியமாக இருந்தனர் என்பது கருத்து.

अनुवाक:—७४ प्राणावा ।

ஹே ஹ்ருதயத்திலுள்ள அஹங்காரமே! நீ வாயுக்களாகவும், இந்திரியங்களாகவும் இருக்

கின்ற ப்ராணன்களை சேர்க்கிறவன். அப்படிப் பட்ட நீ ருத்ரன். உனக்கு அபிமானி தேவதையான துக்கத்தை போக்குபவனுக ஆகி, என் சரீரத்தில் ப்ரவேசிப்பாயாக. நான் சாப்பிட்ட அன்னத்தினுல் என்னை விருத்தி செய்வாயாக.

अनुवाकः—७५ नमो रुद्राय ।

பார்வதியின் பதியான சிவனுக்கு நமஸ்காரம். விஷ்ணுவுக்கு நமஸ்காரம். ஹே ருத்ரனே! ஹே விஷ்ணுவே! நீங்கள் என்னை ம்ருத்யுவிடமிருந்து காப்பாற்றுவீர்களாக.

अनुवाकः—७६ त्वमग्ने ।

ஹே அக்னியே! சிறந்த காந்தியுடன் இருந்து கொண்டு, எனது ம்ருத்யுவை தடுத்துவிடு. நீ, பக்தர்களின் பாபத்தை சீக்கிரமாக போக்குவாயாக. நீ, ஜலத்திற்கு மேலே (ஜலத்துளி) கணமாகவும் காரணமாகவும் இருக்கிறுய். மேலும் நீ, கல் வடிவி லுள்ள மேருவின் மேல் இருக்கிறுய். நீ, நந்தவனங் களில் இருக்கிறுய். அதுபோல் நீ, ஸோமலதை, ஓஷதிகளிலும் இருக்கிறுய். ஹே மனிதர்களுக்கு அதிபதியான அக்னியே! நீ, யஜமானர்களுக்குள் பூஜிக்கத் தகுந்தவனுக இருக்கிறுய். நீ, லௌகி காகனி, வைதிகாக்னி, ச்மசானாக்னி என்ற எந்த உருவத்தில் இருந்தாலும் சுத்தமானவனே.

இப்படிப்பட்ட நீ, என்ஜ ம்ருத்யுவிடமிருந்து காப்பாற்று.

अनुवाकः—७७ शिवेव मे ।

ஹே யக்ஞஸ்வரூபியான பரமாத்மாவே! உமக்கு நமஸ்காரம். உனக்கு சமீபத்தில் நமஸ்கரிக்கிறேன். மறுபடியும் மறுபடியும் நமஸ்கரிக்கிறேன். நீ, மங்களங்களை கொடுத்து கொண்டு எனது க்ருஹத்தில் இருப்பாயாக. இவ்வுலக ஸுகத்தை கொடுப்பவனுகவும், சிறந்த ஐச்வர்யத்தை கொடுப்பவனுகவும், என் வீட்டில் இருப்பாயாக. ப்ரஹ்மவர்ச்சஸ்ஸை அளிப்பவனுகவும் இருப்பாயாக. உனது திருப்திக்காக என்னுல் செய்யப்பட்ட யக்ஞத்தின் ஸம்ருத்திக்குப் பிறகு, அதனுடைய பலஜ கொடுப்பதற்காக என் சமீபத்தில் சித்த சலனமில்லாமல் நிலையாக இருப்பாயாக.

अनुवाकः—७८ सत्यं परम् ।

1. இதுவரை கர்ம காண்டத்தைப் பற்றி கூறப்பட்டது. அனுஷ்டானம் மூலம் சித்த சுத்தியை அடைந்தவனுகை, மோக்ஷோபாயமாக ஸன்யாஸத்தைப் பற்றி கூறப்படுகிறது. ஸன்யாஸம் சிறந்தது என்று சொல்வதற்காக ஸத்யம் முதலிய சிறந்த ஸாதனங்கள் இதில் கூறப்படுகின்றன. கண்ணுல் பார்த்த வஸ்துவை உள்ளது உள்ளபடி

சொல்லுதல் ஸத்யமாகும். அது புருஷார்த்த ஸாதனங்களுள் சிறந்தது. பரப்ரஹ்மம் ஸத்ய மானது. உயிருள்ளவரை உண்மை பேசுவதால், ஸ்வர்க்கத்திலிருந்து ஒரு பொழுதும் நழுவுவ தில்லை. ஸாதுக்களான ரிஷிகள் சம்பந்தப்பட்டது உண்மை. ஆகையால் ஸத்யம் பேசுவதுதான் மோக்ஷ ஸாதனம் என கருதி, சில மஹான்கள் ஸத்யத்தில் விளையாடுகிறார்கள்.

2. (तपः) தபஸ் என்பது சிறந்த மோக்ஷ ஸாதன என்று சிலர் கருதுகின்றனர். பலவித தபஸ்ஸுகளுள் உபவாஸமே சிறந்த தபஸ் ஆகும். உபவாஸ ரூபமான சாந்திராயணம் போன்றவை மிகச் சிறந்த தபஸ் ஆகும். அது மிகவும் சிரமமானது. ஸஹித்துக் கொள்ள முடி யாதது. அதை அனுஷ்டிப்பது மிகவும் கடினம். ஆகையால் சிலர் சாந்திராயணம், ப்ராஜாபத்ய க்ருச்ரம் போன்ற தபஸ்ஸில் ரமிக்கிறார்கள்.

3. கண், காது, வாக்கு போன்ற வெளி இந்தி ரியங்களை அடக்குவது (दमः) தமः எனப்படுகிறது. அதுவே சிறந்த மோக்ஷஸாதனம் என எண்ணி, நைஷ்டிக ப்ரஹ்மசாரிகள் கூறுகிறார்கள். ஆகை யால் அவர்கள் எப்பொழுதும் புலனடக்கத்தில் (ரமிக்கிறார்கள்) மகிழ்கிறார்கள்.

4. மனதில் கோபம், த்வேஷம் இவைகள் ஏற்படாமல் தடுப்பது (शमः) சமः எனப்படுகிறது.

அதுவே சிறந்த மோக்ஷ ஸாதனமென்று கருதி, காட்டில் வஸிக்கும் முனிவர்கள், வானப்ரஸ்தர் கள் கருதுகிறார்கள். ஆகையால் அவர்கள் அதில் மகிழ்கிறார்கள்.

5. (दानम्) தானம் தனக்கு சொந்தமான பொருளை பிறருக்கு சொந்தமாக்குவது தானமாகும். அதுவே சிறந்த மோக்ஷ ஸாதனம் என்று எல்லா மனிதர்களும் புகழ்கிறார்கள். தானத்தைக் காட்டி லும் அனுஷ்டிக்க முடியாதது ஒன்றுமில்லை என்ப தால், சான்றோர்கள் கோதானம், பூதானம் போன்ற தானங்களை செய்து மகிழ்கிறார்கள்.

6. குளம் வெட்டுதல் போன்ற தர்மம் மிகச் சிறந்தது என்று சிலர் எண்ணுகிறார்கள். அந்த தர்மம் மனிதர்களுக்கும் மற்றும் ப்ராணி வர்க்கங் களுக்கும் உபயோகப்படுகிறது. இதைக் காட்டி லும் மிக பெரிய தர்ம காரியம் வேறொன்றுமில்லை என்ற காரணத்தால் வசதிபடைத்த ப்ரபுக்கள் இந்த தர்மத்தில் ஈடுபட்டு மகிழ்கிறார்கள்.

7. ஸத்புத்ரர்களைப் பெறுவது சிறந்தது என பல பேர் (மனிதர், ப்ராணிகள்) எண்ணுகிறார்கள். ஆகையால் குழந்தைகள் நிறைய பிறக்கின்றன. அதன் காரணமாக, பலர் குழந்தை பெறுவதில் மகிழ்கிறார்கள்.

8. கார்ஹபத்யம் முதலிய அக்னிகள் மோக்ஷ ஸாதனமென்று கருதி, க்ருஹஸ்தர்கள் (गार्ह)

ஆதானம் என்ற கர்மாவை செய்து அக்னியை அடைகிறார்கள்.

9. அக்னி ஹோத்ராநுஷ்டானம், மோக்ஷ ஸாதனம் என்று வேதமறிந்தவன் கருதுவதால், சிலர் அக்னிஹோத்ராநுஷ்டானத்தில் மகிழ் கிறார்கள்.

10. மற்றும் வேதமறிந்த சிலர் தர்ச பூர்ணமாஸேஷ்டி, ஸோமயாகம் போன்ற யக்ஞங் கள், மோக்ஷஸாதனம் எனக் கருதுகிறார்கள். தேவர்கள் யக்ஞத்தினால்தான் ஸ்வர்கத்தை அடைந்தார்கள். ஆகையால் வைதிகர்கள் யக்ஞத் தில் மகிழ்கிறார்கள்.

11. மானஸிக த்யானம், உபாஸனம் எனப் படுகிறது. அது சிறந்த மோக்ஷ ஸாதனம் என்று ஞானிகள் நினைக்கிறார்கள். ஆகையால் ஞானிகள் உபாஸனையில் மகிழ்கிறார்கள்.

12. அக்னிஹோத்ராதி கர்மாக்களை தியாகம் செய்தல் உத்தமமான மோக்ஷஸாதனம் என்று ஹிரண்யகர்ப்ப ப்ரஹ்மா கருதுகிறார். அவர் பரமாத்ம ஸ்வரூப சரீரமுள்ளவராக இருந்தாலும், பரமாத்மாதான். அவருக்கு (பரமாத்மாவுக்கு) ஸமமான ஞானமுடையவர். ஸத்யம், தபஸ் முதலியவை எல்லாம் இதைக் காட்டிலும் மட்ட

மானது. ஸன்யாஸம்தான் எல்லாவற்றிலும் சிறந்தது. உத்தமமான மோக்ஷ ஸாதனம். இவ்வாறு எவன் அறிகிறானோ அவனுக்கு உபநிஷத் ரஹஸ்யமாகத் தெரியவரும்.

अनुवाकः—७९ प्राजापत्यः ।

இதில் மோக்ஷத்தை அடைய ஸாதனங்களின் வரிசை சொல்லப்படுகிறது. கடைசியில் ஸன்யாஸத்தின் சிறப்பு சொல்லப்படுகிறது.

ப்ரஜாபதிக்கும் ஸுபர்ணை என்பவளுக்கும் புத்ரரான ஆருணி என்பவர், தந்தையான ப்ரஜாபதியிடம், மோக்ஷ ஸாதனங்களுள் சிறந்தது எது? என்று கேட்டான். அதற்கு ப்ரஜாபதி, ஆருணிக்கு கீழ்க்கண்டவாறு பதில் கூறினார்.

1. ஸத்யம் (உண்மை) சிறந்த மோக்ஷ ஸாதனமாகும். முன் பிறவியில் ஸத்யத்தை கடைபிடித்த மனிதன், அதன் பலனாக வாயு தேவனாக ஆகி, அந்தரிக்ஷத்தில் சஞ்சாரம் செய்கிறான். அதே போல், முன் பிறவியில் ஸத்யத்தை பரிபாலித்து வந்ததால்தான், ஆகாயத்தில் சூரியனாக பிரகாசிக்கிறான். உண்மை பேசுவதால்தான் வாக்கிற்கு நல்ல பிரதிஷ்டை ஏற்பட்டது. ஸ்வர்க்காதிகளும் உண்மையில்தான் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் சிலர் ஸத்யம் சிறந்த மோக்ஷ ஸாதனம் என்கிறார்கள்.

2. ஆருணிக்கு திருப்தி ஏற்படாததால் அடுத்த ஸாதனத்தை கூறுகிறார். இந்திராதி தேவர்கள் முன் பிறவியில் உபவாசம் போன்ற தபஸ் செய்தனர். அதன் பலனாக தேவ பாவத்தை அடைந்தனர். ரிஷிகளும் தபஸ்ஸினால்தான் ஸ்வர்க்கத்தை அடைந்தனர். அபிசார ரூபமான தபஸ்ஸினால், நாங்கள் சத்ருக்களையும் எங்களது திரவ்ய லாபத்தை தடுப்பவர்களையும் வென்றோம். எல்லாம் தபஸ்ஸில் ப்ரதிஷ்டை அடைந்துள்ளது. ஆகையால் தபஸ் சிறந்தது எனக் கூறுகிறார்கள்.

3. (दमः) என்பது கண், காது போன்ற புலன்களை அடக்குதல் புலனடக்கமுள்ளவர்கள், புலனடக்கத்தால் தங்கள் பாபங்களை அழிக்கிறார்கள். நைஷ்டிக ப்ரஹ்மசாரிகள் புலனடக்கத்தால் ஸ்வர்க்கத்தை அடைந்தனர். புலனடக்கம் ப்ராணிகளுக்கு சுலபமாக அடைய முடியாததான ஒன்றாகும். இதில் எல்லாம் அடங்கியுள்ளது. ஆகையால் புலனடக்கத்தை சிறந்ததாகச் சொல்லுகிறார்கள்.

4. மனதிலுள்ள கோபம் முதலியவற்றை அடக்குவது (शमः) சமः எனப்படுகிறது. சாந்தமாக இருக்கின்ற பெரியோர் மங்களகரமான காரியத்தை செய்கிறார்கள். நாரதர் போன்ற முனிவர்கள் மனதைக் கட்டுப்படுத்தி ஸ்வர்க்கத்தை அடைந்தனர். ப்ராணிகளுக்கு உள் புலனடக்கம் என்பது சுலபமாக அடைய முடியாதது. இதில் தான் எல்லாம் ப்ரதிஷ்டையும் அடைந்துள்ளது

ஆகையால் இந்த உள் புலனடக்கம் சிறந்தது என்று சொல்லுகிறார்கள்.

5. கோதானம், ஹிரண்யதானம் போன்றவை யக்ஞங்களில் தக்ஷிணையாக விளங்குகிறது. ஆகையால் அந்த தானம் சிறந்தது. உலகில் கொடையாளியை படித்தவர் முதல் பாமரர் வரை ஸேவிக்கிறார்கள். படை வீரர்களுக்கு தனத்தை தானம் செய்து சத்ருக்களை அழிக்கிறார்கள். சத்ருவின் ராஜா பலவானாக இருந்தால் பொருளைக் கொடுத்து திருப்திபடுத்தி நண்பனாக ஆக்கிக் கொள்கிறார்கள். தானத்தில் எல்லாம் அடங்கியுள்ளது. ஆகையால் தானம் மிகச் சிறந்தது என்று கூறப்படுகிறது.

6. வேதங்கள், ஸ்ம்ருதிகள், புராணங்கள் இவைகளில் கூறப்பட்டுள்ள யாகம் செய்தல், குளம் வெட்டுதல் போன்ற பல தர்மங்கள் உலகில் எல்லா பிராணிகளுக்கும் ஆச்ரயமாகும். தர்மானுஷ்டானம் செய்பவனை, உலகிலுள்ள மக்கள் தர்மாதர்மத்தை தெரிந்து கொள்ள அணுகுகிறார்கள். தர்மானுஷ்டானத்தால் பாபம் நீங்குகிறது. எல்லாம் தர்மத்தில் ப்ரதிஷ்டை அடைந்துள்ளது. ஆகையால் தர்மம் எல்லாவற்றிலும் மிகச் சிறந்தது எனக் கூறுகிறார்கள்.

7. ஸத்புத்ரனைப் பெறுதல் இவ்வுலகில் சுகத்தை கொடுக்கும் புத்ரன், பௌத்ரன் என்று ஸந்ததி தொடர்வதால் பித்ருக்களின் கடன்

தீருகிறது. ஆகையால் நல்ல புத்ரனைப் பெறுதல் சிறந்தது எனக் கூறப்படுகிறது.

8. கார்ஹபத்யம் முதலிய மூன்று அக்னி களும், மூன்று வேத ஸ்வரூபம். இவைகளுக்கு யாகம் செய்வதன் மூலம், தேவபாவத்தை அடை யும் மார்க்கம் ஏற்படுகிறது. கார்ஹபத்யாகனி. ருக் வேதமாகவும், ப்ருத்வீ ரூபமாகவும், ரதந்தர ஸாம கான ரூபமாகவும் புகழப்படுகிறது தக்ஷிணாக்னி யஜுர்வேத ரூபமாகவும், அந்தரிக்ஷ லோகமாகவும் வாமதேவ்யம் என்ற ஸாமகானமாகவும் புகழப் படுகிறது. ஆஹவனீயாக்னி ஸாமவேதமாகவும் ஸ்வர்க்கலோகமாகவும், ப்ருஹத் என்ற ஸாமகான மாகவும் புகழப்படுகிறது. ஆகையால் இவைகள் சிறந்தது எனக் கூறுகிறார்கள்.

9. ஸாயங்காலம் செய்யும், காலையில் செய் யும் அக்னி ஹோத்ரானுஷ்டானம் வீட்டை வாங்கு வதற்குரிய விலையாகும். இல்லாவிடில் அக்னி, க்ருஹத்தை எரிப்பார். நன்கு செய்யப்பட்ட யாகமும், தியாகமும், ஹோமமும், ஏழு ஹவிர் யக்ஞங்களுக்கும், ஏழு ஸோம (ஸம்ஸ்தை) யாகங் களுக்கும், ஆரம்பமாகும். அக்னிஹோத்ரம் என்பது எல்லா யாகங்களுக்கும் ஆரம்பமாகும். ஸ்வர்க் கத்தை பிரகாசப்படுத்துவது அக்னி ஹோத்ரம் தான். ஆகையால் இது சிறந்தது என்கிறார்கள்,

10. மோக்ஷத்தை அடைய சிறந்த ஸாதனம் யக்ஞங்கள் தான் என்று சொல்லுகிறார்கள். தேவர் கள் யக்ஞத்தினால் தான் அஸுரர்களை அழித்தனர், யக்ஞத்தினால் சத்ருக்களும் மித்ரர்களாக ஆகிறார் கள். யக்ஞத்தில் எல்லாம் ப்ரதிஷ்டையை அடைந் துள்ளன. ஆகையால் யக்ஞத்தை மிகச்சிறந்த தாக கூறுகிறார்கள்.

11 மனதால் உபாஸிப்பது, தியானம் செய் வது, ப்ரஹ்மாவின் ஸ்தானத்தை அடைய ஸாதன மாகும். ஆகையால் அது சித்த சுத்திக்கு காரண மானது. உபாஸனை செய்யும் மனது எல்லா வற்றையும் யோகியைப் போல் நன்கு பார்க் கிறது. நிலையான மனதுடைய விச்வாமித்ரர் போன்ற ரிஷிகள், ஸங்கல்பத்தினாலேயே ப்ரஜை களை ஸ்ருஷ்டித்தார்கள். உபாஸனையில் எல்லாம் அடங்கியுள்ளது. ஆகையால் உபாஸனையை சிறந்ததாக சொல்லுகிறார்கள்.

12. ஹிரண்யகர்ப்ப ப்ரஹ்மாவை மோக்ஷ ஸாதனமாகவும், ந்யாஸமாகவும் புத்திமான்களும், ரிஷிகளும் கூறுகிறார்கள். இந்த ப்ரஹ்மா உலக வடிவமாக இருக்கிறார். மிகவும் மேலான ஸுக ஸ்வரூபீ. தானாகவே உண்டானவர். ப்ரஜைகளைக் காப்பவர். கால (நேரம்) ஸ்வரூபீ. வருஷம் என் பது காலத்தின் ஓர் அளவாகும். அது ஆதித்ய ரூபமாகும். ஆதித்ய மண்டலத்தில் காணப்படும்

புருஷன் ஹிரண்யகர்ப்ப ப்ரஹ்மாவின் ரூபமாகும். அவரே உலகின் காரணமான பரம் பொருளான பரமாத்மா. ஆதித்ய மண்டலத்தின் மூலமாக, உலகம் இயங்குகிறது, என்பதை விளக்குகிறது வேதம். சூரியன் தனது உஷ்ண கிரணங்களால் ஜலத்தை ஆவியாக்கி மேகமாக மாற்றி மழை பொழிகிறார். மழை நீரால் நெல் முதலிய பயிர் களும, மரங்களும, செடி கொடிகளும் உண்டா கின்றன- விருத்தியடைகின்றன.

நெல் பயிர்களின் மூலம், உணவு உண்டா கிறது. அன்னத்தால் ப்ராணன் நிலைக்கிறது. அதன் மூலம் சரீரத்திற்கு பலம் ஏற்படுகிறது. அந்த பலத்தினால சாந்திராயணம் முதலிய தபஸ் அனுஷ்டிக்கப்படுகிறது. தபஸினால் தத்வ ஞானத்தில் ச்ரத்தை ஏற்படுகிறது. அதனால் குருவின உபதேசத்தை தரிக்கும சக்தி (மேதா விலாஸம) ஏற்படுகிறது. மேதையினால புத்தி ஏற் படுகிறது. புத்தியினால் அந்த: கரணம எனப் படும மனது ஏறபடுகிறது. மானஸீக உபாஸனை யால் சாந்தி ஏற்படுகிறது. சாந்தியினால் தத்துவ ஸம்பந்தமான ஞானம் ஏற்படுகிறது. அதனால் தூக்கம் குறுக்கிட்டாலும், தத்துவ ஸ்ம்ருதி ஏற்படுகிறது. அந்த ஸ்மருதியால நிரந்தரமாக ஸ்மரணம ஏற்படுகிறது. அந்த ஸ்மரணத்தினால் விசேஷ ஞானம் ஏற்படுகிறது. அந்த விசேஷ ஞானத்தால பரமாத்ம ஸாக்ஷாத்காரம ஏற்படு கிறது.

முன்புசொன்ன அன்ன பலத்தால், பரம்பரையா பரமாத்மானுபவம் ஏற்படுவதால், அப்படிப்பட்ட அன்னத்தை தானம் செய்பவன், மேற் சொல்லப் பட்ட எல்லா விஷயங்களையும் அளித்தவனாக ஆகி ருன். இவ்வாறு அன்னத்தின் மூலம் ப்ராணன் ஏற்படுவது முதலிய ஸாதனங்கள் உண்டாகி, கடைசியில் விசேஷ ஞானம் ஏற்பட்டு, ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படுகிறது. வேதத்திற்கு காரணமான பரமாத்மாவாக ஆகிருன் எனப்படு கிறது.

இவ்வாறு, ஸன்யாஸத்தினுல் ஏற்படும் ஞானத்தின் பெருமை கூறப்படுகிறது. ஸர்வாத் மாவாக இருக்கும் புருஷன், 5 முறைகளால் 25 வஸ்து ஸ்வரூபமாக ஆகிருன்.

1. சப்தம், ரூபம், ரஸம், வாசனை, ஸ்பர்சம் (தொடு உணர்ச்சி). 2. பஞ்சபூதங்கள். 3. ஐந்து ஞானேந்திரியங்கள். 4. ஐந்து கர்மேந்திரியங்கள். 5. ப்ராணாதி பஞ்சகம் என 25 வஸ்துக்கள். பர ப்ரஹ்மம் என்ற ஸூத்ரத்தால். இந்த ஜகத் கட்டப் பட்டிருக்கிறது. ஞானி பரமாத்மாவாக ஆவதால் ஜகத் ரூபமாக ஆகிருன் என்பது தெரிகிறது. அவனும் அக்ஞானியைப் போல் சரீரியாக தெரி வதால், சரீரி அல்ல என்ற சந்தேகம் விளக்கப் படுகிறது. அவன் வேதாந்த விசாரத்தால் ஸர்வ வஸ்து ரூபமாக தீர்மானமானவன். அவனது பார்வையில் உலகம் தனி. அவன் தனி என்பது

கிடையாது குருவின் உபதேசம் என்ற செல்வம் அவனிடம் உள்ளது.

ஞானத்திற்கு காரணமான ச்ரத்தையின் ஸ்வரூபமாக ஆகிவிடுகிறுன். பரமாத்மாவாக ஆகி விடுவதால், அவனே ஸத்ய ஸ்வரூபம். ஸ்வயம் ப்ரகாசன். அஞ்ஞானத்திற்கு அப்பாற்பட்டவன்.

ஹே ஆருணியே! நீ, ஹ்ருதயபுண்டரீகத்தி லுள்ள பரமாத்ம ஸ்வரூபத்தை ஸன்யாஸம் என்ற ஸாதனத்தாலும், ஹ்ருதயத்தாலும் நன்கு அறிந்து ஞானியாக ஆகி ம்ருத்யு பயத்தை மறுபடியும் அடைய மாட்டாய். இந்த சரீர நாசத்தோடு ம்ருத்யு பயம் நீங்குகிறது. ஆகையால் ஸத்யம் முதலிய மோக்ஷ ஸாதனங்களுள் ஸன்யாஸமே மிகச் சிறந்தது.

ஸன்யாஸத்திற்குப் பிறகு ப்ரணவோபாஸனம் செய்து, ஆத்ம ஸமாதியை அடையும்பொழுது, ஏற்படும் இடையூறுகள் நீங்க, அந்தர்யாமியான ஆத்ம ஸ்வரூபமே எல்லாவற்றிற்கும் காரணம் என துதிக்கப்படுகிறது. ஹே அந்தர்யாமியான பரமாத்மாவே! வஸ்து தத்வத்தை உபதேசிப்பவ ராக நீர் இருக்கிறீர். ஹிரண்யகர்ப்பர், விராட் புருஷன் முதலிய ரூபத்திலும் இருக்கிறீர். வாயு ஸ்வரூபத்தில் ஜீவாத்மாவை நீர் சேர்த்து வைப் பவர். ப்ரஹ்மாண்டத்தை தரிக்கும் வாயு ரூபமாக இருக்கிறீர். இங்குள்ள அக்னிக்கும், சூரியன்,

சந்திரன் இவர்களுக்கும் தேஜஸ்ஸை-பிரகாசத்தை அளிப்பவர் நீர்தான். யாகங்களில் ஸோம ரஸ ரூபமாக இருப்பவரும் நீரே. அப்படிப்பட்ட அந்தர் யாமியான உன்னை, ஜ்யோதி ஸ்வரூபமான ப்ரஹ்ம தத்வஞானம் தெளிவாக ஏற்பட ஸ்தோத்திரம் செய்கிறேன். ஸன்யாஸிகள் எப்பொழுதும் "ஓம்" காரத்தினுல் ஆத்ம ஸ்வரூபானுஸந்தானம் செய்ய வேண்டும்.

இந்த ப்ரணவ ஸ்வரூபம் உபநிஷத்துக்களின் ஸார ஸ்வரூபம். இந்திராதி தேவர்களுக்கு ரஹஸ்யமானது. சமதமாதிகள் இல்லாவிடில் இந்த உபாஸனை செய்ய முடியாது.

எவன் ஸன்யாஸத்திற்கு பிறகு இவ்வாறு ப்ரஹ்ம தத்துவத்தை அறிகிருனே, அவன்தான் ப்ரஹ்மத்தின் பெருமையை—மஹிமையை அறிகிருன். அறிந்து ஜீவன் முக்தனுக ஆகிருன். ப்ராரப்த கர்மாவின் பலன் முடியும் பொழுது சரீரம் அழியும்.

அவித்யை அழிந்ததால், தத்வஞானம் ஏற்பட்டதால், முக்ய ப்ரஹ்மத்தின் மஹிமையை அடைகிருன். விதேஹ முக்தி பெறுகிருன். இவ்வாறு உபநிஷத் கூறுகிறது.

अनुवाकः—८० तस्यैवं विदुषः ।

இதில் முன்பு சொன்ன ஜீவன் முக்தனான ஞானிக்கு, யாகாதிகள் கிடையாது என்று கூறுகிறது. சரீரம் இருக்கும் வரை அவன் செய்யும் லௌகிக காரியங்கள் யாகஸ்வரூபம் என வர்ணிக்கப்படுகிறது. ஞானயோகியின் உறுப்புகளே யக்ஞஸாதன த்ரவ்யங்கள் என வர்ணிக்கப்படுகிறது.

ஷி ஞானியின் யாகத்தில், ஸாக்ஷி சைதன்யம் யஜமானனுக்கு ஒப்பாகும். அவனது உபாஸனையின் ச்ரத்தையே பத்னியாவாள். அவனது சரீரம் இத்ம காஷ்டங்களாகும். மார்பு யாக வேதியாகும். ரோமங்கள் தர்ப்பங்களாகும், சிகைதான் வேதம் என்ற யக்ஞஸாதனமாகும், ஹ்ருதயம் யூபமாகும். காமம் ஆஜ்யமாகும். அவனது கோபம் பசுவாகும். தபஸ் அக்னியாகும். புலனடக்கம் இந்திரியங்களை அடக்குதலாகும், எல்லா இந்திரியங்களின் ஒடுங்குதல் தக்ஷிணையாகும். வாக்கு ஹோதா என்ற ருத்விக்கு ஆவார். ப்ராணன்தான் உத்காதா என்ற ருத்விக் கண்தான் அத்வர்யு என்ற ருத்விக். மனது ப்ரஹ்மா என்ற ருத்விக். காது ஆக்னீத்ரன் என்ற ருத்விக். இவைகள் ஸோமயாக சம்பந்தமாகக் கூறப்படுகின்றன.

எவ்வளவு காலம் ஞானி சாப்பாடு இல்லாமல் இருக்கிறாரோ அதுவே யாகதீக்ஷை ஆகும். அவன் சாப்பிடுவதுதான் ஹவிஸ் ஆகும்.

அவன் பருகுவது ஸோம ரஸ பானமாகும். அவனது விளையாட்டு உபஸத் யாகமாகும். உட் கார்ந்து எழுந்திருத்தல் ப்ரவர்க்ய யாகம். அவனது வாய் ஆஹவனீயாக்னியாகும். பூர்புவஸ்ஸுவ: என்பவை ஆஹுதியாகும். அவனது விசேஷ ஞானம் ஹோமம் செய்வதாகும். காலையிலும், மாலையிலும் ஆஹாரமே ஸமித் ஆகும். காலை, நடுப்பகல், மாலை ஆகிய மூன்றும் மூன்று ஸவன. யாகங்களாகும்.. பகலும், இரவும் தர்சபூர்ணமா ஸேஷ்டிகளாகும். பக்ஷங்கள், மாஸங்கள் இரண்டும் சாதுர்மாஸ்ய யாகங்கள். 6 ருதுக் களும், பசுபந்த யாகங்கள், 60 ஸம்வத்ஸரம் முதலியன நிறைய ஸுத்யைகள் கொண்ட யாகங்கள்.

இந்த யாகத்திற்கு ஸர்வஸ்வம் தக்ஷிணை. அஹோராத்ரம் முதல் 60 வருடங்கள் முடிய காலத்தின் மூலம் விளக்கக் கூடிய யோகிகளின் ஆயுஸ் தக்ஷிணை என்பது கருத்து. இது ஒரு ஸத்ர யாகமாகும். மரணம்தான் இதற்கு அவப்ருதம் என்ற கர்மா.

உபாஸனை செய்யும் யோகியின் க்ரம முக்தி விளக்கப்படுகிறது. ஏதத்வை (एतद्वै) என்ற பாகத் தால் உபாஸனை செய்யும் யோகியின் இறப்பு வரை, அன்றுட வாழ்க்கையே, வேதோக்த அக்னி ஹோத்ரம் தொடங்கி, ஸஹஸ்ர ஸம்வத்ஸரம் வரையிலுள்ள கர்மாவாகும் என்று சொல்லப்

படுகிறது. அந்த உபாஸகன் உத்திராயணத்தில் மரணமடைந்தால் இந்திராதி தேவர்களின் ஐச்வரியத்தை அடைந்து, அதற்கு மேல் சூரிய பகவானின் ஸாயுஜ்யத்தை அடைகிறான்.

எந்த உபாஸகன் தக்ஷிணாயனத்தில் மரணத்தை அடைகிறானோ, அவன் அக்னிஷ்வாத்தர் போன்ற பித்ருக்களின் ஐச்வர்யத்தை அடைந்து, சந்திரனுடைய ஸாயுஜ்யத்தை அடைகிறான். இவ்வாறு சூரியன், சந்திரன் இவர்களின் ஐச்வர்யத்தை அனுபவித்த ப்ராஹ்மணன், ஸகுண ப்ரஹ்மமான ஹிரண்யகர்ப்பரையும், அங்கு வஸிக்கும் உபதேசம் செய்யும் மஹான்களையும் உபாஸித்து ஹிரண்யகர்ப்ப ஸாக்ஷாத்காரத்தை அடைகிறான். பிறகு ஹிரண்யகர்ப்ப லோகத்திற்கு சென்று அங்கு ஹிரண்யகர்ப்ப ஐச்வர்யத்தை அடைகிறான். அங்கு ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படுகிறது. அந்த ஞானத்தால் ப்ரஹ்மலோகம் அழிந்த பிறகு, (सत्यं ज्ञानं अनन्तं) ஸத்யம், ஞானம், அனந்தம் என்று சொல்லப்படுகின்ற பரப்ரஹ்மத்தின் மஹிமையை அடைகிறான். ஜீவப்ரஹ்ம ஐக்யம் ஏற்பட்டு விடுகிறது. பரமாத்மாவுடன் ஒன்றாகி விடுகிறான் என உபநிஷத் கூறுகிறது.

இத்துடன் பத்தாவது ப்ரசனம் முடிவடைகிறது.

சுபம்

பிழைத் திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
2	6	அந்த	अन्तः
11	13	मृत्तिके हनं	मृत्तिके हन
15	4	வ்ருத்தா ஸுகரணக்	வ்ருத்தாஸுரணக்
15	17	प्रमुयच्यते	प्रमुच्यते
23	1	மூவுளக	மூவுலக
42	15	यस्यैवं	यस्यवं
52	13	அர்க்த	அர்த்த
64	11	हरग्	हरिं
69	21	कामोऽकर्षीत्	कामोऽकार्षीत्
70	4	செய்விக்கிருள்	செய்விக்கிருன்
70	8	मन्युरकार्षित्	मन्युरकार्षीत्
70	14	तिलाञ्जुहोमि	तिलाञ्जुहोमि
75	21	வைராக்ய முள்யவனுக	வைராக்ய முள்ளவனுக
80	16	नकुलमात्रः	नकुलमात्रः

With Best Compliments From :

VIVEK AGENCIES

133, ROYAPETTAH HIGH ROAD,
CHENNAI - 600 004.

Authorised Dealers for :

SUMEET DOMESTIC MIXER

and

SUMEET PRODUCTS

Phone : 842730